119946

78

# THE GREAT MEN OF FOREIGN LANDS

S. S. ARUNAGIRINATHAR

(Tamil Pandit T. M. T. T. High School, Madras)



27 APR 1929
MADRAS

MADRAS:
THEENATHAYALU & CO.,

Rights Reserved] [Price 12 Annas

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
April மாதம் வருடம்
செப்பனிட்டு முடித்த
April மாதம் வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

# அயல்நாட்டுப் பெரியோர்

578
3632
920

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்
உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர்
எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார்
எழுதியது

OFFICE OF ... MADRAS
No.
27 APR 1929

தீனதயாளு அண்டு கம்பெனியார்
176, தங்கசாலை வீதி, சென்னை.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [இதன் விலை அணா 12

N29

11946

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
27 APR 1929
MADRAS

# FOREWORD

I have great pleasure in introducing to the Tamil reading public Mr. S. S. Arunagirinathar's "The Great Men of Foreign Lands." The author is too popular in the Tamil literary world to need introduction. There is no type of Tamil literature which he has not distinguished himself in, and it is quite appropriate that he should be chosen to inaugurate a 'Foreign Men of Letters Series' in our vernacular.

This book contains the biographies of four great men of letters, *viz.*, Sir Walter Scott, John Milton, Thomas Carlyle, and Hans Andersen, and is written in a chaste and flowing style, suitable for young folk. The biographies, though short, contain many interesting details, and present the lives of these famous authors in their true perspective. Incidentially, the author has taken care to draw the attention of his readers to the most noteworthy traits in the characters of his heroes. This feature, I need hardly mention, adds considerably to the moral value of the book, and is sure to make it a solace and an inspiration to old and young alike.

Muthialpet High School,
*Madras. 4th March, 1929.*

**M. Shunmukhasundara Mudaliar, M.A., L.T.**

# ஆக்கியோன் முன்னுரை

தமிழ்நலங் கருதும் பெரியீர்!

இப்புத்தகத்தை நமது மக்களின் நலங்கருதி எழுதியுள்ளேன். இவ்வாறு எழுதுவதற்கு நான் எடுத்துக்கொண்ட சிரமம் அதிகமாகும். இவ்விஷயம் ஒருமுறை இப்புத்தகத்தை ஊன்றிப் படிப்பவர்களுக்கு விளங்காமற் போகாது. இத்தகைய புத்தகங்களால் தமிழ் மக்களுக்குப் பெரும்பயன் விளையுமென்பது பல்லோர் கொண்டுள்ள கருத்தாகும். என்னால் எழுதப்படும் புத்தகங்களை மாணவர்களுக்கு உதவி மகிழும் வித்தியா விசாரணைச் சங்கத்தாரும், என் சகோதரத் தமிழ் ஆசிரியர்களும் இப்புத்தகத்தையும் ஏற்று மாணவர்களுக்கு அளிக்க முன்வருவார்கள் என்னும் உறுதிப்பாடு எனக்கு உண்டு. அப்பெரியார்களுக்கு என் 'வந்தனம்' உரியதாகுக.

இப்புத்தகத்திற்கு அங்கிலத்தில் ஒரு முன்னுரை வரைந்தளித்தவரும், என்பால் என்றும் நிலைத்த அன்பினையுடையவருமாகிய திருமிகு M. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களுக்கும், இப்புத்தகம் அச்சாகும்போது உடனிருந்து உதவிய தமிழ்ப் புலவர் திருவாளர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களுக்கு என் வந்தனம் உரியதாகும்.

இத்தகைய புத்தகங்களை வெளியிடுவதில் பேரூக்கங் கொண்டுள்ள தீனதயாளு அண்டு கம்பெனியாரின் செய்கை போற்றற்குரியதே. அவர்கள் ஊக்கம் சிறப்புறுக.

எஸ். எஸ். அருணகிரிநாதன்

# உள்ளுறை


| பகுதி | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | சர் வால்ட்டர் ஸ்காட் ... ... | 1 |
| 2. | ஜான் மில்ட்டன் ... ... | 36 |
| 3. | தாமஸ் கார்லயில் ... ... | 50 |
| 4. | ஆன்ஸ் ஆண்டர்சன் ... ... | 80 |



OFFICE OF THE ... MADRAS
27 APR 1929

# அயல்நாட்டுப் பெரியோர்

## முதற் பகுதி

### சர் வால்ட்டர் ஸ்காட்

#### இளமைப் பருவம்

ஆங்கிலமொழியில் வசன நடை யெழுதுவதில் கைதேர்ந்தவரான சர் வால்ட்டர் ஸ்காட் என்னும் பெருமகனார், ஸ்காட்லந்து தேசத்திலுள்ள எடின்புரோ நகரத்தில், ஆயிரத்து எழுநூற்று எழுபத்தோராவது வருடம் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம்தேதி பிறந்தார். அவர் பிறந்ததுமுதல் ஒன்றரை வயதுவரையில் திடமுள்ள குழந்தையாகவே யிருந்தார். அவருக்கு ஒன்றரை வயதான பிறகு, பல்முளைக்க ஆரம்பித்த போது, அவர் கொடிய காய்ச்சலினால் பீடிக்கப்பட்டார். அந்தக் காய்ச்சல், அவரைப் பலநாள் வரையில் துன்பப் படுத்திக் கொண்டிருந்து, பின்னர் அவரை விட்டு ஒழிந்தது. அதனால் அவருக்கு உண்டான நன்மை ஒன்று மில்லை. காய்ச்சல் ஒழிந்தும் அவருக்குக் கஷ்டமே உண்டாயிற்று. அந்தோ! காய்ச்சல் காரணமாக அவருடைய வலதுகால் சிறிது சுவாதீனமில்லாமற் போயிற்று. அந்தக்கால் அவருக்கு அவ்வளவாகப்

பிரயோசனத்தைத் தரவில்லை. பலவிதமான மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் ஒன்றாலும் குணம் உண்டாகவேயில்லை. கிராம வாசத்தினால் அவருடைய கால் குணமடையக்கூடும் என்றெண்ணி அவர் தகப்பனார் அவரை, நாட்டுப்புறத்திலிருந்த அவருடைய பாட்டனார் வீட்டிற்கு அனுப்பினார். நாட்டுப்புறத்தில் வீசும் நல்ல காற்று அவருக்கு நன்மைசெய்யும் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஸ்காட் நாட்டுப் புறத்திலிருந்த தம் பாட்டனார் வீட்டிற்குப் போனபிறகு, அப்பாட்டனார் அவர் காலுக்குப் பலவித மருந்துக்களை உபயோகித்து வைத்தியம் செய்தார். ஸ்காட்டை வந்து பார்த்தவர் ஒவ்வொருவரும் பற்பல விதமான வைத்திய முறைகளைச் சொன்னார்கள். பழைய வைத்திய முறைகளிற் பல உபயோகப் படுத்தப்பட்டன. ஒன்றாலும் குணமேற்படவில்லை. ஆட்டின் தோலை உரித்து அப்பொழுதே இரத்தத்தோடு காலில் வைத்துக் கட்டுவதாகிய ஒரு வகை வைத்தியத்தை அப் பாட்டனார் தம் பேரனுக்குப் பலமுறை செய்து பார்த்தார். இவ்வாறு இன்னும் பல விதமான வைத்தியமுறைகளை உபயோகித்த பிறகும் குணம் சிறிதும் உண்டாகவில்லை. பாட்டனாரும் மற்றவர்களும் 'நாம் கொடுத்து வைத்தது இவ்வளவே' யென்று மனத்திருப்தி யடைய வேண்டியவர்களானார்கள். பிற்காலத்தில் பெரும் புகழையடையவிருக்கும் குழந்தையின் நிலை இவ்வாறாயிற்று.

ஸ்காட்டின் பாட்டனாருடைய பசுக்களைப் பாதுகாக்கும் கிழவனொருவன் ஸ்காட்டுக்கு அன்புடைய நண்பனா யிருந்தான். அவன் தினந்தோறும் ஸ்காட்



டைத் தன் தோளின்மீது தூக்கிக்கொண்டு போய்ப் பக்கத்திலுள்ள மலைகளின் வளப்பங்களையும், மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டுமந்தைகளின் அழகையும் அவருக்குக் காட்டுவான். ஒவ்வொருநாளும் அவன் அவ்வாறு செய்யாதவரையில் ஸ்காட்டுக்குச் சந்தோஷம் உண்டாவதில்லை. ஆங்கில நாட்டுக் குழந்தைகளுக்கு இருக்கவேண்டிய இலட்சணம் முழுவதும் ஸ்காட்டினிடம் குடிகொண்டிருந்தது. பழுப்பு நிறம் வாய்ந்த அவருடைய தலைமயிரையும், நீலநிறம் வாய்ந்த கண்களையும், நிதானமுள்ள அறிவையும் கண்ட வீட்டிலுள்ள அனைவருக்கும் அவரிடத்தில் அளவுகடந்த பிரியம் உண்டாயிற்று.

மாலைக்காலத்தில் ஸ்காட்டினுடைய அத்தை ஓரிடத்தில் உட்கார்ந்து, கைராட்டினத்தில், நூல் நூற்பது வழக்கம். அப்போது அவருடைய அத்தைக் கெதிரில் ஒருசாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு அவர் பாட்டனார் ஏதாவது நல்லதொரு புஸ்தகத்தை வாய் விட்டுப் படித்துக்கொண் டிருப்பார். அவர் படிப்பதை, அவர்பாதத்தின் கீழே கவிழ்ந்து படுத்துக் கொண்டு தமது தலையை உயர்த்தி, ஸ்காட் அதிக அக்கறையோடு கேட்டுக்கொண் டிருப்பார்.

கால் தமக்குச் சிறிது சுவாதீனமில்லாமல் இருந்தும், ஸ்காட் தாம் சற்றுப்பெரியவரான பிறகு நியூபவுண்ட்லாண்டு நாயைப்பார்க்கிலும் சற்றே பெரிதாயிருக்கும் ஷெட்லாண்டு (Shetland) தேசத்துக் குதிரையின்மீது ஏறி அடிக்கடி வெளியில் உலாவச்செல்வார். அவர் சில சமயங்களில் தாமாகவே கஷ்டப்பட்டு அருகிலுள்ள பாறைகளின்மீது விநோதார்த்தமாக

ஏறுவதும் உண்டு. அவர் எப்போதும் வீட்டில் வளரும் நாய், பூனை, குதிரை, பசு முதலிய பிராணிகளிடத்தில் அதிக அன்பாயிருப்பார். தமது மட்டக் குதிரைக்குத் தமது கையினாலேயே அதனுடைய ஆகாரத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பார். அந்த மட்டக் குதிரை சில சமயங்களில் அவரைத் தொடர்ந்து அன்பு காரணமாக, வீட்டிற்குள்ளும் சென்றுவிடும்.

சிறுவயதிலேயே ஸ்காட்டுக்குத் தமது தேசத்திய பழையபாடல்களில் அதிகப் பிரியம் ஏற்பட்டிருந்தது. அவர் அந்தப் பாடல்களில் சிலவற்றைத் தமக்குத் தெரிந்தவரையில் அடிக்கடிப் பாடிக்கொண்டிருப்பார். அவர் பாட ஆரம்பித்துவிட்டால் பாட்டு முடியும் வரையில் எவரையும், குறுக்கே வேறு வார்த்தைகளைப் பேசவிடமாட்டார். சிறுவயதிலேயே எந்த விஷயத்தைப் பற்றிப் படித்தாலும் அந்த விஷயத்தில் மனத்தை ஊன்றிப் படிப்பது ஸ்காட்டின் பெருவழக்கமாயிருந்தது. அதனால் படிக்கும் விஷயங்களிலிருந்து தோன்றும் இன்பத்தை அவர் நன்றாய் அனுபவித்தார். அத்தகைய அனுபவமே பிற்காலத்தில் அவர் பெரும் புலவராய் விளங்குவதற்குக் காரணமாயிருந்தது. ஒரு முறை அவர் தம் தாயாரிடத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, கப்பல் உடைந்து தண்ணீரில் ஆழ்ந்து போகின்ற சந்தர்ப்பத்தைக் குறிக்கும் வர்ணனை ஒன்றைப் படித்தார். அப்போது அவர் தாமும் முழுகும் கப்பலில் இருப்பதாகவும், "தாமும் தண்ணீரில் முழுகப் போவதாகவும் நினைத்து ஆரவாரம் செய்தாராம். இச் சந்தர்ப்பத்திலிருந்து அவர் படிக்கும் போது கல்வி விஷயத்தில் எவ்வளவு அதிகமாக



மனதைச் செலுத்திப் படித்திருக்கிறாரென்பதைக் கவனித்துப் பாருங்கள்.

இக்காலத்தில் எத்தனை மாணவர்கள் தாங்கள் படிக்கும் விஷயத்தில் வால்டர் ஸ்காட்டைப்போல் மனதைச் செலுத்திப் படிக்கின்றார்கள்? நூறு பெயரில் அவ்வாறு படிப்பவர்கள் இருவர் இருப்பரென்பதும் சந்தேகந்தான். கற்கும் விஷயத்தில் மனம் ஈடுபடாவிட்டால் பிரயோசனம் ஒரு சிறிதும் உண்டாகாது.

ஸ்காட் பெருங்குணமும், பிறரிடத்தில் அளவு கடந்த அன்பைக் காட்டும் நேர்மையும் உடையவராயிருந்தார். அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அவருடைய ஆசிரியர் ஒருநாள் அவர் ஏதோ ஒரு குற்றம் செய்யக்கண்டார். ஆகலின், அவரை அவருடைய ஆசிரியர் தண்டித்தார். அதற்காக வால்டர் ஸ்காட் தம் ஆசிரியர்மீது இக்காலத்துப் பிள்ளைகளைப்போல் வெறுப்படைந்தாரா? இல்லை; இல்லை. வெறுப்படைவதற்குப் பதிலாகத் திருப்தியடைந்து அவர் தம் ஆசிரியரைப் பார்த்து, 'இனி நான் எவ்விதக் குற்றங்களையும் செய்யமாட்டேன். இப்போது நான் செய்த குற்றத்திற்காகத் தாங்கள் என்னைத் தண்டித்துத் திருத்தியதற்கு நான் தங்களுக்கு வந்தனமளிக்கின்றேன்' என்று வணக்கத்தோடு கூறினாராம். அவருடைய அமைதியான வார்த்தைகளைக் கேட்டவுடன் ஆசிரியர், 'இவ்வளவு அருங்குணம் வாய்ந்த இப்பிள்ளையை நாம் தண்டித்தோமே!' என்று நினைத்துக் கண்ணீர் விட்டனராம்.

பொதுவாக எவ்வித விஷயங்களிலும் வால்டர் ஸ்காட்டுக்கு அறிவு அதிகமாயிருந்ததென்றே

சொல்கின்றனர். அவர் ஆறுவயது குழந்தையாய் இருக்கும்போது, ஒருநாள் இரவில் ஒன்பது மணிக்கு வழக்கம்போல் தமது படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார். அப்போது வேலைக்காரர்களில் ஒருவன் மற்றொருவனுக்குப் பிசாசுக்கதை ஒன்றைச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் சொல்லுகின்ற வார்த்தைகள் யாவும் வால்டருக்குக் கேட்டன. வால்டருக்கு எந்தக் கதையானாலும் அதைக் கேட்பதற்கு இஷ்டந்தான். ஆனால், அப்போது கதை கேட்கத் தொடங்கினால் தூக்கம் கெடுமென்றும்; தூக்கம் கெடுமானால் தேகம் கெடுமென்றும், தேகம் கெடுமானால் பிறகு எந்தக் காரியத்தையும் செய்யமுடியாதென்றும் நினைத்து, வால்டர் வேலைக்காரன் வார்த்தைகள் ஒன்றும் தம் காதில் விழாதபடி, தம் தலையை இரண்டு தலையணைகளுக்கு இடையில் செருகிக் கொண்டார் என்றுசொல்கின்றனர். இச்செய்கை, அப்போது அவருக்கிருந்த வயதை நோக்குகையில், அறிவுள்ளதென்றே சொல்லலாமன்றோ? உண்மையில் அவரிடம் குடிகொண்டிருந்த இத்தகைய அறிவே, பிற்காலத்தில், வளர்ந்தோங்கி அவர் புகழ் நாடெங்கும் பாவி நிற்பதற்குக் காரணமாயிருந்தது.

## பள்ளிக்கூட வாழ்க்கை

வால்டர் அறிவும் தேகமும் ஒருங்கே வளரப்பெற்று எட்டுவயதுள்ளவரானார். அப்போது அவருடைய பெரியோர் அவரைப் பாடசாலைக்கு அனுப்பக் கருதினர். இளமையிற் கற்றல் எளிதன்றோ? அதனால் அவரை எடின்புரோ உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். அறிவு நிரம்பியவராகிய *வால்டர்



பாடசாலையில் எவ்வாறிருந்தார் என்பதைக் கவனிக்கும்போது நமக்கு ஆச்சரியமுண்டாகின்றது. பாடசாலையில் கற்பதில், அவர் மிகவும் ஒடுங்கற்றவராவேயிருந்தார்.

பல சமயங்களில் வால்டர் எல்லாப் பிள்ளைகளிலும் மேம்பட்டு விளங்குவார்; சில சமயங்களில் எல்லாவகையிலும் குறைவுள்ள மாணவனிலும் தாம் குறைவுள்ளவராகக் காணப்படுவார். இவற்றிற்குக் காரணம் இதுவென்று அவருடைய ஆசிரியராலும் அறியக்கூடவில்லை. ஆனால், அவர் தம்மோடு படிக்கும் மாணவர்களுக்கிடையில் பெருங்கீர்த்திபெற்றுவிளங்கினார். சிறுவயதிலேயே கற்பனைக் கதைகளையோ அல்லது தாம் கேட்ட கதைகளையோ எடுத்துப் பிறர் வியக்கும்படி சொல்வதில் வால்டர் பெரிதும் நாவன்மை பெற்று விளங்கினார். சில சமயங்களில் அவர் சிறுவர்களுக்கு மத்தியில் அமர்ந்து, தமக்குத் தெரிந்த, அரிய பெரிய கதைகளை அழகொழுகக் கேட்பவர்களுக்கு இன்பம் பெருகுமாறு சிறிதும் ஊக்கம் குன்றாமல் சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு கதையோ? அன்று-அன்று; சிறுவர்கள் விரும்புகிறவரையில் பல கதைகளைச் சொல்லிக்கொண்டேயிருப்பார். மிக நேரமாகிறவரையில் கதைகேட்கும் அவருடைய சிறு கூட்டத்தாராகிய சிறுவர்கள், அவர் சொல்லும் கதைகளைக் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள்.

இக்காலத்திய சில பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் குறும்பு செய்வதைப் போலவே வால்டரும் தாம் படிக்கும்போது இரண்டொருமுறை குறும்பு செய்தாரென்கின்றனர். உபாத்தியாயர் கேட்கும் கேள்வி

களுக்குப் பதில் சொல்லித் தமக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு மாணவனுக்கு முன்னால் தாம் போய் உட்கார வேண்டுமென்று வால்டர் ஒருமுறை நினைத்தார். அன்று முதல் அவர் தமது கருத்தை முடிப்பதில் கருத்தாகவே யிருந்தார். ஆனால், அவர் கருத்து சுலபமாக நிறைவேறவில்லை. உபாத்தியாயர் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும், வால்டருக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டிருந்த மாணவன், ஏற்ற பதிலைத் தாமதமின்றிச் சொல்லி வந்தான். அவ்வாறு அவன் பதில் சொல்லும்போதெல்லாம் அவன் தன்னுடைய சட்டையில் இருந்த பொத்தான்களில் ஒன்றைத் தொட்டுத் தடவிக்கொண்டே பதில் சொல்வதையும், அவ்வாறு அந்தப் பொத்தான்களை அவன் தடவிக் கொள்ளுவதினாலேயே உபாத்தியாயரின் கேள்விக்கு ஏற்ற பதில் அவன்மனத்தில் வருகிறதென்பதையும் வால்டர் உணர்ந்து, 'இவன் சட்டைப்பையில் உள்ள, இவன் அடிக்கடித் தொட்டுத் தடவிக்கொடுக்கும், பொத்தானை இவன் அறியாதபடி எடுத்துவிட்டால், இவனை உபாத்தியாயர் கேள்வி கேட்கும்போது, இவன் வழக்கம்போல் பதில் சொல்லுமுன் பொத்தானைத்தொட முயன்று, அஃதில்லாமையைக்கண்டு திடுக்கிடுவான்; அப்போது உபாத்தியாயர் கேள்விக்கு ஏற்றபதிலைச் சொல்லமுடியாது இவன் விழிப்பான். அதுவே சமயமென்று ஆசிரியரின் கேள்விக்கு ஏற்றபதிலைச் சொல்லி நான் இவனுக்கு முன்னால் போய் உட்காருவேன்' என்று தம்முள் தீர்மானம் செய்துகொண்டார். பிறகு வால்டர் கூர்மையான கத்தரிக்கோலொன்றினால், சமயம் அறிந்து,



தமக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டிருந்த சிறுவனுடைய சட்டையில் இருந்த, அவன் அடிக்கடி தொடும், பொத்தானைக் கத்தரித்துவிட்டு மேல் நடக்கக்கூடியவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். வால்டரின் சூழ்ச்சி ஜயமடையாமற்போகுமா? வழக்கம்போல் ஆசிரியர் வால்டருக்கு முன்னே உட்கார்ந்துகொண்டிருந்த சிறுவனை ஏதோ ஒரு கேள்வி கேட்டார். அவன் பதில் சொல்லுமுன் வழக்கம்போல் அவன் கை, அவன் சட்டையில் இருந்த, அவன் அடிக்கடி தொடும், பொத்தானைத் தடவியது. பொத்தான் இல்லாமையை உணர்ந்த அச்சிறுவன் திடுக்கிட்டு ஆசிரியரின் கேள்விக்கு ஏற்ற பதிலைச் சொல்லாது தயங்கினான். அதுவே தருணமென்று ஸ்காட் உபாத்தியாயரின் கேள்விக்கு ஏற்ற பதிலைச்சொல்லி, ஏமாறியிருந்த அச்சிறுவனுக்கு முன்னேபோய் உட்கார்ந்தார். ஆனாலும் அந்த இடம் ஸ்திரமாக அவருக்கு நிலைத்திருக்கவில்லை.

வால்டர் இளம்பருவத்தில் தம்முடைய வகுப்பில் மேதாவியாக விளங்காவிட்டாலும், கற்றவரையில், ஒழுங்காகக் கற்றுவந்தாரென்றே சொல்கின்றனர். மற்றச் சிறுவர்கள் ஒரு புத்தகத்தைப் படித்து முடித்து விடுவார்களானால், பரீட்சை முடிந்த பிறகு, படித்த விஷயங்களை மறந்து விடுவார்கள். ஆனால், வால்டர் தாம் ஒரு விஷயத்தைப் படித்தால் அதைத் தமது கவனத்தில் என்றும் வைத்துக்கொள்ளக் கூடியவராயிருந்தார். அத்தகைய சிறந்த ஞாபகசக்தி அவரிடம் இருந்திராவிடில் பிற்காலத்தில் அரிய பெரிய நூல்களை அவர் இயற்றியிருக்க மாட்டார். இக்காலத்திய மாணவர்களிற் பெரும்பாலார், பரீட்சை

முடிந்தபிறகு, தாங்கள் படித்த புத்தகங்களின் பெயரையும் மறந்தவர்களா யிருக்கின்றனர். இக்காரணத்தினாலேயே ஒவ்வொரு வகுப்பிலும் இக்காலத்திய மாணவர்கள் பலர், புதிதாகப் படிக்கத் தொடங்கும் சிறுவரைப்போல் துன்பமடைகின்றனர். எந்த மாணவன் தான்கற்ற விஷயங்களைக் கண்ணேபோல் போற்றிக் கவனத்தில் வைக்கின்றானோ அந்த மாணவனே பிற்காலத்தில் பிறர் மெச்ச வாழ்வா னென்பதற்குச் சர் வால்டர் ஸ்காட் சாட்சியா யிருக்கின்றார்.

பள்ளிக்கூட நேரந்தவிர மற்றநேரங்களில் ஸ்காட் ஒரு சிறிதும் வீண்பொழுது போக்காமல் சரித்திரம், யாத்திரை, பாடல் முதலியவைகள் அடங்கிய புத்தகங்களைச் சலிப்பின்றிப் படித்துக்கொண் டிருப்பார். அழகிய கற்பனைக்கதைகளைப் படிப்பதில் அவருக்கு எப்போதும் ஆசை அதிகம். கற்பனைக் கதைகளைப் படிப்பதும், எழுதுவதும் குறைவான காரியம் என்று இக்காலத்தில் தங்களை அதிகமாகப் படித்தவர்கள் என்றெண்ணிக் கொண்டிருக்கும் பரந்த நோக்கமில்லாத பலரின் அபிப்பிராயமா யிருந்து வருகின்றது. அத்தகைய அபிப்பிராயத்தை அவர்கள் சந்தர்ப்பம் வாய்த்தபோது வெளியிடவும் பின் வாங்குவதில்லை. அத்தகைய குறுகிய நோக்கமுடையவர்கள் ஒரு கற்பனைக் கதையை—எல்லோரும் புகழத் தகுந்ததாக—எழுதிப் பார்ப்பார்களானால், பிறகு அவர்களே, 'அம்மம்ம, கற்பனைக்கதை யெழுதுவது இலேசான காரியமன்று' என்றே கூறுவர் என்றுசொல்லலாம். இக்காலத்தில் கற்பனைக் கதைகளுக்கு விரோதிகளாயிருப்போர், 'உண்மையில் அத்தகைய கதைகளை யெழுதச் சிறிதும்



ஆற்றலில்லாதவர்களே' என்று தீர்மானமாகக் கூறலாம். ஆனால், ஒருவிஷயம் மட்டும் நாம் தாழ்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. அதாவது: வங்காளத்தில் பிறந்து வங்க பாஷைக்கே பெருமையளித்த பாபுபங்கிம் சந்த்ரசட்டர்ஜி, டாகூர் முதலியவர்களைப்போல் பாஷை நலத்தையும், பொதுஜன நலத்தையும் கருதித் தமிழ்ப் பாஷையில் கற்பனைக் கதைகள் எழுதுவோர் ஒரு சிலரேயாவர். மற்றையோர் பொருள் தேடுவதொன்றே கருத்தாகக்கொண்டு மனம்போனவாறு கதைகளை யெழுதித் தேசத்திற்கும் மொழிக்கும் கேடுவிளைத்து வருகின்றனர். இக்காரணம்பற்றிக் கற்பனைக்கதைகளே கேவலமானவை யென்று ஒதுக்குதல் அறிவுடையார்க்கு அழகன்று. மேல்நாடுகளிலும் இத்தகைய கேடுகள் விசேஷமாயிருக்கக் காண்கிறோம். ஆனால், அங்குள்ள அறிஞர்கள் கற்பனைக்கதைகளை வெறுப்பதில்லை. பல கதைகளில் சில கதைகளாவது சிறப்புடையவைகளா யிருந்து நன்மைதாக் கூடுமென்பது மேனாட்டினரின் எண்ணமாகும். பொதுமக்களிற் பெரும்பாலார் அறிவுடையவர்களாய் இருக்கும் நாட்டில் எந்த நூலும் அதனதன் தன்மைக்கேற்றவாறு பெருமையும் சிறுமையும் அடைந்துவிடக் கூடுமாகையால் அதைப்பற்றி நாம் கவலைப்படுவானேன்? கற்பனைக்கதைகள் விசேஷமானவைகள் அல்லவென்பது ஒருதலையான அபிப்பிராயமானால் இப்போது நாம் எடுத்துக்கொண்ட சரித்திரத் தலைவர்—சர் வால்டர் ஸ்காட் என்பவர்—பெயரும் பெருமையு முற்றுவிளங்குவதற்குக் காரணமாயிருப்பவை அவர் எழுதிய கற்பனைக் கதைகளே யென்பதற்கு யாது கூறுவது?

இளம்பருவத்திலும் வால்டர் இரவில் ஒன்பது மணிக்குமுன்னால் படுக்கைக்குச் செல்வது இல்லை. அவ்வழக்கம் பிற்காலத்தில் அவருக்குப் பெரிதும் நன்மையைத் தரக்கூடியதாய் இருந்தது. நன்றாய்ப் படிக்கத் தெரிந்த பிறகு ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் சிலவற்றை வால்டர் ஆவலோடு வாசிக்க ஆரம்பித்தார். இரவில் வீட்டிலுள்ள பெரியவர்கள் தங்கள் சாப்பாட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போகும் வரையில் வால்டர் படிப்பதே கருமமாயிருப்பார். சில சமயங்களில் பெரியவர்களின் கட்டாயத்தின்மீது தாம் படிப்பதை நிறுத்தி வால்டர் தமது படுக்கைக்குச் செல்வார்! இதனால் வால்டருக்குக் கல்வியில் இயற்கையாகவே ஒருவகை ஆசை வேரூன்றியிருந்ததென்பது சொல்லாமலே அமையும். எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க விரும்புவோர் அந்தக் காரியத்தில் தனித்த ஒருவகை ஆசையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். ஒரு வேலையில் ஆசையிருக்கும் வரையில், அந்த வேலை எவ்வளவு துன்பமும் அசாத்தியமுமுள்ளதானாலும், அதில் வெறுப்புத் தோன்றுதல்லவா? வால்டருக்கு இயற்கையிலேயே கல்வியில் இருந்த ஆசையானது அவரை முப்போதும் எப்போதும் படித்துக் கொண்டிருக்குமாறு செய்து வந்தது. ஆசையில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. ஆகையால் கற்க விரும்புவோர், இயற்கையில் கல்வியில் ஆசையில்லாதவர்களாயினும் பழக்கத்தினாலேனும் அவ்வாசையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

கலாசாலையில் வால்டர் வெகுகாலம் படித்துக் கொண்டிருக்கவில்லை. பதினைந்து வயதுவரையில்



யில் படித்துக் கொண்டிருந்தார். பின்னர், அவர் கலாசாலையைவிட்டு, வக்கீலாய் இருந்த தம் தகப்பனாரிடம் ஐந்து வருடகாலம் சட்டமுறைகளைப் பயின்றுகொண்டிருந்தார். முன்னேற்றமடைய வேண்டுமென்று விரும்புகிற ஒவ்வொருவரும் அநுசரிக்கக்கூடிய அநேக குணங்கள் வால்டரிடத்தில் இயற்கையிலேயே அமைந்துகிடந்தன. அவர் பல மணிநேரம் வரையில் கையும், மெய்யும் சோர்வடையாமல், சிறிதும் இடம்விட்டுப் பெயராமல், எழுதுவதில் கைதேர்ந்தவர் என்று அவரைப்பற்றி யெழுதும் ஆசிரியர்கள் எல்லோரும் ஒரேவிதமாகக் கூறுகின்றனர். வால்டர் எழுதிய நூல்களும் அவ்வாசிரியர்களின் கூற்றுக்கு ஆதாரமாகவிருக்கின்றன. அவ்வாறு அவர் பல மணிநேரம்வரையில் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திராமலேயிருந்து யெழுதியதற்குக் காரணம் அவருடைய தேக பலமன்றென்றும், அவருடைய மனோபலமே அதற்குக் காரணம் என்றும் கூறுகின்றனர். உண்மையில் வால்டரின் தேகபலம் சாதாரணமானதுதான். ஆனால், அவருடைய மனோபலம் வியக்கத்தக்கதே! அவருக்கிருந்த மனோபலம் ஒரு போர்வீரனுக்கு இருந்தால் அவன் தனக்காக ஓர் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கக்கூடும் என்று அநேகர் கூறுகின்றனர். அஃது உண்மையே யென்பது போகப்போக நன்கு விளங்கக்கூடும் என்பது திண்ணம். கல்வியில் தேர்ந்தபிறகு—கலாசாலையை விட்டு விலகிய பிறகு—வால்டர் தமது பெற்றோர்களுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுக்காமல் தமது சிறு செலவுகளுக்கு வேண்டிய பொருள்களைத் தாமே சம்பாதித்துக்கொள்ளலானார். பத்திரம் முதலிய

வைகளுக்குப் பிரதி (Copy) தயார் செய்வதையே முதலில் அவர் தமக்குப் பணம் சம்பாதிக்கும் வேலையாகக் கொண்டு அவ்வேலையைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

அவருடைய மனோ பலத்தையும், எடுத்துக் கொண்ட வேலையில் அவருக்கிருந்த ஊக்கத்தையும் விளக்க, அவரைப்பற்றிப் பேசும் பலரும் கூறும் ஒரு விஷயத்தை நாம் இங்கே எழுதுவது அவசியமாகும். ஒருமுறை வால்டருக்குச் சில புத்தகங்கள் வாங்கவேண்டிய அவசியம் நேர்ந்தது. பெற்றோர்களைப் பொருள் கேட்பதில் அவருக்கு இஷ்டமில்லை. என்ன செய்வதென்று வால்டர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் எதிர் பாராத விதமாய் நூற்றிருபது பக்கங்களுக்குக் குறையாமல் எழுதப்பட்ட கடிதங்களுக்கு வேறு பிரதி தயார் செய்யவேண்டிய வேலை அவருக்குக் கிடைத்தது. அந்த வேலையை அவர் தமக்குள்ள இயற்கையான ஆசையோடு ஏற்றுக்கொண்டு பதினைந்துமணி நேரத்தில், இடையில் ஆகாரத்திற்காக வேனும், ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்காக வேனும் எழுந்திராமல், ஒரே வேகமாய் எழுதிமுடித்தார். இவ்விஷயம் உண்மையோ பொய்யோ வென்று ஒருவரும் எண்ணமிட வேண்டாம். வால்டரின் வாழ்க்கையை நன்றாய் அறிந்தவர்களே அவ்வாறு எழுதி யிருக்கின்றனர். நெப்போலியன் அறுபது மைல் விஸ்தீரணம் சமுத்திரத்தில் நீந்தியதும், டெல்லியில் இருந்த பாதுஷாவின் எவராலும் அடக்கமுடியாத குதிரையை ஜயசிங்குமன்னன் சவாரி செய்து அடக்கியதும், சிவாஜி மன்னன் அடிக்கடி பலநாட்கள் வரையில் அன்னாகாரமில்லாமல் குதிரையின்மீது ஏறித் தன் இராஜ்ஜியத்தை



விருத்தி செய்ததும் மனோபலத்தின் துணைகொண்டேயல்லாமல் தேகபலத்தின் துணைகொண் டன்றெனத் திண்ணமாய்க் கூறலாம். மனோபல மில்லாதவன் தேக பல முடையவனாயினும் அவன் மனோ பல முள்ளவனுக்கு எவ்வகையிலும் இணையாகமாட்டான். தேக பலத்தில் சிறந்த யானை, மனோபலத்தில் சிறந்த சிங்கத்தினால் கொல்லப்படுவது எவரும் அறியாத இரகசியமல்லவே! ஆகவே மனோபலமுடையவர்கள் எக்காரியத்தையும் எளிதில் முடிப்பர் என்பது திண்ணம். மனோபலமுடையவர்களுக்கு, 'வெந்தணலும் தண்புனலாம் வேலிடம் தெள்ளமுதாம், சிங்கமுமோர் நல்ல சிறுமானாம்' என்பதற்குத் தடையாதேனும் உளதோ? ஆகவே, இனியும் வால்டர் நூற்றிருபது பக்கங்களுக்குக் குறையாமல் எழுதப்பட்ட விஷயங்களைப் பதினைந்து மணிநேரத்தில் ஒரே வேகமாக எழுதி முடித்தாரென்பதில் எவரும் சந்தேகங்கொள்ளாரென்று நம்புகிறோம். இவ்வாறு மற்றவர்கள் கண்டு ஆச்சரியப் படும்படியான அநேக சிறந்தகுணங்கள் வால்டரிடமிருந்தன.

வால்டர் அடிக்கடி அழகமைந்த இயற்கைத் தோற்றங்கள் நிறைந்த விடங்களையும், புராதன யுத்த களங்களையும் போய்ப்பார்த்து வருவார். வால்டர் அறிவிலும் வயதிலும் பெரியவரான பிறகு தாமே அநேக சரித்திர சம்பந்தமான விடங்களை நேரில் போய்ப் பார்த்துவருவதை விநோதமாகக் கொண்டிருந்தார். பல விடங்களுக்குப் போய் வந்ததால் அவருக்குண்டான அநுபவம் பிற்காலத்தில் அவருக்குப் பெருநன்மையைப் பயக்கக்கூடியதாய் இருந்தது.

அவருடைய வாழ்க்கையின் எந்த நிலையிலும் அவர் திருப்தி யுடையவராகவே யிருந்தார். இன்பமும் துன்பமும் சமமே என்றெண்ணும் பெரியார்களில் வால்டரும் ஒருவராவரென்பது திண்ணம். அவர் செல்வத்தில் திளைத்தபோதும், அதனின்றும் நீங்கிய போதும் சலியாத மனமுடையவராகவே யிருந்தாரென்பதைப் பின்னால் நாம் அறிவோம்.

### நூலாசிரியராதல்

வால்டர் வளர்ந்து பெரியவரானார். கலியாணம் செய்துகொள்ள வேண்டிய பருவம் வந்தது. பிறகு அவர் தமக்குத்தகுந்த ஒரு குடும்பத்துப் பெண்ணை, அங்கிலநாட்டுத் தற்கால வழக்கப்படி, தாமே சந்தித்து ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றேழாம் வருடத்தில் மணந்து கொண்டார். பிறகு அவர் தமது மனைவியோடு எடின்புரோ நகரத்திற்கு ஆறுமைல் தூரத்திலுள்ள எஸ்க் (Esk) என்னும் இடத்தில் ஒரு சிறுவீட்டில் வசித்துவரலானார். இதற்கிடையில் அவர் பல்வகையான விஷயங்களடங்கிய தமது நாட்டுப் பாட்டுக்களை ஓயாது எழுதிவந்தார். இந்தப் பாட்டுக்களை அவர் பிரசுரம் செய்யவேண்டுமென்று எண்ணினார். அத்தகைய வெண்ணம் நெடுநாட்களாக அவருடைய மனத்தில் குடிகொண்டிருந்தது. பிறகு அவர் 'தி மின்ஸ்டரல்சி ஆவ் தி ஸ்காட்டிஷ் பார்டர்' (The minstrelsy of the Scottish border) என்னும் பெயரமைத்து ஒரு நூலை வெளியிட்டார். புத்தகம் வெளியான அதே வருடத்தில் எண்ணூறு புத்தகங்கள் விற்பனையாயின. அச்சமயம் ஒரு வருடத்தில் அத்தனைப் புத்தகங்கள் விற்பனையானது அதிகமென்றே அனுபவமுடையோர்



கூறுகின்றனர். அப்புத்தகம் ஸ்காட்லந்து தேசத்தாருக்கு இன்பமூட்டியது. அப்புத்தக முழுவதிலும் அவர்களுடைய நாட்டின் பெருமையும், அவர்கள் நாட்டிலிருந்த அவர்களுடைய முன்னோர்களின் சிறப்புமே நிறைந்திருந்தன. அவைகளைப் படித்துணர்ந்த பிறகு அவர்கள் புதிய ஊக்கமும், உற்சாகமும் கொண்டனர். அவர்களுடைய முன்னோர்களின் பண்டைக்காலத்து வாழ்க்கையும், தோற்றமும் அவர்கள் அகக்கண்ணில் நிறைந்தன. அந்தப் புத்தகத்தைப்பற்றி வால்டருக்கு எழுதிய நண்பரொருவர் எழுதுகிறார்: 'எனக்கு வந்த புத்தகத்தின் மேல்கட்டுகளைப் பசியோடிருக்கும் ஒருவன் ஆகாரத்தைக் கண்டாற்போல விரைவாக அவிழ்த்து, ஆவல் மிகுதியினால், அப்புத்தகத்தின் பல பக்கங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அதில் உள்ள விஷயங்கள் என் மனத்தை உண்மையிலேயே கவர்ந்து விட்டன.' இவ்வாறு அந்தப் புத்தகத்தைப்பற்றி ஆயிரக் கணக்கானவர்கள் புகழ்ந்திருக்கின்றனர்.

பிறகு வால்டர் ஸ்காட் ஆயிரத்து எண்ணூற்று நான்காம் ஆண்டுமுதல், 'அஷஸ்டீல்' (Ashestiel) என்னுமிடத்தில வசித்துவரலானார். அந்த இடம் மிகவும் அழகானது. அந்த இடத்திலுள்ள அழகிய காட்சிகளைப்பற்றி அவரே தாம் எழுதிய 'மார்மியன்' (Marmion) என்னும் புத்தகத்தின் முன்னுரையில் எழுதி யிருக்கிறார். அவர் இருந்த வீட்டின் பின்புறம் மலைகள் ஓங்கி வளர்ந்திருந்தன. சம நிலங்களில் புற்கள் நன்றாய் வளர்ந்து அழகிய காட்சியைத் தந்தன. எங்கும் பலவிதச் செடிகொடிகள் நிறைந்திருந்தன. ஆங்காங்குச் சிற்றருவிகள் ஓடிக்கொண்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் வால்டர் ஸ்காட் காலையில் ஐந்து மணிக்குள் எழுந்துவிடுவார். எழுந்தவுடன் தமக்கு ஆகவேண்டிய வேலைகளை அநேகமாகத் தாமே செய்து கொள்ளுவார். பிறகு உட்கார்ந்து எழுத ஆரம்பிப்பார். அவர் இடைவிடாமல் இரண்டுமணிநேரம் எழுதுவார். அப்போது அவர் நாய் அவருடைய பாதத்தின் கீழ் படுத்துக்கொண்டிருக்கும். எழுதும்போது அவசியமான புத்தகங்கள் பல அவர் அருகில் கிடக்கும். எழுதியானபிறகு அவர் எழுந்து காலை ஆகாரத்திற்குப் போவார். காலை ஆகாரம் முடிந்தவுடன் வழக்கம்போல் தமது குதிரையின்மீது ஏறி வெளியில் உலாவச் செல்வார். அவருடைய குதிரை, 'இத்தகையபெரும் புலவரைச் சுமக்க நாம் என்ன புண்ணியம் செய்தோமோ' என்று எண்ணிச் சந்தோஷப்படுவதேபோல் கனைத்துக்கொண்டு எஜமானன் இஷ்டப்படி செல்லும்.

உலகத்தில் செல்வமுள்ள விடத்தில் கல்வியிருப்பதில்லை. கல்வியுள்ள விடத்தில் செல்வம் இருப்பதில்லை. காரணம் என்னவென்று கேட்டால், 'நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே பூவின்கிழத்தி புலந்து' என்று புலவரும் சொல்லி விடுவார்கள். 'பணம், பணம்' என்று பணப் பிசாசாக அலைகின்றவர்களுக்கே பணம் கிடைக்காதபோது எந்நேரமும் புத்தகமும் கையுமாய் இருக்கின்ற புலவர்களுக்குப் பொருள் சேருவதேது? தங்கள் அறிவைப் பிறருக்குக் கொஞ்சமும் கொடாமல் பிறர் அறிவைமட்டும் எப்போதும் கொள்ளை கொள்ளுவதில் கண்ணாயிருக்கும் புலவர்களுக்குப் பொருள் எவ்வாறு கிடைக்கும்? ஆனால், ஸ்காட் தமது அறிவைப் பிறருக்குக் கொடுத்துப் பிறர் அறிவைத் தாம் கொள்ளும்



குணமுடையவராதலினாலே அவரிடம் பொருள் சேரலாயிற்று. பொருட்செல்வம் ஒரு செல்வமாகுமா?

'பொன்னுடைய ரேனும் பொருளுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ?—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.'

ஸ்காட் மக்கட்செல்வத்திலும் குறைவற்றிருந்தார். அவருக்கு நான்கு குழந்தைகளிருந்தன. அக்குழந்தைகளிடத்தில் அவர் பேரன்புடையவராயிருந்தார். தமது மக்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையினையும் கேட்டு அவர் ஆனந்தப்படுவார். 'குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள், மழலைச்சொற் கேளா தவர்' என்னும் வாக்கியத்தை அறிந்தவர்போல அவர் தம்மக்களின் இன்பமொழிகளைக் கேட்டு இன்புற்றிருந்தார். எந்தநேரத்திலும் தமது மக்கள் கேட்கும் எந்தக்கேள்விக்கும் ஸ்காட் தவறாமல் பதில் சொல்லுவார். சில சமயங்களில், அவருடைய குழந்தைகள், அவரை ஏதாவது கதைசொல்லும்படி கேட்பார்கள். அப்போது அவர் தாம் எழுதிக்கொண்டிருந்தாலும், எழுதுவது எந்தவிஷயமாயினும், பேனாவை அப்படியே வைத்துவிட்டுக் குழந்தைகளை மடியின்மீது எடுத்து வைத்துக்கொண்டு தமதுதேசத்துப் பூர்வகால கதைகளை அவர்களுக்கு நன்றாகப் பொருள் விளங்கும்படியாகவும், இன்பம் பெருகும்படியாகவும் தெளிவாகச் சொல்லுவார். குழந்தைகளோடு கூடிக்குலாவி அடையத்தகுந்த இன்பத்தை ஸ்காட் பெற்றிருந்தார். தம்மிடத்தில் கதைகேட்ட குழந்தைகளுக்குக் கதைசொல்லி அவர்கள் விளையாடச் சென்ற

பிறகே ஸ்காட் மறுபடியும் எழுதச் செல்வார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் குழந்தைகளுடைய நாளாக ஸ்காட் எண்ணி ஞாயிற்றுக் கிழமைதோறும் குழந்தைகளோடும், தமது அருமைநாயோடும் தமக்கு இஷ்டமான இடத்திற்குச் சென்று இன்பமாகப் பொழுதைப் போக்கி ஓடைகளின் அருகில் உட்கார்ந்து சாப்பிட்டு வீட்டிற்குத் திரும்புவார். அவர் தமது நாயினிடத்தில் அதிக அன்புள்ளவரா யிருந்தார். பொதுவாக வீட்டில் வளரும் நாய், பூனை, குதிரை முதலியவைகளிடத்தில் அவர் அதிக அன்புகொண்டிருந்தார். அவர்நாய் இறந்தபோது, அவருடைய நண்பரொருவர் அவருக்கு தாம் நடத்தும் விருந்தில் வந்து கலந்து கொள்ளும்படி கடிதம் எழுதி யிருந்தார். அதற்கு ஸ்காட், 'என்னுடைய பழையநண்பனொருவன் இறந்து விட்டான். ஆகையால் இன்று நான் வரமுடியாது. என் நண்பனுடைய பிரிவினால் எனக்குப் பெருந்துன்பமேற்பட் டிருக்கின்றது' என்று எழுதி யனுப்பினார்.

ஆயிரத்து எண்ணூற்று ஐந்தாம் வருடம் 'லே ஆப் தி லாஸ்ட் மின்ஸ்ட்ரல்' (Lay of the Last Minstrel) என்னும் புத்தகம் வெளிவந்தது. அது ஸ்காட்லந்து தேசத்துப் பழைய பழக்க வழக்கங்களைக் குறிக்கும் ஒரு கதையைத் தழுவிப் பாடப்பட்டதாகும். அதன் பிறகு, 'மார்மியன்' (Marmion) என்னும் புத்தகமொன்று மூன்று வருடங்களுக்குப் பிறகு வெளிவந்தது. பிறகு சிறிது காலத்திற்குள் 'எ டேல் ஆப் பிளாடன் பில்ட்'(A Tale of Flodden Field) என்னும் புத்தகமும், ஆயிரத்து எண்ணூற்றுப் பத்தாம் வருடம், 'லேடி ஆப் தி லேக்' (Lady of the Lake) என்னும் நூலும் வெளி வந்தன. ஆயிரத்து எண்ணூற்றுப் பன்னிரண்டாவது வருடத்தில் ஸ்காட், 'டுவீட்' (Tweed) என்னுமிடத்திற்குக் கீழ்ப்பாகத்தில் 'அபட்ஸ் போர்டு'(Abbots ford) என்னுமிடத்தில் மலைப் பிரதேசத்தை விலைக்கு வாங்கினார். அந்த இடம் மிகச் சிறந்ததென்று ஸ்காட் பல முறை எழுதி யிருக்கின்றார். அங்கு எல்லாவிதமான வளப்பங்களும் நிறைந்திருந்தன. புதிய வீட்டிற்குக் குடித்தனம் போனவுடனே ஸ்காட் தமது எழுத்து வேலையை ஆரம்பித்துக்கொண்டார். புதிய வீட்டைத் திருத்தி யமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போதும் ஸ்காட், பல கஷ்டங்களுக்கு இடையில், தாம் எழுதுவதை நிறுத்தாமலே எழுதிக்கொண் டிருந்தார். தாம் ஓயாமல் எழுதி உயர்ந்த நிலையை யடையவேண்டுமென்பது ஸ்காட்டின் எண்ணம். அதனால் அவர் எந்த நேரத்திலும் தாம் எழுதுவதை மட்டும் நிறுத்தவே யில்லை.



'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.'

என்னும் இலக்கணத்திற்கு ஸ்காட் இலக்ஷியமா யிருந்தார். புதிய வீட்டைத் திருத்தி யமைக்கும் வேலை ஏக காலத்தில் வீடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதும் ஒரு ஜன்னலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு ஸ்காட் தமது எழுதும் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். வீட்டைத் திருத்தி யமைப்பதனால் உண்டான ஓசை அதிகமாயிருந்தது. அவ்வித

ஓசையிலும் ஓசையேயில்லாத வேரிடத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பவரைப் போல், ஸ்காட் தமது வேலையைப் பெரிதும் ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார். 'சிறு சந்தடியிருந்தாலும் என்னால் படிக்கவும் முடியாது; எழுதவும் முடியாது' என்போர் இதைக் கவனிப்பாராக. தமக்கு நேரும் விவகாரங்களில் ஸ்காட் ஒரு சிறந்த நியாயாதிபதியினும் அதிகச் சிறப்பாகவே நடந்துகொள்ளுவது வழக்கம். ஒரு சமயம் மிகவும் ஏழையான கிராமவாசி ஒருவனை, அவன் எதையோ திருடிவிட்டானென்று, ஸ்காட்டினிடம் பிடித்துக்கொண்டு வந்தார்கள். ஸ்காட், அவனைப் பார்த்து, அவன் செய்த செய்கையின் சம்பந்தமாகச் சில கேள்விகள் கேட்டபோது அவன் அவரைப் பார்த்து, 'ஐயா, நான் ஏழையிலும் ஏழை. என் மக்களும் மனைவியும் பலநாட்களாய்ப் பட்டினி கிடக்கின்றனர். வேலையோ கிடைக்கவில்லை. இன்றைக்கு உணவில்லாவிடில் என்மக்கள் இறந்து விடுவார்கள் என்று எனக்குத் தெரிந்தது. ஆகையால், நான் திருடத் தலைப்பட்டேன்,' என்று கூறினான். அவன் வார்த்தைகளைக் கேட்ட ஸ்காட் மனமுருகி அவனைத் தமது ஆடு மாடுகளை மேய்ப்பவனாக வைத்துக்கொண்டார். அன்று முதல் இருபது வருடகாலத்திற்கு அதிகமாகவே அவன் ஸ்காட்டின் நன்றியுள்ள வேலையாளாயிருந்து இறந்தான். அவன் இறந்தபோது ஸ்காட் தமது உயிரினும் சிறந்த நண்பன் இறந்ததாக எண்ணிக் கண்ணீர் விட்டார்.

ஆயிரத்து எண்ணூற்றுப் பதினான்காம் வருடத்தில் ஸ்காட் வேவர்லி என்னும் பெயரோடு எழுதிய



கதை அங்கில பாஷையின் இலக்கியத்திற்குப் பெருங் கௌரவம் அளிப்பதாயிற்று. அதைப்பற்றி எத்தனை முறை நினைப்பினும் தகும். அக்காலத்தில் இருந்த அங்கில வியாபாரிகள் அப்புத்தகத்தின் விற்பனையைப் பற்றிக் கௌரவமாகப் பேசியிருக்கிறார்கள். வேவர்லி கதையானது முதன் முதல் ஸ்காட்டினுடைய பெயர் இல்லாமலே வெளிவந்தது. அவ்வாறு இருந்தும் அக்கதையானது வெளிவந்த ஐந்து வாரங்களில் ஆயிரம் புத்தகங்களுக்கு அதிகமாகவே விற்பனையாயிற்று. புத்தகத்தில் பெயரில்லாமையால், 'இக்கதையை யெழுதியவர் யார்?' என்று ஒருவரை யொருவர் கேள்வி கேட்கலாயினர். ஆயினும் அதற்குமுன் ஸ்காட் எழுதிய பல புத்தகங்களைப் படித்து அவருடைய நடையை (style) அறிந்திருந்த அவரது நண்பர்கள் வேவர்லி கதையை எழுதியவர் ஸ்காட்டென்பதை அறிந்துகொண்டு அப்புத்தகத்தைப்பற்றிப் புகழ்ந்து அவருக்குப் பல கடிதங்கள் எழுதுவாராயினர்.

அடுத்த வருடத்தில் ஸ்காட், பாட்டுக்கள் நிரம்பிய 'தி லார்டு ஆவ் தி ஐல்ஸ்' (The Lord of the Isles) என்னும் புத்தகமொன்றை வெளியிட்டார். புத்தகம் வெளியான ஒரு வாரத்திற்குப் பிறகு ஒருநாள் ஸ்காட் தாம் வழக்கமாகத் தங்கிப் படிக்கும் அறையில் இருந்தார். அப்போது அவருக்குச் சிநேகிதரான பிரசுரகர்த்தர் ஒருவர் வந்து அவரைப் பார்த்தார். ஸ்காட் அவரைக் கண்டதும், 'நண்பரே, வருக வருக' என்று முகமலர்ந்து வரவேற்று உபசரித்துப் பிறகு அவரைப்பார்த்து, 'நான் கடைசியாக எழுதிய பாக்கள் நிரம்பிய புத்தகம் வெளிவந்து ஒ[illegible]யாயிற்றல்லவா? அப்புத்தகத்தைப்

பற்றிப் பொது ஜனங்கள் என்ன சொல்லுகின்றனர்?" என்று கேட்டார்.

அவர் கேள்விக்கு அவருடைய நண்பராகிய பிரசுர கர்த்தர் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தார்.

ஸ்காட் மறுபடியும் தமது நண்பரைப் பார்த்து, 'ஏன் மௌனமா யிருக்கின்றீர்கள்? உண்மையை என்னிடத்தில் தாராளமாகச் சொல்லலாமே' என்று சொன்னார்.

உடனே அவருடைய நண்பராகிய பிரசுரகர்த்தர் அவரைப் பார்த்து, 'தாங்கள் கடைசியாக எழுதிய பாட்டுப் புத்தகத்தைப் பற்றி ஒரே வார்த்தையில் பதில் சொல்ல வேண்டுமானால் "நம்பிக்கையில்லை" என்று சொல்லிவிடலாம்' என்று சொன்னார்.

"நம்பிக்கையில்லை" யென்னும் வார்த்தையைக் கேட்டவுடன் ஸ்காட் திடுக்கிட்டுப் போனார். தம்முடைய நண்பராகிய பிரசுர கர்த்தாவது வேறு எவராவது தம்முடைய கடைசிப் புத்தகத்தைப்பற்றி அவ்வாறு சொல்லுவார்களென்று ஸ்காட் நினைக்கவேயில்லை. அதனால், "நம்பிக்கையில்லை" என்னும் வார்த்தையைக் கேட்ட வுடனே அவருக்கு எப்போதும் இயற்கையாயுள்ள ஊக்கம் அவர் மனத்தில் தோன்றியது!

புதிய ஊக்கத்தோடு ஸ்காட் தமது நண்பரைப் பார்த்து, 'நல்லது, ஒரு துறை நமக்கு ஏற்றதாயில்லாவிட்டால் நாம் மற்றொரு வழியைப் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று சொன்னார்.

பிறகு வேறு பல விஷயங்களைப்பற்றி ஸ்காட்டின் நண்பர் ஸ்காட்டோடு பேசிப் போய்விட்டார்.



அவர் சென்ற பிறகு ஸ்காட் தம்து நவீனம் (Novel) எழுதும் வேலையை ஆரம்பித்தார். வேகமாக எழுதுவதில் ஸ்காட் யாருக்கும் பின்வாங்க மாட்டார். வேவர்லி கதைக்குப் பிறகு ஸ்காட், 'கை மானரிங்' (Guy Mannering) என்னும் கதையை எழுதினார். இக்கதையை இவர் ஆறே வாரங்களில் எழுதி முடித்தார். வேவர்லி கதைக்குப் பின்னால் அதே பெயர்த் தொடர்புடைய இரண்டு பெருங்கதைகளை அவர் மூன்று வாரங்களில் எழுதி முடித்திருக்கின்றார்; அவருடைய மனோவல்லமையைப்பற்றியும், எழுதும் திறத்தைப்பற்றியும் எண்ணிப் பாருங்கள்! பிறகு ஸ்காட் ஆயிரத்து எண்ணூற்றுப் பதினாறும் வருடத்தில் 'ஆண்டிகுரி' (Antiquary) என்னும் மற்றொரு புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார்.

அக்காலத்தில் இங்கிலாந்தின் பிரதிநிதியாயிருந்த ஒருவர்(Prince Regent) ஸ்காட்டின் கதைகளைப் படிப்பதில் பேராவல் உடையவரா யிருந்தார். அதனால் ஒரு முறை ஸ்காட் இங்கிலாந்துக்குப் போனபோது அந்தப் பிரதிநிதியைப் பார்த்தார். அவர் ஸ்காட்டை அன்போடு வரவேற்றார். அன்று முதல் வேவர்லி ஆசிரியர் அரசாங்க விருந்தினராக அடிக்கடி அழைக்கப்பட்டு வந்தார். அந்தப் பிரதிநிதி ஆயிரத்து எண்ணூற்று இருபதாவது ஆண்டு சிம்மாசனம் ஏறினார். அவர் சிம்மாசனம் ஏறியவுடன் ஸ்காட்டுக்குக் கௌரவம் அளிப்பதே தமது முதல் வேலையெனக்கருதி ஸ்காட்டுக்கு, 'சர்' என்னும் பட்டத்தை வழங்கினார்.

பிறகு சர் வால்டர் ஸ்காட், 'டேல்ஸ் ஆவ் மை லாண்லார்டு' (Tales of my Landlord) என்னும்

கதையையும், 'அரால்டு தி டான்ட்லஸ்' (Harold the Dauntless) என்னும் கதையையும் எழுதி வெளியிட்டார். ஆயிரத்து எண்ணூற்றுப் பதினேழாம் வருடம் ஸ்காட் நோயுற்றார். அதனால் சிறிதுகாலம் அவர் ஓய்வுற்றிருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

பேரறிவாளராகிய சர் வால்டர் ஸ்காட்டை அநேகப் பெருமக்கள் அவருடைய மாளிகையில் போய்ப் பார்த்துவந்தனர். அவ்வாறு போய்ப்பார்த்து வந்தவர்களில் பேரறிவாளரான 'வாஷிங்டன் இர்விங்' என்பவரும் ஒருவராவர். வாஷிங்டன் இர்விங் ஒருநாள் காலையில் ஸ்காட்டினுடைய 'அபட்ஸ்போர்டு' என்னும் மாளிகைத் தோட்டத்தின் வெளி வாயிற்படி யருகில் வண்டியிற் சென்றவுடன் மாளிகையில் இருந்த நாய்களில் ஒன்று முதலில் குரைக்க வாரம்பித்தது. உடனே மற்ற நாய்களும் குரைக்க வாரம்பித்தன. இவைகளைக்கண்ட வாஷிங்டன், 'நாய்கள் நம்மை வரவேற்கின்றனவோ' என்று வேடிக்கையாக நினைத்தார். அப்போது காலை ஆகாரத்திற்குச் சென்ற ஸ்காட் நாய்களின் கூச்சலைக் கேட்டுக் கையில் ஒருதடியை ஊன்றியவராய் மெதுவாக நடந்து சென்று வாஷிங்டனை உபசாரத்தோடு வரவேற்றார்.

பின்னர் அவர் வாஷிங்டனைப்பார்த்து, 'தாங்கள் தங்கள் வண்டியோடு வீட்டுவரையில் வரலாம். நல்ல நேரத்தில் வந்தீர்கள். காலையாகாரம் புசித்துப் பிறகு நமக்குச் சொந்தமான இப்பிரதேசங்களைக் காணலாம்' என்று சொன்னார்.

உடனே இர்விங், 'நான் காலையாகாரம் புசித்துத்தான் வந்தேன்' என்று சொல்லிக்கொண்டே மாளிகைக்குட் சென்றார்.



அவ்வார்த்தையைக் கேட்டவுடன் ஸ்காட் புன்சிரிப்போடு, 'நீங்கள் காலையாகாரம் புசித்து வந்தாலென்ன? இவ்வளவுதூரம், நெருங்கிவீசும் காற்றில் வந்ததனாலேயே நீங்கள் மற்றொருமுறை காலையாகாரம் அவசியம் புசிக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். நீங்கள் என்னோடு இருந்து புசிப்பது எனக்குப் பேரானந்தம் விளைவிப்பதாகும். தங்களைப் போன்றவர்களோடு இருந்துண்ணும் பாக்கியமே பாக்கியம்' என்று சொன்னார்.

'உங்களுடைய கடைசி வார்த்தைகளை அப்படியே திருப்பிச்சொல்லுகிறேன்' என்று சொன்னார் இர்விங்.

இவ்வாறு பேசிக்கொண்டே மாளிகைக்குள் சென்று நண்பரிருவரும் காலையாகாரம் அருந்தினர்.

இவ்வாறு பல நண்பர்கள்—அறிவிற் சிறந்தவர்கள்—அடிக்கடி வந்து சர் வால்டர் ஸ்காட்டோடு அளவளாவி யிருந்து செல்வர்.

ஸ்காட் வீணாகக் காலத்தைப் போக்கவில்லை. தேகம் கொஞ்சம் குணப்பட்டவுடன் அவர் பல கதைகளை எழுதினார். இரண்டு வருடங்களில், 'ஐவன்ஹோ' 'மானஸ்ட்ரி' 'அபாட்' 'கெனில்வொர்த்' முதலிய புத்தகங்களை எழுதி வெளியிட்டார். ஆனால் அவர் தேடிய செல்வம் அவரிடத்தில் நிலைத்திருக்கவில்லை.

அவர் செய்யும் செலவு, நியாயமானதாயினும், அளவுக்கு மீறியதாயிருந்தது. பின்னால் என்ன செய்வது என்னும் எண்ணமில்லாமலே அவர் கண்மூடித்தனமாகச் செலவு செய்துவந்தார். கையில் இருக்கும் பணத்தைச் செலவழித்ததோடும் கதை எழுதித் தருவதாகப் பிரசுர கர்த்தர்களிடம் முன்பணம் வாங்கியும்

செலவழித்து வந்தார். அவ்வாறு வாங்கிய பணங்களுக்கெல்லாம் அவர் எழுதியபாடுமில்லை. எவ்வளவென்றுதான் எழுதுவார் பாவம்! அவர் எழுதுவதற்கு மேல் அவர் செலவு அளவு கடந்திருந்தது. அவருக்கு வந்த செல்வம் வேறொரு சிக்கனக்காரனுக்கு வந்திருந்தால் அவன் குபேரனைப்போல் விளங்குவானென்பது திண்ணம். இக்காலத்திலும் கற்றவர்களில் ஒரு சிலர் ஸ்காட்டைப்போல் சம்பாதித்துச் செலவழிப்பதைப் பார்க்கிறோம். சம்பாதிக்கவேண்டும்; சம்பாதித்த பொருளைக் கொண்டு அளவாகத் தாமும் உண்டு பிறரையும் காப்பாற்றி வரவேண்டும். அன்றேல்—அளவுக்கு மிஞ்சிச்செலவு செய்கிறவர்கள் உறுவதை—சொல்லவும் வேண்டுமோ?

ஸ்காட் தமது செலவைக் குறைத்தவரல்லர். அவருடைய 'அபட்ஸ்போர்டு' என்னும் மாளிகை சாதாரண வீடாக விருந்து பங்களாவாக மாறிப் பிறகு மகோன்னத மாளிகையாக விளங்கிற்று. மாளிகையின் உட்புறமிருந்த ஒவ்வோரிடமும் விஸ்தாரமாகவும், விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப் பெற்றும் விளங்கியது. மாளிகை முற்றும் விலையுயர்ந்த சலவைக் கற்களால் தளவரிசையிடப் பெற்றிருந்தது. விலையுயர்ந்த படங்கள் ஆங்காங்கு மாட்டப்பெற்றிருந்தன. ஸ்காட்டினுடைய வாசிப்பு அறையில் இருந்த புத்தகங்களெல்லாம் கண்களைக் கவரும்படியான வேலைத் திறனோடுங்கூடிய உயர்ந்த பதிப்புக்கள். இவ்வித உன்னத மாளிகையில் ஸ்காட், தம்மைக் காணவரும் நண்பர்களோடு அளவளாவித் தமது வேலையைக் கவனித்துக் காலங் கழித்துவந்தார்.



ஆயிரத்து எண்ணூற்று இருபத்தைந்தாம் வருடம் இங்கிலந்து தேசத்தில் வியாபார சம்பந்தமாகப் பெருந்துன்ப முண்டாயிற்று. ஸ்காட்டுக்குப் பெரிதும் நெருங்கிய சம்பந்தமுள்ள புத்தகப் பிரசுரம் செய்யும் பெரிய 'கம்பனி' ஒன்றிருந்தது. அந்தக் 'கம்பனி'யையும் வியாபார சம்பந்தமாக ஏற்பட்ட துன்பம் விடாமல் பிடித்தது. அந்தக் கம்பனியார் ஏற்கனவே ஸ்காட்டைப் போல் கண்டபடியெல்லாம் செலவு செய்து வந்தார்கள். ஆகையால் வியாபார சம்பந்தமாகத் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைத் தாங்க முடியாமல், அக் கம்பனியார், ஆயிரத்து எண்ணூற்று இருபத்தாறாவது ஆண்டு கடனில் மூழ்கிவிட்டார்கள். இந்த விஷயம் காய்ச்சிய இரும்பு கம்பி போல் ஸ்காட்டின் காதில் நுழைந்தது.

வேவர்லி கதைகளின் ஆசிரியர், சிலதினங்களுக்கு முன் சிறந்த தனவந்தராய் இருந்தவர், அபட்ஸ்போர்டு என்னும் மாளிகையின் அதிபர் கடனாளியாகிக் கையிற் பொருளில்லாமல் கஷ்டப்படவேண்டிய காலம்வந்தது. 'ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்' என்பது சர் வால்டரின் விஷயத்தில் உண்மையாயிற்று. பாவம்! ஸ்காட் என்ன செய்வார்? தம்முடைய செல்வத்திற்கு ஆதாரமான கம்பனி முறிந்துவிட்டதை எண்ணுந்தோறும் ஸ்காட் இடிவிழுந்தாற்போல் ஏங்கினார். இரண்டு நாட்கள் வரையில் ஸ்காட் துன்பத்தில் மூழ்கிக்கிடந்தார். பிறகு அவர் மனத்தில் அவருக்கு இயற்கையான முயற்சி யென்னும் மூலதனம் குதித்தெழுந்தது.

ஸ்காட் ஒரு வீரர்! வீரன் என்பவன் எவன்?

போர் முனையில் நின்று ஆயிரக்கணக்கான எதிரிகளை அரை நிமிஷத்தில் ஒழிக்கின்றவனா? கடலை நீந்திக் கரையேறுகின்றவனா? நெருப்பிலே குதித்துத் தீமையின்றி மீள்கின்றவனா? அன்றன்று. எதுவரினும், எது போயினும் கலங்காதவனே மகாவீரனாம். ஸ்காட் எது வரினும், எது போயினும் கலங்காத வீரரேயாவர்.

ஸ்காட்டுக்கு எதிர்பாராது நேர்ந்த கடன் துன்பத்தை ஒழிக்க அவருடைய நண்பர் சிலரும், அவர் நூலினிடத்து நன்மதிப்புடைய பலரும் முன்வந்தனர். ஸ்காட்டுக்கு முன்பின் தெரியாத ஒருவர், ஸ்காட்டுக்கு வேண்டிய அளவு பொருளைத் தருவதாகக் கூறினார். எவரிடத்திலும் பொருள் பெற்று ஸ்காட் தாம் பின்னும் கடன்காரராவதற்கு இஷ்டப்படவில்லை. அவர் தமது கடன் துன்பத்தைக் கௌரவத்தோடும், தைரியத்தோடும் எதிர்க்கத் துணிந்தார். அவர், 'அபட்ஸ் போர்டு' என்னும் தமது மாளிகையைவிட்டு வேறிடம் சென்று மறுபடியும் தமது எழுதுகோலை எடுத்துக் கொண்டார். தாம் எழுதியே இழந்த செல்வத்தைத் திரும்பவும் பெறக்கூடுமென்று அவர் உறுதியாக எண்ணினார். பிறகு தமது வேலையை ஒழுங்காகச் செய்வதற்கு 'எடின்புரோ' நகரத்தில் நிசப்தமான ஓரிடத்தைத் தேடி அங்குப் போய்ச் சேர்ந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர், 'உட்ஸ்டாக்' என்னும் கதையை எழுதிமுடித்தார். அக்கதை அவருக்கு எண்ணாயிரம் பவுனைச் சம்பாதித்துக் கொடுத்தது. அதுவரையில் அவர் எழுதிய எந்தக் கதையினாலும் அவருக்கு அவ்வளவு பொருள் வரவில்லை. 'துன்பம் நிறைந்திருக்கும் போது எப்படி வேலைசெய்வது?' என்று சொல்லும்



நம்முடைய மக்களிற் சிலரின் மனோ நிலைக்கும், 'துன்பத்திலும் உழைத்துத் துன்பத்தைப் போக்க வேண்டும்' என்னும் அங்கிலேயர் பலரின் மனோ நிலைமைக்கும் உள்ள உயர்வு தாழ்வுகளைப் பாருங்கள்!

சிறிது காலத்திற்குப் பிறகு ஸ்காட்டின் மனைவிக்கு நோய் கண்டது. அந்நோய் வரவர அதிகரித்தது. எத்தனையோ வைத்தியர்கள் முயற்சி செய்தும் அந்த நோய் குணப்படவில்லை. கடைசியாக அவ்வம்மையார் மரணமடைந்தார். மனைவியார் இறந்த அதே வருடத்தில் ஸ்காட் மறுபடியும் தமது 'அபட்ஸ் போர்டு' என்னும் மாளிகையில் குடி யேறினார். அங்குச் சென்றதும் அவர் முன்போலவே விடா முயற்சியோடு எழுதவாரம்பித்தார். அப்போது அவருடைய இளம் வயதினையுடைய பேரன் ஒருவன் அவரைப் பார்க்கவந்தான். அவன் சிலகாலம் ஸ்காட்டோடு அவருடைய மாளிகையில் தங்கியிருந்தான். அவன் ஸ்காட்டோடு குதிரையின்மீது ஏறி வெளியில் உலாவப் போவது வழக்கம். அப்போது அவனுக்கு ஸ்காட் தமது தேசத்துச் சரித்திர சம்பந்தமான பல கதைகளைச் சொன்னார். அக்கதைகளையே அவர் பிற்காலத்தில், 'பாட்டனாருடைய கதைகள்' (Tales of a Grandfather.) என்னும் பெயரோடு வெளியிட்டார்.

ஆயிரத்து எண்ணூற்று முப்பதாவது வருடம் ஸ்காட் பாரிசவாயுவினால் பிடிக்கப்பட்டார். அப்போதும் அவர் தமக்கு இயற்கையான குணத்தை விடாமல் எழுதவாரம்பித்தார். ஆனால், முன்னிருந்த தெளிவானநடை அவரைவிட்டுப் போய்விட்டது. அவர் கடைசியாக எழுதிய கதையைப் படித்தவர்களுக்கு

அந்த விஷயம் விளங்கி விட்டது. அந்த விஷயத்தைத் தமது பிரசுரகர்த்தர்களின் மூலமாக ஸ்காட் அறிந்து கொண்டார்.

தம்முடைய பழைய இன்பநடை தம்மை விட்டு மறைந்ததை எண்ணி யெண்ணி அவர் ஏங்கினார்; 'நான் தேசத்தாரைக் களிப்பிக்கும் திறத்தை இழந்து விட்டேன்' என்று ஸ்காட் வருத்தத்தோடு சொல்லலானார். டாக்டர்கள், 'இனி நீங்கள் எதையும் எழுத வேண்டாம்' என்று ஸ்காட்டுக்குச் சொன்னார்கள். அவர்கள் வார்த்தைகளைக் கேட்ட ஸ்காட் புன்சிரிப்புக் கொண்டாரே தவிர வேறொன்றும் சொல்லவில்லை. சமுத்திரப் பிரயாணம் செய்து ஸ்காட் தமது தேகபலத்தை விருத்தி செய்துகொள்ள நினைத்தார். அதை அறிந்த அரசாங்கத்தார் தங்களுக்குச் சொந்தமான கப்பலொன்றை இஷ்டப்படி அநுபவித்துக் கொள்ளுமாறு அவருக்குக் கொடுத்தார்கள். அதே வருடத்தில், அக்டோபர் மாதத்தில், ஸ்காட் அக்கப்பலில் பிரயாணப்பட்டு 'மால்ட்டா' முதலிய சில விடங்களுக்குச் சென்று கிறிஸ்மஸ் பண்டிகையின் போது 'நேப்பிள்ஸ்' நகரத்தை யடைந்தார். ஸ்காட் 'ஜர்மனி' வழியாக வரும்போது பெரிய நகரொன்றில் இருந்த புத்தகக்கடைக்குப் போனார். அப்போது புத்தக வியாபாரி, 'அபட்ஸ் போர்டு' படமொன்றைக் கொண்டுவந்து ஸ்காட்டுக்குக் காட்டினான். ஸ்காட் அவசரமாக, 'ஐயா, நான் அதை முன்னரே அறிவேன்' என்று சொல்லிக்கொண்டே அவசரமாக அந்தக் கடையை விட்டுப் போய்விட்டார். அவர் ஜூன் மாதத்தில் தமது நாட்டுக்குத் திரும்பினார். அவர்



தேகநிலை மிகவும் சீர்கெட்டு விட்டது. அவர், 'இலண்டன் நகரத்திற்கு வந்து கப்பலை விட்டிறங்கியபோது அவர் 'அபாட்ஸ் போர்டை'ப்பார்க்கமாட்டார் என்றே எல்லோரும் எண்ணினார்கள்.

ஆனால், சீதோஷ்ணநிலை சரியாய் இருந்த ஜூலை மாதத்தில் ஒருநாள் சாயுங்காலம், அவர் தம்முடைய இருப்பிடத்திற்குப் போவதற்காக, அவரை ஒரு விசைப் படகில் ஏற்றினார்கள். விசைப் படகைச் செலுத்தும் தலைவன் படகில் தன்னுடைய அறையில் இருந்த தன்னுடைய படுக்கையைப் படகின் மேல்தட்டுக்குக் கொண்டுவந்து, ஸ்காட் அதில் படுப்பதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தான். படுக்கையை விட்டு ஸ்காட்டைக் கீழிறங்கச் செய்யாது, படுக்கையோடு அவரை அவருடைய வீட்டிற்குக் கொண்டு போக வேண்டுமென்றெண்ணியே விசைப் படகின் தலைவன் அவ்வித ஏற்பாட்டைச் செய்தான்.

பின்னர், 'அபாட்ஸ் போர்டு'க்குப் போகவேண்டிய நெடுந்தூரப் பிரயாணம் மெதுவாக ஆரம்பிக்கப்பட்டது. பிரயாணம் மெதுவாக நடந்து, கடைசியாக விசைப்படகு ஸ்காட் இறங்கவேண்டிய விடத்தில் போய்ச் சேர்ந்தது. பிறகு ஸ்காட்டைப் படுக்கையோடு எடுத்துக் குதிரை வண்டியில் வைத்து, அவரை, அவருடைய மாளிகையை நோக்கிக் கொண்டுபோனார்கள். அதுவரையில் நோயின் மிகுதியினால் கண்ணயர்ந்து இருந்த ஸ்காட் அப்போது கண்விழித்துத்தாம் தமது இருப்பிடத்தை யடைந்ததை அறிந்து இன்புற்றார். இயற்கையிலேயே தேசாபிமான முடைய அவர் தமது இருப்பிடத்தைக் கண்டு இன்புற்றது

ஆச்சரியமன்று. கடைசியாக அவர் தமது 'அபாட்ஸ் போர்டு' மாளிகையை அடைந்தார். அவருடைய நாய்கள் குரைத்துக்கொண்டே அவரைச் சுற்றி வந்து அவருடைய கைகளை நக்கின. அவைகளின் அன்பைக் கண்ட ஸ்காட் அவைகளின் முகத்தைத் தமது கண்ணீரால் நனைத்தார்.

## முடிவு

சிறிது நாட்களில் ஸ்காட் குணமடைந்தவர்போல் காணப்பட்டார். அப்போது அவர் எழுதுவதற்காகத் தமது எழுதுகோலை எடுத்தார். ஆனால் அவர் விரல்கள் எழுதுகோலைச் சரியாகப் பிடிக்கமுடியாமல் தவித்தன. அதனால் ஸ்காட் பெரிதும் துக்கப்பட்டார். அவர் கண்ணீர் அவருடைய இரண்டு கன்னங்களின் வழியே பெருகி வழிந்தது. சில தினங்களுக்குப் பிறகு மறுபடியும் அவருக்கு நோய் அதிகப்பட்டது. 'என்னை என்னுடைய படுக்கை அறைக்குள் எடுத்துச் செல்லுங்கள்' என்று ஸ்காட் சொன்னார். அவ்வாறே அவரை அருகிலிருந்தோர் அவருடைய படுக்கையறைக்குள் எடுத்துச் சென்றார்கள். பிறகு அவர் அந்த அறையை விட்டு வெளியில் வரவே யில்லை. வரவர அவருக்கிருந்த நோய் அதிகமாயிற்று. பிரபல வைத்தியர்கள் வந்து பார்த்துப் 'பயனில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

மந்தமாருதம் வீசும் ஒருநாள் பிற்பகலில், சர் வால்ட்டர்ஸ்காட் என்னும் பெருமகனார், தமது படுக்கையறையின் கதவுகளெல்லாம் காற்றோட்டத்திற்காகத் திறந்திருந்தபோது, மலையருவிகளில் சிக்கிய சிறு சிறு கற்கள் ஒன்றோடொன்று உராய்வதனால் உண்டாகும்



ஒலி காதிற்படத் தமது அறுபத்தோராவது வயதில் இம் மண்ணுலக வாழ்க்கையினின்றும் நீங்கினார்.

சாதாரணக் குடியிற் பிறந்து தமது பேரறிவினாலும், பெரு முயற்சியினாலும் முன்னுக்கு வந்த சர் வால்ட்டர் ஸ்காட்டின் சரித்திரத்தை நாம் ஒருவாறு அறிந்தோம். ஊன்றிக் கவனிப்போருக்கு ஸ்காட்டினிடம் பல பெருங் குணங்கள் பொருந்திக் கிடந்தனவென்பது தெரியாமற் போகாது. அவர் எக்காரியத்தை ஆரம்பித்தாலும் விடாப்பிடியாய்த் தளரா ஊக்கத்துடன் செய்து முடிப்பவர் என்று, நாம் என்றும் தாராளமாகச் சொல்லலாம் அல்லவா? மனவுறுதியில், எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் வகையில், அவர் நெப்போலியனுக்கும், பிரிட்டிஷ் தளகர்த்தரான லார்டு நெல்சனுக்கும் பின்வாங்கியவரல்லர். ஆனால், அவர்கள் சென்ற வழி வேறு; இவர் சென்ற வழி வேறு. இவர்களில் எவர் சென்ற வழி ஏற்றமுடையதென்று யார் சொல்வது?

ஸ்காட்டைப்போல் இந்திய மக்களிற் பல்லாயிரக் கணக்கானவர்கள் ஊக்கமுடையவர்களாய் விடுவார்களானால் - ஆவதற்கேனும் நினைப்பார்களானால் - அப்போதே இவ்விந்திய நாடு பொன்னாடாக மாறுமென்பதற்கு ஐயமும் உளதோ?

# இரண்டாம் பகுதி

## ஜான் மில்டன்

### இளமை வாழ்க்கை

ஆங்கிலப் பெருங்கவிகளில் ஜான் மில்டன் என்பவரும் ஒருவராவர் என்பதை, ஆங்கிலம் கற்றோரில் அறியாதவர் ஒருவருமிலர். மில்டன் துரைமகனார் 'கவிகள் கருவிலே திருவுடையர்' என்பதற்குத் திருஷ்டாந்தமாகக் கவிபாடுவதில் இயற்கையிலேயே ஒருவகை வன்மை பெற்றவராவர். அவர் கவி ஒருவிதத் தனிச்சுவையும், தனிவளமும் உடையது. அவரது கவியைப் படித்து அவரைப் போற்றாத அறிவாளிகள் இல்லையென்றே சொல்லலாம்.

இத்தகைய மகாகவி, முதல் 'ஜேம்ஸ்' இங்கிலாந்தை ஆண்டுகொண்டிருந்தபோது, இலண்டன் நகரத்தில் இருக்கும் 'பிரட்' தெருவில் (Bread Street) உள்ள 'ஸ்ப்ரட் ஈகில்' (Spread Eagle) என்னும் பெயரினையுடைய வீட்டில், ஆயிரத்து அறுநூற்று எட்டாவது வருடம், கிறிஸ்மஸ் பண்டிகைக்குப் பதினைந்து தினங்களுக்கு முன்னால், தம்முடைய தகப்பனாருக்கு முதற்பிள்ளையாகப் பிறந்தார்.

அவருடைய தந்தையார் பேரறிவும், எக்காரியத்தையும் வளம்படச் செய்துமுடிக்கும் நேர்மையும் வாய்ந்தவர். அவர் தம்முடைய ஓய்வு நேரங்களையெல்லாம் தமது அருமைக் குமாரருக்குக் கல்வி கற்பித்து வந்தார். அவர் மில்டனுக்குப் போதித்துவந்த



முறை நேர்மையானது. தகப்பனார் கையாடிய முறையே புத்திரருடைய பிற்கால வாழ்க்கைக்குப் பெரும் பயன் விளைவிப்பதாயிருந்தது. மில்ட்டன் தகப்பனார் சங்கீதப் பிரியர். அவருக்கு நன்றாய்ப் பாடவும், வாத்தியக் கருவிகளைக் கையாடவும் தெரியும். அவர் அடிக்கடிப் பாடிக்கொண்டே சங்கீதக் கருவிகளையும் உபயோகப் படுத்துவார். அவர் அருகிலேயே இருந்து கொண்டிருந்த மில்ட்டனும் பாடக் கற்றுக்கொண்டார்.

மில்ட்டன் பேசக் கற்றுக்கொண்டவுடன் பாட ஆரம்பித்தார் என்றே சொல்லவேண்டும். அவர் ஒருவாறு பேச ஆரம்பித்த இளம் பருவத்திலேயே தந்தையார் நாடோறும் வாசிக்கும் 'ஆர்கன்' என்னும் ஒரு வகை வாத்தியத்தினிடம் சென்று, தம்முடைய இன்பத்தைக் கருதியே அதைத் தமது மெல்லிய கரங்களால் தொட்டு மெல்லிய ஓசையை எழுப்புவார். அவர் இளம் வயதிலும்சரி; முதுமையிலும்சரி; அழகுடையவராகவேயிருந்தார். அவர் பத்து வயதுள்ள சிறுவராயிருந்தபோது அவருடைய உருவப் படம் வர்ணம் தீட்டப்பட்டது. அப்படம் இன்னும் சீர்கெடாமல் இருக்கின்றது. அவர் முகம் எப்போதும் அவருடைய ஆழ்ந்த கருத்தை விளக்கக்கூடியதாய் இருந்தது. கறுப்புடை யணிந்து, கழுத்தைச் சுற்றிலும் தொங்கும்படி கத்தரித்துவிட்ட தலை மயிரோடுங் கூடிய அவருடைய தோற்றம், காண்போர் மனத்தில் இன்பத்தைப் பெருக்கியது.

இளம்பருவத்திலேயே மில்ட்டன், அக்காலத்தில் இலண்டன்மா நகரத்தில் இருந்த சில பெரிய பள்ளிக்

கூடங்களில் ஒன்றாகிய 'சென்ட்பால்ஸ்' (St. Paul's) பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். மில்ட்டன் பள்ளிக்கூடத்திலும் சரி; வீட்டிலும் சரி. கல்விசம்பந்தமாக மிகுதியும் உழைத்து வந்தார். அவருடைய உழைப்பு அவருக்கு ஒருவகையில் தீமையையும், மற்றொரு வகையில் நன்மையையும் கொடுத்தது. பொதுவாக அவர் எப்போதும் இரவில் பன்னிரண்டு அல்லது ஒரு மணி வரையில் படித்துக்கொண் டிருப்பார். இயற்கையிலேயே அவர் கண்பார்வை கொஞ்சம் மந்தமுடையதாயிருந்தது. ஓயாது அவர் படித்து வந்ததனால் அவருடைய பார்வை பின்னும் அதிகமாகக் கெடலாயிற்று.

மில்ட்டன் எப்போதும் வசன நடையைப் படிப்பதைப் பார்க்கிலும் பாட்டுக்களைப் படிப்பதிலேயே பிரியமுடையவராயிருந்தார். அவர் ஓயாது பாட்டுக்களையே படித்துக்கொண் டிருந்தமையினால் அவருக்குத் தாமும் பாடவேண்டு மென்னும் ஆவல் உண்டாயிற்று. அந்த ஆவல் அவர் மனத்தில் வளரலாயிற்று. அவர் பதினைந்து வயதுடையவரா யிருந்தபோது இரண்டு பாக்களை எழுதினார். அப்போது அவருக்கிருந்த வயதை நோக்கும்போது அந்தப் பாக்கள் விசேஷமானவை யென்றே சொல்லலாம்.

அவருக்கு வயது பதினாறு ஆனபோது 'கேம்ரிட்ஜ்' கலாசாலைக்கு வாசிக்கச் சென்றார். அங்கே அவர் வாசித்துக்கொண் டிருந்தபோது பல பாக்கள் எழுதினார். அவைகளெல்லாம் இன்பம் நிறைந்தவைகளாகவும், கருத்தில் உயர்ந்தவைகளாகவும் காணப்பட்டன. அவைகளை யெல்லாம் அவருடைய சகபாடிகள்



பாடிச் சந்தோஷப்பட்டார்கள். 'கேம்பிரிட்ஜ்' கலாசாலையில் அவர் இருபத்துமூன்று வயது வரையில் வாசித்துக்கொண்டிருந்தார். அவர் நடுத்தரமான உயரமும், மெல்லிய தேகமும், நீண்டு வளர்ந்த தலைமயிரும் உடையவராயிருந்தார். அவருடைய முகம் பெண்களுடைய முகத்தைப்போல் மென்மையாயிருந்தது. அவருடைய குரலோசையும் பெண்களின் குரலோசையைப்போல் மிருதுவாய் இருந்தது. அதனால் அவருடைய சகபாடிகளிற் சிலர் அவ்ரை, 'அழகிய பெண்மணி' என்று அழைத்து ஆனந்தப்பட்டு வந்தனர். அவர் இளம் வயதுடையவரா யிருக்கையில் அவரிடம் இருந்த சுறுசுறுப்பை விடத் தற்போது அதிக சுறுசுறுப்பும், தீவிரமான முயற்சியும் அவரிட மிருந்தன. தமக்கு இருபத்துமூன்று வயது நிரம்பியபோது மில்ட்டன் ஒரு சிறந்தபாட்டை யெழுதினார். அஃது அளவிற் சிறியது; அழகிற் பெரியது. அப்பாட்டி லிருந்து-அப்போது அவர் ஒரு மனிதராய் விட்டபடியால்-அவர் எவ்வகை ஒழுங்குடன் நடக்கப் பிரியப் பட்டாரென்பதும், தம் கடமையை எவ்வகைச் சிறப்புடன் செய்ய ஆசையுற்றா ரென்பதும் தெரிகிறது.

மில்ட்டன் கேம்பிரிட்ஜ் கலாசாலையை விட்டு விலகிய பிறகு 'பக்கிங்காம் ஷையர்' (Buckinghamshire) என்னும் இடத்திற் கருகில் உள்ள 'ஹார்ட்டன்' (Horton) என்னும் நிச்சப்தமான கிராமத்திற்சென்று வசிக்கலானார். அங்கு மில்ட்டனுடைய தகப்பனார் தம்முடைய அந்திய காலத்தை அமைதியுடன் கழிப்பதற்காக ஏற்கனவே சென்றிருந்தார்.

கவிகள் விரும்பும் நிச்சப்தமும், அழகிய காட்சிகளும் ஆர்ட்டன் என்னும்கிராமம் உடையதாய் இருந்தது. அதனால், அங்குச் சென்றவுடன் அவர் பின்னும் பல பாக்களை யெழுதினார். அவைகளெல்லாம் கற்கண்டு கட்டிகளைப்போல் இருந்தன. மரங்களின் அடியில் உட்கார்ந்து பறவைகள் பாடுவதையும், அவைகள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து பறந்து செல்வதையும் கவனிப்பதில் மில்ட்டனுக்கு ஆனந்தம் அதிகம். மாலைக் காலங்களில் மலையின் கீழ் மறையும் சூரியனுடைய தோற்றத்தையும், நீரோடைகளின் வீழ்ச்சியையும் கண்டு அவர் பேரானந்தப்படுவார். இக்காலத்தில் அவருடைய மனத்தில் தோன்றிய ஆனந்தமே அவருடைய கவியின் வளத்திற்குக் காரணமாயிருந்ததென்று அவரையறிந்தோர் கூறுகின்றனர். இக்காலமே அவருடைய இன்பம் நிறைந்த காலமென்றும் சொல்கின்றனர்.

## தேசப் பிரயாணம்

மில்ட்டன் தேசப்பிரயாணம் செய்துவர விரும்பினார். சில நாடுகளையாவது கண்டு வர வேண்டுமென்று அவர் கடைசியாகத் தீர்மானித்தார். பிறகு அவர் தமது தந்தையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பைத் தமது சகோதரருக்கு விட்டுத் தாம் ஆயிரத்து அறுநூற்று முப்பத்தெட்டாவது வருடம் பிரயாணப்பட்டு 'இத்தலி' முதலிய நாடுகளைச்சென்று பார்த்து இன்பமடைந்தார். தேசப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று அவர் கொண்ட எண்ணம் ஈடேறியதைக் குறித்தும் அவர் ஆனந்தப்பட்டார். அவர் தமது தேசப் பிரயாணத்தைப் பதினைந்து மாதங்கள்



வரையில் நடத்திக்கொண்டிருந்தார். பின்னர்த் தமது நாட்டு நிலைமை ஒழுங்காக இல்லையென்பதை யறிந்து மில்ட்டன் தமது நாட்டுக்குத் திரும்பினார். 'தம்முடைய தேசம் துன்பத்தில் மூழ்கி யிருக்கையில் தம்முடைய இன்பத்திற்காக அயல் நாடுகளில் அலைந்துகொண்டிருப்பது எந்த ஆங்கிலேயருக்கும் கௌரவத்தைத் தராது' என்பது மில்ட்டனுடைய வாக்கு.

மில்ட்டன் தமது தந்தையை ஆர்ட்டனில் வந்து பார்த்த பிறகு, தாம் இலண்டனில் தங்கி, எட்டு வயதும், ஒன்பது வயதுமுடைய தமது நெருங்கிய சுற்றத்தார் ஒருவருடைய இரு மக்களுக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்துக்கொண்டு வந்தார். இவ்வகையில் அவருடைய காலம் அதிகமாகச் செலவழிந்துவிடவில்லை. ஆகையால் அவர் அதிகமாக எழுதிக்கொண்டும், படித்துக்கொண்டும் வந்தார்.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து மூன்றாவது வருடம் மில்ட்டன் கலியாணம் செய்துகொண்டார். ஆனால், அந்தக் கலியாணத்தினால், அவருக்கு எவ்வகை இன்பமும் உண்டாகவில்லை. மில்ட்டன் கடவுள் பக்தியையும், சாதாரண வாழ்க்கையையும் விரும்பக்கூடியவர். அவர் மனைவியோ அத்தகைய குணம் சிறிதுமில்லாதவள். அவளுக்கு ஆடம்பரமாக உடுத்தவேண்டும்; 'டம்ப'மாக வாழவேண்டும் என்னும் விருப்பம் அதிகம். கடவுளைப் பற்றியே அவள் கருதுவது கிடையாது. இத்தகைய காரணங்களினால் கணவனும் மனைவியும் இன்பமாக வாழ முடியாதவர்களானார்கள்.

விவாகம் செய்துகொள்ளுவதற்கு முன் மில்ட்டனுக்கு இருந்த இன்பம் விவாகம் செய்துகொண்ட

பின்னர் அவரை விட்டுப் பறந்தது. விவாகம் செய்து கொள்ளுவதற்கு முன் மிலட்டன் மனச் சந்தோஷமும், அமைதியும் உடையவராயிருந்தார். விவாகமான பிறகு அவர் மனத்தில் துன்பம் நிலைத்து விட்டது. வாழ்க்கை அவருக்கு இன்பமாகத் தோன்றவில்லை. அவர் மனைவியினால் அவருக்குச் சிறிதும் நன்மை உண்டாகவில்லையென்றே சொல்லலாம். நற்குணம் வாய்ந்த பெரும் புலவருக்கு இத்தகைய மனைவி வாய்த்தமைக்குக் காரணம், யாதென்று நாம் கூறுவது? எதிர்காலத்தில் அவர் தமது கண் பார்வையை இழந்து விடுவாரென்று, அவருக்கு வைத்தியர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி அவர் அடிக்கடி எண்ணியதினாலும் அவருக்கு மனோவேதனை அதிகரித்தது.

அநேக முறை மில்டனும், அவரது மனைவியும் பிரிந்து வாழ்ந்தனர். கலியாணமான ஒன்பது வருடங்களுக்குப் பிறகு அவருடைய மனைவி மூன்று பெண்களை விட்டு மரண மடைந்தாள். அந்த மூன்று பெண்களையும் காப்பாற்றவேண்டிய பொறுப்பு மில்டனுடையதாயிற்று. மில்டன் பல விஷயங்களைக் குறித்து அடிக்கடிச் சிறு சிறு துண்டுப் பிரசுரங்கள் அநேகம் எழுதி வெளியிட்டுவந்தார். அவைகள் இனிய எளிய நடையும், சொல்லாற்றலும் உடையவைகளாய் இருந்தன. அவர் கல்விக்காகத் தாம் செலவிட்ட காலத்தைக் கணக்கிட்டுப் பார்த்தார். அதனால் அவருக்கு உண்டான நன்மை என்னவோ மிகக் குறைவுதான். அதைப்பற்றி அவர் ஒரு துண்டுப் பிரசுரம் எழுதி வெளியிட்டார். அதனால் அவருக்குச் சிறிது நன்மை கிடைத்தது.



## சீர்திருத்தங்கள்

மில்டன் அடிக்கடி அரசாங்க விஷயமாகவும், கோயில்களின் விஷயமாகவும் எழுதி வந்தார். அவர் மனிதர்களுக்கு எவ்விஷயத்திலும் சுதந்தரம் வேண்டுமென்று எழுதிவந்தார். அவர், 'அரசாங்கம், கோயில், மதம் இவைகளில் மக்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டும்; அவ்வாறு இருந்தால்தான் தேசம் முன்னேற்ற மடையும்,' என்று பூரணமாக நம்பினார். இத்தகைய எண்ணம் நமது மதத்தைப்பற்றியும், நமது கோயில்களைப்பற்றியும் நம்மனோருக்கு வெகுவாக உண்டாகவில்லை என்றே சொல்லலாம்.

பல புத்தகங்கள் அச்சாகி விரைவில் வெளிவர வேண்டுமானால் அச்சுக்கூடங்களுக்கு அதிகச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று மில்டன் ஒரு புத்தகமெழுதி வெளியிட்டார். அது கம்பீரமான வசன நடையோடுங் கூடியது. மில்டன் காலத்தில் புத்தகங்கள் அச்சாகி வெளி வருவது இலேசான காரியமன்று. புத்தகம் எழுதுவோர் தாங்கள் எழுதும் புத்தகங்களை, அச்சுக்குப் போகுமுன், அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இருபது பெயர்கள் அடங்கிய ஒரு சபையாரிடத்தில் காட்டி அவர்கள் அனுமதி பெற்ற பின்னரே அச்சடிக்கவேண்டும். இத்தகைய வழக்கத்தால் உண்டான கேடுகளுக்கோர் அளவே இல்லை. இலஞ்சம் கொடுப்போரின் கேவலமான புத்தகங்களும் சபையாரின் அங்கீகாரத்தைப் பெற்றன. இலஞ்சம் தராதவர்களின் நல்ல புத்தகங்களிற் பல வெளிவராமலும் ஒழிந்தன. இத்தகைய வழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்று மில்டன் பெரிதும் பாடுபட்டார். அந்த

வகையில் அவர் உழைத்தஉழைப்பு எத்தனையோகோடி மக்கட்கு நன்மை தருவதாயிற்று. மில்ட்டன் எழுதிய புத்தகத்தில், 'இங்கிலந்து தேச முழுவதுமிருந்து வெளிவரக் கூடிய புஸ்தகங்களை யெல்லாம் இந்த இருபது பேர்களடங்கிய சபையார் மதிப்பிடக்கூடியவர்களா?' என்பது போன்ற பல விஷயங்களை எழுதியதோடும், அவர் காமன்ஸ் சபையாருக்கு, 'இருபது பேர்களடங்கிய சபையாருக்கு முன்னேவந்து, அவர்களுடைய மேற்பார்வையின் கீழ் புத்தகங்களெழுத எத்தனையோ அறிவாளிகள் சம்மதமின்றி யிருக்கின்றார்கள். அதனால் தேசத்தின் அறிவும், முயற்சியும் வீணாக்கப்படுகின்றன' என்றும் எழுதினார். மில்ட்டனுடைய முயற்சி வீணாகவில்லை. கடைசியாக அவர் எண்ணம் ஈடேறியது. அதனால் மில்ட்டனுடைய புகழ் இங்கிலந்து முழுவதும் பரவி அவருக்குப் பெருமை யளித்தது.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பதாவது வருடம் இங்கிலாந்து இருப்பதா, ஒழிவதா என்றெண்ணும்படி நன்னிலையில் இருந்து கீழ் நிலையை யடைந்தது. முதலாவது 'சார்லஸ்' என்பவன் பொதுமக்களால் கொல்லப்பட்டான். 'க்ராம்வெல்' என்பவனைத் தலைமையாகக்கொண்ட அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது மில்ட்டன் லாட்டின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

மில்ட்டனுக்கு ஏற்கனவே தமது கண்ணைப்பற்றிய கவலை அதிகமாயிருந்ததென்பது நமக்குத் தெரியும் அல்லவா? இன்னும் சில வருடங்களில் தமது கண் அடியோடு குருடாய் விட்டாலும் விடும் என்பது



மில்ட்டனுக்குத் தெரியும். இருந்தும், அவர் தேசாபிமானமே முதற் காரணமாகக்கொண்டு, தமக்குக் கிடைத்த வேலையை ஒழுங்காகப் பார்த்து வரலானார். அவர் அவ்வேலையை ஒப்புக்கொண்டு வஞ்சனையில்லாமல் உழைத்துவந்த காரணத்தால் மறுவருடத்தில் அவருடைய கண்களில் ஒன்று அடியோடு பார்வையற்றுப் போயிற்று. 'பின்னும் ஓயாமல் எழுதுவதும், படிப்பதுமாகிய வேலையைச் செய்துவந்தால், மற்றொரு கண்ணும் போய்விடும்' என்று, டாக்டர்கள் மில்ட்டனுக்குச் சொன்னார்கள். 'அப்படியானால் நான் என் கண்ணைக் காப்பாற்றிக் கொள்ளுகிறதா? என் தேசத்துக்கு என்னுடைய கடமையைச் செய்கிறதா?' என்று மில்ட்டன் எண்ணினார். கடைசியில் அவர் தம் கண்ணைப்பற்றிய எண்ணமே யில்லாமல் தேசத்திற்காகவே உழைப்பவரானார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவருடைய மற்றொரு கண்ணும் குருடாயிற்று. தமது நாற்பத்துமூன்றாவது வயதில் மில்ட்டன் முழுவதும் குருடரானார். அதுவரையில், உலகத்தில் இப்போதும் அவர் புகழை நிறுத்திக்கொண்டிருக்கும் நூல்களில் ஒன்றும் எழுதப்படவில்லை. இனி, நாம் சொல்லிவருவதைத் தவிர, மில்ட்டன் தாமே எழுத முடியாதவரானார்.

ஆயிரத்து அறுநூற்று அறுபதாம்ஆண்டு இரண்டாவது 'சார்லஸ்' அரசனாக, இங்கிலாந்தின் சிம்மாசனத்திலேறி யமர்ந்தான். காரியதரிசி வேலை மில்ட்டனுக்குப் போய்விட்டது. அதுமட்டுமன்று, மில்ட்டனுடைய எண்ணம், நோக்கம் முதலியவை யாவும், அழியும் நிலைமைக்கு வந்துவிட்டன. 'க்ராம்வெல்'

என்பவன் இறந்தான். சுதந்தரம் என்பது பறந்தது. மில்ட்டனுடைய இருபது வருட உழைப்புப் பிரயோசன மில்லாமற் போய்விட்டது.

மில்ட்டனுக்கு நேர்ந்த இத்தகைய துன்பங்களே அவருடைய பெருமையை விளக்குவதற்குக் காரணமாய் இருந்தன. வெளியாரிடத்தில், வெளியுலகத்தில், அவருக்கிருந்த நம்பிக்கை போயிற்று. இனி அவர் தம்முடைய முயற்சியையே நாடினார். அவருடைய 'பெருந்தனிமை' அவருக்கு நன்மை யளிப்பதாயிற்று. மில்ட்டன் ஆங்கில பாஷைக்கே பெருங் கௌரவம் அளிக்கக்கூடிய மூன்று பெரும் நூல்களை இயற்றக்கூடிய காலம் நெருங்கியது. மில்ட்டனுடைய கடைசி ஏழுவருடகாலம் மிகவும் மேன்மையுடையதென்றே சொல்ல வேண்டும்.

### அந்தியகாலம்

மில்ட்டன் தம் கண்களையும், உலகத்தார் கௌரவம் என்று நினைக்கும் போலிக் கௌரவத்தையும் இழந்த பிறகு இலண்டனில் உள்ள 'ஆர்ட்டிலரி' வீதியில் (Artillery Street) தங்கி வசிக்கலானார். அவர் தமது அறையில் பச்சைவர்ணம் பூசப்பெற்ற பழைய நாற்காலியில் உட்கார்ந்திருப்பார். அவரைப்பார்க்க வெளிநாட்டார் பலர் அடிக்கடி அவர் இருப்பிடத்திற்கு வருவது வழக்கம். இலண்டன் நகரத்திற்கு வரும் வெளிநாட்டார் பலர், சிறந்த புலவராகிய மில்ட்டனைப் பார்க்காமற் போகமாட்டார்கள். மில்ட்டன் சில சமயங்களில் இனி ஒருபோதும் தாம் பார்க்க முடியாத சூரியனுடைய கிரணங்கள் தம்மீது படும்படி தமது வீட்டின் முன்புறத்தில்



உட்கார்ந்துகொண் டிருப்பார். அவர் தாம் தமது இளமையில் பழகிய 'ஆர்கன்' என்னும் வாத்தியத்தை அப்போதும் பிரியத்தோடு வாசித்து வரலானார். சில சமயங்களில் அவர் வாய்விட்டுப் பாடுவார். அவர் சீக்கிரமாக எழுந்துவிடுவார். சீக்கிரமாகவே படுக்கைக்குச் சென்றுவிடுவார். ஆனால், அவர் படுக்கையில் படுத்தவுடன் தூங்கிவிடுவார் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் அவர் தம்முடைய பெருங் கவியின் இரண்டொரு அடிகளை மேலே எவ்வாறு கொண்டு செல்வதென்று எண்ணி யெண்ணி இரவு முழுவதும் தூங்காமலே இருந்து விடுவார். சில இரவுகளில் அவர் தாம் பாடவேண்டியவைகளை வெகுவிரைவில் முடிவு செய்து கொள்ளுவார். பொழுது விடிந்தவுடன் அவர் தாம் இரவில் எண்ணிய கருத்துக்களை அமைத்து, ஒருவர் எழுதிக்கொண்டேவர, தாம் சொல்லிக்கொண்டே போவார். அவ்வாறு அவர் சொல்லும்போது, தட்டுத்தடங்கலின்றி ஒருவரால் எவ்வளவு வேகமாக எழுதமுடியுமோ அவ்வளவு வேகமாகச் சொல்லிக்கொண்டே போவாராம்.

ஆயிரத்து அறுநூற்று அறுபத்தைந்தாம் ஆண்டில் மகாகவியாகிய மில்ட்டன் 'மோட்ச இழப்பு' (Paradise Lost) என்னும் காவியத்தைப் பாடி முடித்தார். அப்பாட்டு எதுகை முதலியன இன்றிச் சாதாரண வகையில் (Blank Verse) பாடப்பெற்றதாயினும், படிப்போர் உள்ளத்தைப் பரவசப் படுத்தக்கூடிய பான்மை யுடையது என்பதில் ஐயமே யில்லை. அஃது ஆதாம் ஏவாளைத் தேவன் ஏடன்

தோட்டத்திலிருந்து துரத்தி விட்டதையும், இன்னும் பல விஷயங்களையும் கொண்டதாகும். முதலில் அந்தப் புத்தகம் விற்பனையாகவேயில்லை. ஏனெனில், புத்தகத்தின் பெயரில் இருந்து அப்புத்தகம் எதைப்பற்றிச் சொல்கின்றது என்பதே ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் புத்தகத்தைக் கையிலெடுத்து அதைத்திறந்து அதிற் சிறிது படித்துப் பார்த்தவர்கள் எவரும் அதை வாங்காமற் போகவில்லை. பின்னர், சிலகாலம் பொறுத்து அப்புத்தகம் அதிகமாக விற்பனையாயிற்று. அந்நூலை எழுதிய ஆசிரியரைப் பார்க்கவேண்டும் என்று எண்ணி அநேகர் மில்டனை வந்து பார்த்துப் போயினர். ஆனால், அந்நூலுக்காக மில்டன் பெற்றதொகை பத்துப் பவுனுக்கு அதிகமில்லை. இப்போது அந்தப் புத்தகத்தின் மூலமாகப் பிரசுரகர்த்தர்கள் ஆயிரமாயிரமாகப் பொருள் சேர்க்கின்றனர். மில்டன் தமக்குக் கவிபாடுவதில் இருந்த ஆவலினால் அந்த நூலை இயற்றினார் என்று தெரிகிறதேயன்றிப் பொருள் காரணமாக அந்த நூலை இயற்றினாரென்று எண்ண இடமில்லை. பிறகு மில்டன் 'மோட்ச மீட்சி' (Paradise Rcgained) என்னும் நூலை இயற்றினார். இந்த நூல் நன்றாக விற்பனையாயிற்று. கடைசியாக மில்டன் எழுதிய நூல் 'சாம்சன்' என்னும் குருடனைப்பற்றியதேயாகும். மில்டன் சாம்சன் என்னும் ஒருபெயரை வைத்துக்கொண்டு ஒருநூல் எழுதினாரேனும் அந்நூலில் காணப்படும் விஷயங்களெல்லாம் மில்டனுடைய வாழ்க்கைக்குப் பெரும்பாலும் ஒத்தே இருக்கின்றது. அந்நூலில் காணப்படும் அநேக விஷயங்கள் மில்டனுடைய உள்ளத்தில்



இருந்து உருகி வெளிவந்தவை என்று கூறலாம். அந்நூல் வெளிவந்த பின்னர், மூன்றேவருடம் மில்டன் உயிரோடு இருந்தார். 'இறந்தவர்களோடு நானும் விரைவிற் சென்று ஆறுதலடைவேன்' என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தார்.

ஆயிரத்து அறுநூற்று எழுபத்து நான்காவது வருடம் நவம்பர் மாதம் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு மில்டன், தம்முடைய அறுபத்தாறாவது வயதில், தமது புகழுடம்பை இங்கு நிறுத்திப் பூதவுடம்பை நீத்துப்போய்விட்டார். மில்டனுடைய கம்பீரமான, கௌரவமான, பரிசுத்தமான வாழ்க்கை முடிவடைந்தது. அவருடைய அயலார் பரிசுத்தமான இருதயத்தையுடைய ஒரு கவியை இழந்தனர். மில்டன் இருக்கப் பெறுமையினால், அவர் இருந்த வீட்டின் வெளிவாயிற்படி பொலிவிழந்து காணப்பட்டது. ஆயினும், மில்டன் இறந்தமையினால் தாங்கள் பெரிய நன்மையை இழந்துவிட்டதாக மில்டனுடைய அயலார் நினைக்கவில்லை. அப்போதிருந்த அவ்வயலார் அவ்வளவு அறிவாளிகள் அல்லர். மில்டன் இறந்த அநேக வருடங்களுக்குப் பிறகே, அவருக்கு ஏற்பட்ட புகழைக்கண்டு, அவருடைய அயலார் 'ஒரு சிறந்த புலவர் தங்களுக்கு இடையே இருந்து இறந்தார்' என்று உணர்ந்தார்கள். நல்லாருக்குக் கௌரவம் காலடைவில்தான் வரும்.

மில்டனுக்கு இளமையில் இருந்த கல்வியைப் பற்றிய ஆவலே இறுதியில் அவருக்கு அழியாப் புகழை யளித்தது.

நம் நாட்டினர் இவ்வாறு இளமையிலேயே நற்காரியத்தில் ஈடுபட்டு உழைத்து வருவார்களானால், அவர்களுக்கு உண்டாகக்கூடிய நன்மையை உரைக்கவும் வேண்டுமோ?

## மூன்றாம் பகுதி

# தாமஸ் கார்லயில்

### இளமையும் கல்வியும்

தாமஸ் கார்லயில் என்னும் பெரியார், ஸ்காட்லந்து தேசத்திற்குப் பெருமை யளித்த கல்வியாளர்கள் எவருக்கும் பிற்பட்டவரல்லர். அவர் உண்மையும் உயர்வும் வாய்ந்த மனத்தினர். அவர் எந்தக் காலத்திலும் தமக்கு உண்மை யென்று தோன்றியதைச் சிறிதும் அஞ்சாது பேசியும், எழுதியும் வந்தார். அவ்வாறு எழுதுவதே அவர் தமது முதற் கடமையும், முக்கிய கடமையுமாகும் என்று எண்ணினார். எந்த விஷயத்திலும் அஞ்சாது உண்மையை எடுத்துரைப்பதே தேச முன்னேற்றத்திற்கான செய்கையாகும் என்றும், அச்செய்கையை இடைவிடாது செய்வதே தாம் தமது தேசத்திற்குச் செய்யக்கூடிய கடமையாகும் யென்றும் கார்லயில் கருதினார்.

ஒருவர் புகழ்வதைக் கண்டு சந்தோஷமடைவதும், இகழ்வதைக் கண்டு துன்பமடைவதும் அவர் குணமன்று.

இத்தகைய அருங்குணம் வாய்ந்த தாமஸ் கார்லயில் என்பார், ஸ்காட்லந்து தேசத்தில் இருக்கும் 'டம்ரீஸ்ஷைர்' (Dumfriesshire) பகுதியைச்சார்ந்த, விவசாயத்திற் கேற்ற சீர்திருத்தங்கள் நன்றாகச் செய்யப்பட்ட, 'அனந்தேல்' (Annandale) ஜில்லாவில் உள்ள, 'எக்கல்பிக்கேன்' (Ecclefechan) என்னும் ஒரு வியாபார நகரத்தில் ஒழுங்கற்ற ஒரு தெருவில் இருந்த,



Thomas Carlyle

ஒரு சாதாரண வீட்டில், ஒரு கல்தச்சருக்கு முதற் பிள்ளையாக ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றைந்தாம் வருடம் 'டிசம்பர்' மாதம் நான்காந்தேதி பிறந்தார். அவருக்குப் பின்னால் *அக்கல்தச்சருக்குப் பிறந்த மக்கள் எண்மராவர். தம்முடைய ஒன்பது குழந்தைகளையும் தமது அற்ப வருவாயைக் கொண்டு காப்பாற்ற முடியாமல் அக்கல்தச்சர் கஷ்டப்பட்டார். இக்காரணத்தினால் கார்லயில் இளமையில் தரித்திரத்தோடு உறவாடிக்கொண்டே வளர வேண்டியவரானார். ஆகவே, அவர் தமது இளம் பருவத்தில் போதுமான உடை யில்லாமலே, தமது சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளோடு தெருவில் ஆடிக்கொண்டு இருந்தார். இவ்வாறு அவர் கிடைத்ததை உண்டு சுதந்தர வாழ்க்கையில் புரண்டு கொண்டு இருந்தார்.

கார்லயிலுக்கு வயது ஐந்தானபிறகு அவருடைய தகப்பனார் அவருக்குச் சிறு கூட்டல்கணக்குகளைக் கற்றுக் கொடுத்துக்கொண்டு வந்தார். பிறகு அவர் ஏனைய சிறுவர்களோடு தமது குமாரராகிய கார்லயிலையும் கிராமப் பள்ளிக்கூடத்திற்குப் போய்வரச் செய்தார். அந்தப் பள்ளிக்கூடத்தில் கார்லயில் வெகு விரைவில் எல்லாப் பிள்ளைகளுக்கும் மேலாகச் சிறப்புற்று விளங்கினார். அதனால் அவருடைய தகப்பனார் அவரை வேறு புதியதொரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார். அவர் தமது பிள்ளைகளில் படிக்க விரும்பியவர்களை எப்போதும் தடை செய்ததே கிடையாது. 'என் பிள்ளைகள் கற்பதற்கு நான் இடையூறு செய்கிறவனாய் இருக்கமாட்டேன்' என்று கார்லயிலின் தந்தையார் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.

ஒருநாள் இளஞ் சூரியன் பிரகாசிக்கும் காலை நேரத்தில், கார்லயில் தமது தகப்பனாரோடு 'அனன்' (Annan School) பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தார். அப்போது, 'நாம் ஒழுங்குள்ள ஒரு மாணவனாகக் கூடும்; நாம் கல்வியில் முன்னேற்றமடைவோம்.' என்னும் நம்பிக்கை இளைஞராகிய கார்லயில் மனத்தில் குடிகொண்டு இருந்தது. கார்லயில் இளமையில் எந்த விஷயத்திலும் பெருங் கூச்சமுடையவராயிருந்தார். அவர் எப்போதும் ஒழுங்கற்ற முரட்டுப் பிள்ளைகளைக் கண்டால் அவர்களிடத்தில் தாம் அருவருப்புக்கொள்ளுவது வழக்கம். துன்பப்படுகிறவர்களிடத்தில் அவருக்கு எப்போதும் அளவு கடந்த இரக்கம் உண்டாவது இயல்பு. தம்முடைய வாழ்நாட்களில் தம்முடைய எந்த நிலையிலும் அவர் துன்பப்படுகிறவர்களுக்குத் தம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்யாமல் இருந்ததில்லை. கார்லயில் தமது வாழ்நாட்களில் பலமுறை பலருக்கு நன்மை செய்திருக்கின்றார். அவ்வாறு அவர் பலருக்குப் பலமுறை நன்மை செய்தபோது ஒருமுறையாவது பிறருக்கு நன்மை செய்வதால் மோட்சம் கிடைக்குமென்றும், செய்யாமையினால் அது கிடைக்காமற் போகக்கூடுமென்றும் எண்ணியதே கிடையாது. மோட்சமாகிய பயனைக் கருதித் கருமம் செய்யும் அறவிலை வணிகர் அவர் அல்லர். இயற்கையிலேயே அவர் மனத்தில் அன்பு நிறைந்திருந்தது. அத்தகைய அன்பே துன்பங் கண்டவிடத்தில் வலிந்து சென்று கைம்மாறு கருதாது அத்துன்பத்தைப் போக்க அவருக்குத் துணையாய் இருந்தது. மோட்சத்தையாவது, புகழையாவது கருதிக் கார்லயில் பிறருக்கு



உதவி செய்தவர் அல்லர் என்பதற்கும், இயற்கையிலேயே அவர்மனத்தில் குடிகொண்டு இருந்த கருணையே அவர் பிற உயிர்களிடத்தில் அன்பு கொண்டிருந்ததற்குக் காரணமாயிருந்தது என்பதற்கும் அவர் மோட்ச நாகங்களைப்பற்றியோ, புகழைப் பற்றியோ ஒரு சிறிதும் அறியாதிருந்த அவருடைய சிறு பருவத்தில் செய்த பெருங் காரியமொன்றை இங்குக் குறிப்பிடுவோம்.

தாமஸ் கார்லயில் சிறுவராயிருந்தபோது அவரை ஒருநாள் அவருடைய தாய்தந்தையர் தம் வீட்டையும் மற்ற குழந்தைகளையும் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுச் சமீபத்தில் இருந்த சந்தைக்கு, வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டு வருவதற்காகப் போனார்கள். அன்று குளிர் அதிகமாயிருந்தது. அந்தக் குளிரைத் தாங்குவதற்கு ஏற்ற ஆடையில்லாத பிச்சைக்காரனொருவன் தேகம் நடுங்க, பசியால் மெலிந்து, நடக்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டே சிறுவராகிய கார்லயிலின் வீட்டு வாயிற்படியினருகில் வந்தான். அவனுடைய தாங்கமுடியாத தரித்திர நிலைமையைக் கண்ட கார்லயிலின் மனம் உருகியது.

உடனே கார்லயில், 'என் தாய்தந்தையர் எனக்கு அவ்வப்போது கொடுத்த காசுகளை நான் மண் உண்டியில் போட்டு எவரும் எடுத்துக் கொள்ளாதபடி வீட்டில் உள்ள சுவரின் உச்சியில் வைத்து இருக்கிறேன். இப்போது அந்த உண்டியை எடுத்துவந்து அதை உடைத்து அதில் இருக்கும் காசுகளை இந்த எளிய பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிடுகிறேன்'

என்று எண்ணினார். பின்னர், அவர் தாம் எண்ணிய படியே செய்தார். இவ்விஷயத்தைப் பற்றிக் கார்லயில் சந்தர்ப்பம் வந்த விடத்து ஒருமுறை தாமே சொல்லியிருக்கின்றார்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அவர் அதிகமாக மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவது கிடையாது. 'விளையாடும்போது சிறுவர்கள் மரியாதைக் குறைவாகப் பேசுகிறார்களாகையால் நான் விளையாட்டை விரும்புவதில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

இக்காலத்திலும் அநேகம் பிள்ளைகள் விளையாடும்போது மரியாதை தெரியாமல் ஒருவரை ஒருவர் கேவலமாகப் பேசிக்கொள்ளுவதும், அடித்துக் கொள்ளுவதுமாக விருக்கின்றனர். இதனால் அவ்விளையாட்டு முடிவில் விரோதத்தை உண்டாக்குகின்றது. பிள்ளைகள் எப்போதும் விளையாட்டில் இன்பம் பெருகச் செய்து கொள்ள வேண்டுமேயன்றித் துன்பம் பெருகும்படி செய்து கொள்ளக்கூடாது.

'ஆனன்' பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடியவளவு படித்த பிறகு கார்லயில் அப்பள்ளிக்கூடத்தை விட்டு விலகினார். அப்போது அவருடைய ஆசிரியர்கள் அவர் தந்தையைப் பார்த்து, 'நீர் உமது மகனை "எடின்புரோ யூனிவர்சிட்டி"க்குப் படிப்பதற்காக அனுப்பும். உமது மகன், எங்களுக்குத் தெரிந்தவரையில், கல்வியில் பெரிதும் ஊக்கமுடையவனாகவே யிருக்கின்றான்' என்று சொன்னார்கள்.

கார்லயிலின் தந்தையார் ஆசிரியர்கள் கருத்துப்படியே எப்படியாவது தமது குமாரரை எடின்புரோ



யூனிவர்சிட்டிக்கு அனுப்பிப் படிப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

இத்தகைய அவர் எண்ணத்தை அறிந்த பரந்த நோக்கமில்லாத அவருடைய அயலார்களிற் பலர் அவரைப்பார்த்து, உதட்டைப்பிதுக்கி, 'உன் மகனை இன்னுமா படிக்க வைக்கப் போகின்றாய்? பேஷ்! அவன் அளவுக்கு அதிகமாகப் படித்துப் பிறகு அதனால் கர்வம் அடைந்து பெற்றோர்களைக் கவனியாமற் போவதற்குக் காலம் வந்துவிட்டது போலும்' என்று கூறினார்கள்.

ஆனால், ஜேம்ஸ் கார்லயில், நமது தாமஸ் கார்லயிலின் தகப்பனார், மிகவும் அறிவுள்ளவர். அவருக்குத் தமது அயலாரைப்பார்க்கிலும் அதிக அறிவு இருந்தது. அவர், தம் நாட்டில் பிறந்த அறிவாளிகள் எழுதிய சாதாரண புத்தகங்களிலும் ஒன்றைக்கூட நன்றாய்ப் படிக்கத் தெரியாதவர்; தொடர்ச்சியாக மூன்று மாதங்கள்கூட அவர் பள்ளிக்கூடத்தில் வாசித்தறியாதவர்; பொதுவாகக் கல்வியின் மேன்மை இன்னதென்று நன்றாய் உணராதவர். அவ்வாறிருந்தும் அவர் தமது குமாரரிடம் முன்னுக்கு வருவதற்கேற்ற ஏதோ ஒரு வகை சக்தியிருப்பதை யுணர்ந்தார். இவ்விஷயத்தை அவருடைய அயலார்களில் கற்றவர்களும் அறியவில்லை.

ஒருநாள் காலையில் ஜேம்ஸ் கார்லயிலும், அவரது மனைவியும் தங்கள் கிராமத்தின் தெருவழியே பதினான்கு வயதுடைய தங்கள் குமாரராகிய தாமஸ் கார்லயிலோடு, அவரை எடின்புரோ நகரத்திற்கு வழிகூட்டி யனுப்புவதற்காகச் சென்றனர். சிறிது தூரம்

சென்றவுடன் தாய் தந்தையர், மைந்தனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வருந்திய மனத்தோடு வீட்டிற்குத் திரும்பினர். தாமஸ் கார்லயில், தமது தகப்பனார் ஏற்படுத்திய துணைவரோடு, நூறு மைல்களுக்கப்பாலுள்ள எடின்பரோ நகரத்திற்கு நடக்கத் தலைப்பட்டார்.

இக்காலத்தில் பதினைந்து வயதுள்ள நமது பிள்ளைகளிற் சிலர் இரயிலில் போய்வரச் சொன்னபோதிலும் நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள, அதற்குமுன் தாங்கள் சென்றறியாத, ஓர் ஊருக்குத் தனியே போய்வர இசையமாட்டார்கள்; ஒரு சமயம் பிள்ளைகள் தனியே போய்வரச் சம்மதித்தாலும் அவர்களின் தாய் தந்தையர்களிற் சிலர் தம்மக்களைத் தனியே அனுப்ப இசையார். நமது இளைஞராகிய கார்லயிலைக் கவனித்துப் பாருங்கள்; அவர் தந்தையின் தைரியத்தைச் சிந்தியுங்கள். கார்லயிலின் தந்தையார், தமது குமாரனை எடின்பரோ யூனிவர்ஸிட்டிக்கு அனுப்பிப் படிப்பிக்க வேண்டுமெனக் கருதினார். உடனே தகுந்த துணையுடன் நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள எடின்பரோ நகரத்திற்குத் தமது குமாரனை நடந்து போகச் செய்தார். பொருள் இல்லாமையினால், பதினைந்து வயதினையுடைய கார்லயில் 'கற்கவேண்டும்' என்னும் ஆவலால் தூண்டப்பட்டு நூறு மைல் தூரத்தையும் நடந்தே கடந்தார். இத்தகைய ஊக்கம் இந்தியநாட்டு மாணவர்களிடத்தில் இருக்குமாயின் இந்திய நாடு பொன்னாடாகுமன்றோ?

கார்லயில் எடின்பரோ உயர்தரக்கலாசாலையில் எவ்வாறு இருந்தார் என்பதைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. அவர் கணக்கில் மந்தமுடை-



யவராகவே யிருந்தார். அது சம்பந்தமாக நடந்த போட்டிப் பரீட்சைகள் ஒன்றிலும் அவர் பரிசுபெறவில்லை. ஆனால், நாம் நல்ல நடத்தையுடையவர் என்னும் பெரும்பெயரை அவர் அனைவரிடத்திலும் பெற்றார். சிறுவர்கள் தங்களுக்குள் ஏதாவது சச்சரவுகளேற்பட்டால் தாமஸ் கார்லயிலையே மத்தியஸ்தராகக் கொள்ளுவது வழக்கம். கார்லயில் சொல்லுகிற எவ்விதத் தீர்ப்புக்கும் அவர்கள் இணங்காமல் இருந்தது இல்லை. இவ்விஷயம் பின்னால் அவருக்கு வரக்கூடிய பெருமையை முன்னால் அறிவிப்பதாயிருந்தது.

கார்லயிலின் தந்தையார் கார்லயிலினிடம் கொண்டிருந்த அன்பு உள்ளத்தை உருக்கக் கூடியது. தமது குமாரர், தாமஸ் கார்லயில், விடுமுறையின்போது வீட்டிற்கு வருகிறாரென்று கேள்விப்பட்டால் தந்தையாராகிய ஜேம்ஸ் கார்லயில் என்பார் மைந்தன் வரும் வழி நோக்கிப் பலமைல் தூரம் நடந்துசென்று மைந்தனைக் கண்டு மகிழ்ச்சியோடு வரவேற்று அழைத்துக் கொண்டு வருவார். 'கடந்த ஞானியும் கடப்பரோ தன் மக்கள்மேற் காதல்' என்னும் உயரிய மொழி, ஜேம்ஸ் கார்லயில் தமது மைந்தர்மீது கொண்டிருந்த அன்பை எண்ணுந்தோறும், எமது உள்ளத்தில் தோன்றாமல் இருப்பதில்லை.

ஆயிரத்து எண்ணூற்றுப் பதினைந்தாவது வருடம் தாமஸ் கார்லயில் முடிவாகக் கலாசாலையில் கற்க வேண்டியவைகளைக் கற்று விலகினார். அப்போது, அவருடைய கல்வியின் உயர்வைக் கண்ட அவர் தாய் தந்தையர் தங்கள் குமாரர் அரசாங்க அமைச்சராகக் கூடும் என்று எண்ணினார்கள். மக்கள்பால் தாய்

தந்தையர் கொள்ளும் அன்பினால் அவர்கள் தம்மக்களின் எதிர்கால வாழ்க்கையைக் குறித்து அதிகமாக நினைத்து விடுகின்றனர்.

தம்முடைய எதிர்கால வாழ்க்கையைக் குறித்துக் கார்லயில் யாதும் சிந்தியாமலே யிருந்தார். முன்னர் அவர் படித்த, 'அனன்' பள்ளிக்கூடத்தில் காலியா யிருந்த ஓர் உபாத்தியாயர் வேலை அவருக்குக் கிடைத்தது. அவருக்கு உபாத்தியாயர் வேலை இன்பத்தைத் தாராமையினால் அவர் அவ்வேலையை விரைவில் விட்டு விட்டார். நாட்டுப்புறத்தைச் சார்ந்தபட்டணவாசத்து வாழ்க்கையை அவர் வெறுத்தார். கார்லயில் உபாத்தியாயர் வேலையை ஒழித்து விட்டவுடன் தனித்திருந்து ஓயாமல் படிப்பதிலேயே கருத்துள்ளவரா யிருந்தார்.

அச்சமயத்தில் ஜேம்ஸ் கார்லயில் 'எக்கல்பிக்கே'னில் (Ecclefechan) தாம் செய்து கொண்டிருந்த தொழிலைவிடுத்து எக்கல்பிக்கேயுக்குச் சமீபத்தில் ஒரு சிறிய விவசாயப் பண்ணையை ஏற்றுக்கொண்டார். அங்குக் கார்லயில் முதன் முதல் 'ஜர்மன்' பாஷையைக் கற்றுக் கொள்ளலானார். இவ்வகையில் அவர் இரண்டு வருடங்களைக்கழித்தார். தாமஸ்கார்லயில் இதுவரையில் உலகத்தாருக்குத் தெரியும்படியான வேலை ஒன்றையும் செய்யவில்லை. ஆனால் இரகசியமான பல வேலைகள் அவர் மனதிற்குள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வெளிப்படையாகப் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் உலகத்தாரைக் கார்லயில் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அதுவரையிலும் தம் மனத்தில் ஒளிரும் விஷயங்களை உலகத்தாருக்கு அளிக்க அவர் முன்வரவில்லை.



மறுபடியும் தாமஸ் கார்லயில் என்பார் 'கிர்க்கல்டி' (Kirkcaldy) என்னும் இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டார். அதே ஊரில் வேறொரு பள்ளிக்கூடத்தில் பேரறிவாளரான, 'எட்வர்டு இர்விங்' (Edward Irving) என்பார் உபாத்தியாயராகவிருந்தார். அவரும், தாமஸ் கார்லயிலும் வெகு சீக்கிரத்தில் சிறந்த நண்பர்களாயினர். இர்விங் என்பவரைப்பற்றிக் கார்லயில் எழுத நேர்ந்தபோது, 'அத்தகைய நண்பரை நான் இந்த உலகத்தில் முன்னும் கண்டதில்லை; பின்னும் காணப்போவதில்லை' என்று எழுதி யிருக்கின்றார்.

கார்லயிலுக்கு அடிக்கடி உணவுப் பொருள்கள், தாய் தந்தையரின் அன்பு கனிந்த வார்த்தைகள் அடங்கிய கடிதத்துடன், அனுப்பப்பட்டு வந்தன. தமது மைந்தருக்குச் சாதாரணமாகத் தாமே கடிதம் எழுதுவதற்காகவே கார்லயிலின் தாயார் எழுதக் கற்றுக் கொண்டார் என்கின்றனர். தமது தாயார் எழுதிய அரைகுறையான வார்த்தைகளைக்கொண்டு தாயாரின் கருத்து இன்னதென்று கார்லயில் அறிந்து ஆனந்தப்படுவார். கார்லயில் சமயம்நேர்ந்தபோதெல்லாம் தமது தாயாருக்குத் தாம் வருந்தி உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு உயர்ந்த கம்பளிப் போர்வையையும், வேறு அவசியமான பல பொருள்களையும் வாங்கி அனுப்புவார். குமாரர் அனுப்பும் பொருள்களைக் கண்டு அன்னையார் அடையும் மகிழ்ச்சிக்கோர் அளவுண்டோ?

கடைசியாகக் கார்லயில் தாம் மந்திரியாக வேண்டும் என்னும் எண்ணத்தை ஒருவாறு விட்டுவிட்டார்.

ஆனால் அந்த எண்ணத்தை முற்றிலும் ஒழித்து விடுவது அவருக்குச் சிரமமான காரியமாய் இருந்தது. தம்முடைய தாய்தந்தையர்களுக்குத் தாம் மந்திரியாக வேண்டுமென்னும் எண்ணமிருப்பதையும், அவர்கள் அதுவரையில் தமக்குச் செய்த உதவியை மறந்து அவர்கள் எண்ணம் நிறைவேறாதபடி தாம் நடந்து கொள்ளுவது தகுதியல்லவென்பதையும் குறித்துக் கார்லயில் பலமுறை எண்ணியது உண்டு. ஆனால் உண்மையில் அவருக்கு எது விருப்பமில்லையோ அதைப் பற்றி முயற்சிசெய்யும் வழக்கம் அவரிடம் கிடையாது. கடைசியாக, மறுபடியும் அவருக்குத் தாம் மேற்கொண்ட உபாத்தியாயர் வேலையில் வெறுப்பு உண்டாயிற்று. ஆகவே அவர் முன்போலவே அவ்வேலையை ஒழித்து விட்டுத் தமது நண்பராகிய 'இர்விங்' என்பாரோடு எடின்பரோ நகரத்திற்குச் சென்று மிகவும் கஷ்ட நிலையில் மூன்று வருடங்களைக் கழித்தார். இந்த வருடங்களைக் குறித்துக் கார்லயில், 'துன்பம் நிறைந்த மூன்று வருடங்கள்' என்று கூறியிருக்கின்றார்.

இந்த மூன்று வருடகாலம்வரை அநேகமாக அவரைப் பற்றிய விஷயம் மற்றவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. இக்காலத்தில் அவர் தம்மை அறிந்தவர்களிடத்தில் புகழ் குன்றி நின்றார். தம் மனத்தில் தோன்றிய உண்மைகளை அவர் உள்ளது உள்ளவாறே சொல்லி வந்தமையினால் அவரை அறிந்தோர் அனைவரும் அவரை, 'கர்வி, அகங்காரி, தரித்திரன், அழகற்ற பார்வையையுடையவன்' என்று தூஷித்தனர். இவைகளையெல்லாம் கார்லயில் பொருட்படுத்தாது



தமது காரியத்திலேயே கண்ணாயிருந்தார். அவருடைய உணவுக்கு வேண்டியவைகள் யாவும் வாரந்தோறும் அவருக்கு அவருடைய வீட்டில் இருந்து வந்துகொண்டிருந்தன. அவைகளைக் கொண்டுவரும் ஆள்வசம் தமது உடைகளைச் சலவை செய்து அனுப்புமாறு தமது தாயாருக்குக் கார்லயில் அனுப்புவார். அவர் விரும்புகிறபடியே அவர் தாயார் அவர் அனுப்பும் உடைகளைச் சலவை செய்து அனுப்பிக்கொண்டிருப்பார்.

இவ்வளவு நன்மைகள் கார்லயிலுக்குத் தம்முடைய வீட்டிலிருந்து கிடைத்துக்கொண்டிருந்தன. இவ்வாறிருந்தும் அவர் சந்தோஷ மற்றவராகவே யிருந்தார். இத்தகைய நிலை கார்லயிலுக்கு அதிக வெறுப்பாய் இருந்தது. அவ்வளவு வெறுப்பு எப்போதும் அவருக்கு வேறு எந்த விஷயத்திலும் இருந்ததில்லை. அவர் சோர்வுற்ற முகத்துடன் பலவிடங்களிலும் அலைந்து கொண்டிருந்தார். அவர் வீட்டாருக்கு அவரைப்பற்றிய கவலை அப்போது அதிகமாய் இருந்தது. அதையறிந்த கார்லயில் தமது வீட்டாருக்கு எழுதிய கடித மொன்றில், 'என்னைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் ஆயாசப்பட வேண்டாம். நான் என்றைக்காவது ஒரு நாளைக்கு முன்னேற்ற மடைவேன் என்று நம்புங்கள்' என்று எழுதியுள்ளார்.

ஆயிரத்து எண்ணூற்று இருபத்தோராவது வருடமுதல் கார்லயிலுக்குச் சிறிது நல்லகாலம் பிறந்ததென்றே சொல்லவேண்டும். அவருக்குப் பத்திரிகைகளுக்கு வரும் புத்தகம் முதலியவைகளுக்கு அபிப்பிராயம் எழுதும் வேலை கிடைத்தது. அதனால்

அவருடைய வருவாய் அவர் செலவழித்தும் மிச்சப் பட்டது. ஒருமுறை கார்லைல் தமது தகப்பனருக்கு ஒரு ஜதை மூக்குக்கண்ணாடியும், தாயாருக்கு, அவர் இஷ்டப்படி செலவுசெய்து கொள்ளுவதற்காக, ஒரு 'சவரனு'ம் அனுப்பி, 'இன்னும் ஏதாவது வேண்டுமானலும் அனுப்புகிறேன்' என்றும் எழுதினர். தம் மைந்தரிடமிருந்து வந்த சிறந்த வெகுமதியைக் கண்ட பெற்றோர் அதிக ஆனந்தம் அடைந்தனர். உடனே தாயார், தமது குமாரருக்கு, 'மகனே, இனி எங்களுக்குத் தேவையுள்ள பொருள் ஒன்றுமில்லை. நீ உன் தேக சுகத்தை நன்றாய்க் கவனித்துக் கொள்' என்று எழுதினர்.

## ஆசிரியராதல்

மாலைக் காலங்களில், ஒழிந்த நேரத்தில், தினந்தோறும், கார்லைல் 'பிரென்ச்' பாஷையிலிருந்து ஆங்கில பாஷையில் ஒரு புஸ்தகத்தை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு, எதைப்பற்றியும் எழுதக் கூடிய நிச்சயமான எண்ணம் ஒன்றுமில்லாவிடினும், 'சொந்தமாக ஏதாவது எழுதவேண்டும்' என்னும் அவா இருந்தது. அதற்குக் கடைசியாக அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. 'ஷில்லரின் ஜீவிய' (Life of Schiller)த்தோடு கார்லைல் தமது இலக்கிய வேலையை ஆரம்பித்துக் கொண்டார். பின்னர் அவர் 'இலண்டன்' நகரத்திற்குச் சென்று அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த 'இர்விங்' என்பவரைக் கண்டு இலண்டனில் சிலதினங்கள் தங்கியிருந்தார். இலண்டன் நகர வாழ்க்கையில் அவருக்குச் சிறிதும் இஷ்ட-



மேற்படவில்லை. அவர் அங்கும் இங்குமாக அலைந்து கடைசியாக இலண்டன் பிரசுர கர்த்தர்களிடமிருந்து ஏதோ சில வேலைகளைப் பெற்றுக்கொண்டு ஸ்காட்லந்துக்குப்போனர்.

ஆயிரத்து எண்ணூற்று இருபத்தாறாவது வருடம் அக்டோபர் மாதம் கார்லைல் 'மிஸ் வெல்ஷ்' என்னும் ஒழுக்கம் நிறைந்த மங்கையை மணம்செய்து கொண்டார். பின்னர் அவர் மணமகளோடு எடின்புரோ நகரத்தில் ஒரு சிறுவீட்டில் வசித்து வரலானர். தாம் எழுதிக்கொண்டிருந்த புத்தகம் முடிவடைந்தவுடன் கார்லைல் செய்வதற்கு வேறு வேலையில்லாமல் இருந்தார். அவர் மிகவும் ஏழையாய் இருந்தமையினல் ஒரு வேலையாளுக்குமேல் மற்றொரு வேலையாளை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியவில்லை. அதனல் வீட்டு வேலைகளில் பெரும் பகுதியை அவர் மனைவியே செய்ய வேண்டியதாய் இருந்தது. எது எப்படியாயினும் சரியே; கணவனும், மனைவியும் கலியாணமான பிறகு ஒன்றரை வருடம் வரையில் எடின்புரோ நகரத்தில் இன்பமாகவே காலங்கழித்து வந்தனர்.

பின்னர், கார்லைல் தமது மனைவியோடு 'டம்ரீஸ் ஷைர்லாண்டு' என்னும் இடத்தைச் சேர்ந்த 'கிரெய்கன் புட்டாக்' (Craigenputtock) என்னும் இடத்தில் தனித்த ஒரு வீட்டில் தங்கி வசிக்கலானர். அக்காலத்தில் அவர் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிலும் வேறு வீடுகள் கிடையா. தனித்திருந்த அவர் வீடு பாழடைந்த இல்லத்தைப்போல் தோன்றின. மழைக் காலத்தில் கார்லைலுக்குவருகிறகடிதம், 'பார்சல்' முதலியவைகளைக் கொண்டுவருவது, அவைகளைக்கொண்டு

வருகிறவனுக்கு, மிகவும் கஷ்டமாய் இருந்தது. இந்த நிலையிலும் கார்லயிலின் தாயார் கார்லயிலுக்குப் பால், பாற்கட்டி, கோதுமை முதலியவைகளைச் சேகரித்து அனுப்பிக்கொண்டு இருந்தார். கார்லயிலின் மனைவியார் வீட்டைச் சுத்தம்செய்வதும், சமைப்பதும், பசுவின் பாலைக் கறப்பதும் ஆகிய வேலைகளைத் தாமே செய்து வந்தார்.

இவைகளுக்கு இடையில் கார்லயிலின் பெருமை வெளியில் பரவலாயிற்று. அவரைச் சுற்றிலும் இருந்த ஜனங்கள் தங்களுக்கு இடையில் ஓர் அறிவாளி யிருப்பதை யுணர்ந்தனர். "எடின்பரோ ரெவ்யூ" என்னும் பத்திரிகை கார்லயில் எழுதியனுப்பும் எவ்விஷயத்தையும் எடுத்துக்கொள்ளத் தயாராய் இருந்தது. அதனால் கார்லயில் ஓயாமல் எழுதிக்கொண்டே யிருந்தார். ஆனால், அவர் எழுதுகிற விஷயங்களுக்குப் பணம் என்னவோ மெதுவாகத்தான் அவருக்கு வந்தது. அப்போது அவருக்குக் கொஞ்சம் கடன் இருந்தது. அக்கடனைத் தீர்க்கப் பணம் வரும் என்னும் அவாவோடு அவர் ஒரு புத்தகத்தை எழுதி முடித்தார். அதை அப்போது இருந்த பிரசுரகர்த்தர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ள மறுத்து விட்டனர். அதனால் கார்லயிலுக்குச் சிறிது மனவருத்தம் உண்டாயிற்று. கடனைத் தீர்ப்பதற்காக அப்போது கார்லயில் தம்மிடத்தில் இருந்த குதிரைகளை விற்கத் தலைப்பட்டார். அச்சமயத்தில் "லாரி" என்னும் கார்லயிலின் குதிரை ஒன்று அதிக உழைப்பினால் திடீரென்று கீழே விழுந்து செத்துப்போயிற்று.



அச்சமயம் கார்லயிலுக்கு மிகவும் துன்பம் நிரம்பிய காலம் என்றே சொல்லவேண்டும். அப்போது அவர் உலகம் கண்டு வியக்கத்தக்க, 'சார்ட்டர் ரிசார்ட்டஸ்' (Sartor Resartus) என்னும் நூலை எழுதி முடித்தார். அதைக் கார்லயிலின் மனைவியார் முற்றும் படித்து முடித்துவிட்டு, "இது பேரறிவின் காரியம்" என்று சொன்னாரென்கின்றனர். இவ்வாறு அவ்வம்மையார் கூறிய வார்த்தைகள், முற்றும் அந்நூலுக்குப் பொருத்தமானவைகளே யன்றி, தம் கணவரைப் புகழ்வதற்காகக் கூறியவைகளன்று. அந்தப் புத்தகத்தை வெளியிட ஒரு பிரசுரகர்த்தரைத் தேடுவதற்காகக் கார்லயில் இலண்டன்மா நகரத்திற்குச் சென்றார். அதற்கு முன்னரே அவர் எழுதி வெளிவந்த 'ஸ்கில்லரின் வாழ்க்கை' (Life of schiller) என்னும் புத்தகம் இங்கிலந்திலும், ஜர்மனியிலும் புகழ்பெற்று இருந்தது. அந்தப் புத்தகத்தைப்பார்க்கிலும் இப்போது கார்லயில் எழுதிய, 'சார்ட்டர்', என்னும் புத்தகம் மூன்றுபங்கு உயர்வுடையதென்றே சொல்லலாம். அஃது அவ்வாறிருந்தும் பிரசுரகர்த்தர்கள் அதனை எக்காரணங் கருதியோ விரைவில் பிரசுரம் செய்ய முன்வரவில்லை.

கார்லயில் ஒருமுறை இலண்டன் நகரத்திற்குச் சென்று சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார். அப்போது திடீரென்று தலையில் இடிவிழுந்தாற்போல் அவர் தமது தகப்பனார் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டார். அதனால் அவருக்கு உண்டான துன்பம் அளவிடக் கூடியதன்று. கார்லயில் தமது தந்தையாரைத் தமது உயிரைவிட அதிகமாக நேசித்து

வந்தார். கார்லயில் தமது தந்தையாரிடம் கொண்டிருந்த அன்பு அளவு கடந்ததாகும். தமது தந்தையார் இறந்தமையினால் தமக்கு உண்டான துன்பத்தைப் போக்கிக் கொள்ளுவதற்குக் கார்லயில் சக்தியற்றிருந்தார்.

வீட்டு விஷயங்களில் மாறுபாடு ஏற்பட்டமையினால் கார்லயில் தமது வீட்டிற்குத் திரும்பவேண்டியவரானார். 'சார்ட்டர்' என்னும் தமது நாவலைப் பிரசுரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக மறுபடியும் இலண்டனுக்குப் போக அவருக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆகையால் அக்கையெழுத்துப் பிரதி ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தோராவது வருடம் வரையில் கார்லயிலின் 'மேஜை'யில் இருந்து, பின்னர், வெளிவந்தது.

'கிரெய்கன்புட்டாக்' என்னும் இடத்தில் வாழ்க்கையை நடத்துவது கார்லயிலுக்குத் துன்பமாய் இருந்தது. கார்லயிலின் மனைவியார் வரவரத் தேக சுகம் குன்றிப் பலவீனமடைந்தார். தமது தேகநிலை சீர்கெட்டிருந்தும் அவ்வம்மையார் வீட்டிலுண்டான எல்லா வேலைகளையும், வேறு வேலையாட்கள் இல்லாமையினால், தாமே பொறுமையோடு செய்துவந்தார். கார்லயில் நாள் முழுவதும் தமது எழுத்து வேலைகளைச் செய்து கொண்டிருப்பார். மாலைக்காலத்தில் வெளியில் உலாவச் சென்று, தன்னந்தனியே எங்கேயாவது ஓரிடத்தில் உட்கார்ந்து, தொடர்ச்சியாக இரண்டு மூன்று மணிநேரம் வரையில் எதைப்பற்றியாவது சிந்தித்துக் கொண்டே யிருப்பார். 'கிரெய்கன்புட்டாக்' என்னும் இடத்தில் வாழ்வது முடியாத காரியமென்று



முடிவாகக் கார்லயிலுக்குத் தோன்றியது. அதனால் அவர் அந்த இடத்தைவிட்டு விலக நினைத்தார். ஆகையினால், அவர் தமது பசு, பழைய பொருள்கள் முதலியவைகளை விற்றார். பிறகு அவர் தமது மனைவிக்கு வருமாறு தாம் கடிதம் எழுதியவுடன் வரக் கட்டளையிட்டுத் தாம் தனியே இலண்டனுக்குச் செல்லலானார்.

கடைசியாகக் கார்லயில் 'செல்சி' (Chelsea)யிலுள்ள செயின்ரோ (Cheyne Row)வில் தோட்டத்தோடு சேர்ந்த ஒரு சிறுவீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் தங்கினார். அவர் கடிதம் எழுதிய பிறகு அவர் மனைவியார் அங்கு வந்து சேர்ந்தார். மனைவிவந்து சேர்ந்தபிறகு புதுமனை வாழ்க்கையில் கார்லயிலுக்கு இன்பம் பெருகியது. அவர் தமது எழுத்து வேலையோடு தோட்ட வேலையையும் செய்யலானார். தோட்டத்திற்குத் தாமே வேலியடைத்தார். தோட்டத்தை நன்றாய்ப் புழுதியாக்கினார். பலவகைப் பதார்த்தங்களைப் பயிரிட்டார். அதே வருடத்தில் கார்லயிலைக்காண அவருடைய நண்பராகிய இர்விங் (Irving) என்பவர் வந்தார். கார்லயில் தமது இன்னுயிர் நண்பராகிய இர்விங் என்பாரை மகிழ்ச்சியோடு வரவேற்றார். இரண்டொரு நாள் இர்விங் கார்லயிலோடு தங்கியிருந்து பின்னர்ப் பிரிந்து சென்றார். நண்பரிருவரும் பின்னர் ஒருவரை யொருவர் சந்திக்கவேயில்லை.

## பெரும் புகழும் முடிவும்

வாசகர்களே! கார்லயிலின் வாழ்க்கையில் நடந்த மிக முக்கியமான விஷயமொன்றை இங்குக் குறிப்பிடுகின்றோம். அதை நீங்கள் கருத்தாய்க் கவனிப்பீர்

களாயின் கார்லயிலின் பெருங்குணத்தை நீங்களே உணர்வீர்கள்.

அடுத்த படியாகக் கார்லயில் 'பிரன்சுப்புரட்சி'யைப் பற்றி (French Revolution) ஒரு நூல் எழுதலானார். அவர் விடாப் பிடியாக உழைத்து ஐந்து மாதங்களில் தாம் ஆரம்பித்த நூலின் முதற் பாகத்தை எழுதி முடித்தார். கார்லயில் எழுதி முடித்த 'பிரன்சுப்புரட்சி' வெளிவரவேண்டும் என்னும் விஷயத்தில் ஆவல் கொண்டிருந்த 'ஜான் ஸ்டுவார்ட் மில்' (John Stuwart Mill) என்பார் கார்லயிலின் நண்பர்களில் ஒருவராயிருந்தார். ஜான் ஸ்டுவார்ட் மில் கார்லயிலை எப்போதும் கௌரவமாகவே போற்றிப் புகழ்க்கூடியவர். ஆகவே, கார்லயில், தாம் எழுதி முடித்த பிரன்சுப்புரட்சியின் முதல் பாகத்தை ஜான் ஸ்டுவார்ட் மில்லினிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னார். அவர் அதைப் படித்து விட்டுக் கொண்டு வருவதாகக் கூறித் தமது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போனார்.

ஒரு நாள் கார்லயில் காலை முதல் மாலை வரையில் வேலை செய்து விட்டு, உழைத்த அலுப்புத்தீர, ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து இளைப்பாறிக்கொண்டிருந்தார். அப்போது அவர் மனைவியார் அவர் அருகில் உட்கார்ந்து அவருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது அச்சத்தினால் வெளுத்த முகத்தோடும், நடுங்கும் தேகத்தோடும் ஜான் ஸ்டுவார்ட் மில் அங்கு வந்தார். அவர் வாய்ச் சொற்கள் அவர் பேச முடியாமையினால் சிதறின.



மில்லின் இத்தகைய கோலத்தைக் கண்டவுடன் கார்லயில் அவசரமாக எழுந்து, 'நண்பரே, உமக்கு என்ன நேர்ந்தது? நீர் ஏன் இவ்வாறு பயப்படுகின்றீர்?' என்று அன்போடு கேட்டார்.

மில்லின் பார்வையிலிருந்து அவர் தம் கணவரோடு தனித்துப்பேச விரும்புகிறாரென்பதை அறிந்து கொண்ட கார்லயிலின் மனைவியார் தாம் அவ்விடத்தை விட்டுப் போனார். அவர் சென்ற பிறகு மில், கார்லயிலைப் பார்த்து, அச்சத்துடன், 'நண்பரே, நீர் என்னிடம் கொடுத்த கையெழுத்துப் பிரதியை நான் படித்து விட்டு அஜாக்கிரதையாக ஓர் இடத்தில் வைத்து விட்டேன். நினைவுவந்து பார்த்தபொழுது அதில் ஐந்தாறு ஏடுகள் தவிர மற்றவைகள் எவ்வாறோ அடியோடு எரிந்து போயின. அதைக்கண்ட நான் கொண்ட துன்பத்திற்கு ஓர் அளவேகிடையாது. தங்களிடத்தில் நடந்த விஷயத்தை எவ்வாறு சொல்லுகிறதென்னும் அச்சத்தோடு இங்கு வந்தேன்' என்று சொன்னார்.

மிகவும் கஷ்டப்பட்டு ஐந்து மாதங்கள் வரையில் உழைத்த உழைப்பின் பலன் இவ்வாறாயிற்று. இத்தச் சந்தர்ப்பத்தில் கார்லயிலின் நிலை, பணம் சம்பந்தப்பட்ட வரையில், மிகவும் கேவலமாய் இருந்தது. ஏதாவது எழுதித்தருவதாகச் சொல்லிக் கார்லயில் ஒரு பிரசுரகர்த்தரிடம் கொஞ்சம் பணம் வாங்கியிருந்தார். தாம் எழுதிய பிரஞ்சுப்புரட்சியைக் கொடுத்து அதன் மீது பின்னும் கொஞ்சம் பொருள் வாங்கிக் குடும்பச் செலவைக் கவனித்துக் கொள்ளலாம் என்று கார்லயில் கருதியிருந்தார். அவர் எண்ணங்கள் யாவும் அடியோடு அழிந்தன.

தம் விஷயங்கள் இவ்வாறு இருந்தும் கார்லயில், அவைகளைக் கொஞ்சமும் வெளியிற் காட்டாமல், மில்லைப்பார்த்து, 'நண்பரே, அது போனாற் போகிறது. அதைப்பற்றி நீர் எதற்காகக் கவலைப்படவேண்டும்! நான் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. ஆகையால் நீர் கவலைப்பட வேண்டாம்' என்று கூறிப் பின்னும் தகுந்தபடி பல ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவரை அனுப்பினார்.

மில் சென்ற பிறகு, கார்லயில் நடந்த விஷயத்தைத் தமது மனைவியாரிடம் கூறிப் பின்னும் அவர் தமது மனைவியாரைப் பார்த்து, 'பாவம், என் நண்பர் மில் அதிகமாகப் பயந்து விட்டார். இனி அவர் இங்கு வரும்போது அவருடைய அஜாக்கிரதையினால் நமக்கு ஏற்பட்ட துன்பத்தைப்பற்றிக் கொஞ்சமும் அவர் அறிந்து கொள்ளாதபடி நாம் நடந்து கொள்ள வேண்டும்!' என்று சொன்னார்.

வாசகர்களே, 'இத்தகைய பெருங்குணம் எளிதில் எல்லோருக்கும் வருமா' என்று பாருங்கள். இன்னும் இத்தகைய பல விஷயங்களைக் கொண்டு கார்லயிலின் ஆன்மா மிகவும் பக்குவப்பட்டதென்றே நாம் நிர்மாணிக்கின்றோம்.

தம்மால் எழுதப்பட்டு எரிந்துபோன 'பிரஞ்சுப் புரட்சி'யைக் கார்லயில் மீண்டும் எழுதி முடிக்க வெண்ணினார். முன்னர்த் தாம் எழுதிய விஷயங்களுக்கு அவர் குறிப்பும் வைத்திருக்கவில்லை. ஆகையால் அவர் மறந்துபோன விஷயங்களை மறுபடியும் ஆராயவேண்டியவரானார். கார்லயில் விடாது முயன்று மறுபடியும் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தேழாவது



வருடம் 'பிரஞ்சுப்புரட்சி' முழுவதையும் கற்றோரும், மற்றோரும் கண்டுகளிக்கும் வண்ணம் எழுதி முடித்தார். தாம் எடுத்துக்கொண்ட அரிய பெரிய வேலை முடிந்து விட்டதனால் கார்லயில் அளவற்ற ஆனந்தம் அடைந்து வீட்டில் விருந்து சாப்பிட்டு இருபது மைல் தூரம் இன்பம் நிறைந்த மனத்தினராய் உலாவச் சென்றார். அவர் அடிக்கடி 'செல்சி'யில் வீட்டைக் கவனித்துக் கொள்ளுவதற்காகத் தமது மனைவியை விடுத்துத் தாம் மட்டும் தமது பிறப்பிடத்திற்குப் போய் வருவார். அவ்வாறு போய் வருவதாலும், உழைப்பதாலும் உண்டாகும் கஷ்டம் அவருக்குத் தோன்றுவதில்லை. சில சமயங்களில் அவர் மௌனியைப்போல் ஒருவரோடும் பேசாமலும், ஒருவரையும் பார்க்காமலும் அருகில் உள்ள மலையோரங்களுக்குச் சென்று உலாவுவார். அவர் எப்போதும் எதைப்பற்றியேனும் சிந்தித்துக் கொண்டேயிருப்பார். சிக்கனம், பட்டணவாசத்துத் தையற்காரர்களிடம் நம்பிக்கையின்மை ஆகிய இவைகள் காரணமாகக் கார்லயில் தமது சட்டை முதலியவைகளை நாட்டுப்புறத்துத் தையற்காரர்களிடமே தைத்துக் கொள்ளுவார்.

பொதுவாகக் கார்லயில் தாம்பிறந்த இடத்திற்குச் சென்று இலண்டனுக்கு வரும்போதெல்லாம் கப்பலிலேயே வருவார். அவர் தமது வீட்டை நெருங்கியவுடன் அவர் அன்புடன் வளர்த்து வந்த அவருடைய நாய் அவரைக்கண்டு அன்புகாரணமாகக் குரைக்கும்; அவர் மனைவியார் அவரை அன்புடன் வரவேற்பார்; தாம் சிக்கனமாகச் சேர்த்துவைத்திருக்கும் பொருள்களைத் தமது கணவனாருக்குக் காட்டுவார்; கணவர்

தமது மனைவியின் சிக்கனத்தைக் கண்டு மனமகிழ்வார்; மறுபடியும் கார்லயில் தமது வாழ்க்கையைத் தொடங்குவார். அடிக்கடி அவரைப் பார்க்க அவர் நண்பர்கள் பலர் வருவார்கள். அநேகர் தாங்கள் நடத்தும் விருந்து முதலிய கொண்டாட்டங்களில் வந்து கலந்து கொள்ளும்படி கார்லயிலை வற்புறுத்துவார்கள். இரவுகாலத்திலும் பலமுறை கார்லயிலின் பக்கத்து வீட்டுக்காரர்கள் இருமுவதும், வீண்கூச்சல் இடுவதுமாக இருப்பார்கள். இத்தகைய காரணங்களினால் கார்லயிலுக்குச் சரியான ஓய்வு கிடைப்பதில்லை. சில சமயங்களில் சேவல்கள் இரவில் முன்னேரத்திலேயே கூக்குரலிட ஆரம்பித்துவிடும். அதனாலும் கார்லயிலுக்கு மனநிம்மதி ஏற்படுவதில்லை.

கடைசியாகக் கார்லயில் எழுதிய 'பிரஞ்சுப்புரட்சி' என்னும் நூல் வெளிவந்தது. அமெரிக்கா தேசம் கார்லயிலின் பெருமையை உணர்ந்து அவரிடம் தனக்குள்ள நன்மதிப்புக்கு அடையாளமாக அவருக்கு இருநூறு பவுன்களை வெகுமதியாக அனுப்பியது. அது வரையில் இங்கிலந்து அவருக்கு, அவர் பெருமையை உணர்ந்து, சுவலுனவும் அளிக்க முன்வரவில்லை. ஆயிரத்து எண்ணூற்றுநாற்பதாம் ஆண்டு எடின்புரோ நகரத்துப் பல்கலைக் கழகத்தார் (The Edinburgh University) கார்லயிலுக்குத் தங்கள் கழகத்தில் சரித்திர சம்பந்தமான ஸ்தானம் ('History Chair') ஒன்றை அளிக்க விரும்பினார்கள். அந்த ஸ்தானம் கார்லயிலுக்கு இஷ்டமானதும், தகுதியானதுமாகும் என்றே சொல்லலாம். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. 'கிரெய்கன் புட்டாக்' என்னும் இடத்தில் அவர்



வசித்துக் கொண்டு இருந்தபோது, ஏழுவருடங்களுக்கு முன்னால், அவர் அந்த ஸ்தானத்தை விரும்பினார். அப்போது அந்த ஸ்தானம் அவருக்குக் கிடைத்திருக்குமானால் அவர் அதனை ஆவலோடு ஏற்றுக் கொண்டிருப்பார் என்பது திண்ணம். 'எப்படியாயினும் சரியே; என்னுடைய தேசத்தார் கடைசியாக என் பெருமையை அறிந்துகொண்டார்கள். அஃது ஒன்றே எனக்குப் போதுமானது. ஆனாலும் இப்பொழுது நான் அவர்கள் இஷ்டப்படி நடந்து கொள்ள முடியாது' என்று கார்லயில் கூறினார். பின்னர் அவருடைய எழுத்து வேலை மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர் எழுதிய 'முற்காலமும் தற்காலமும்' (Past and Present) என்னும் நூலும், 'வீரர்களும் அவர்களை வணங்குதலும் என்பதைப்பற்றிய பிரசங்கங்கள்' (Lectures on Heroes and Hero Worship) என்னும் நூலும் வெளிவந்தன.

இச்சமயத்தில் கார்லயிலுக்கு அவர் எதிர்பாராதபடி துன்பம் வந்தது. அவருடைய தாயார் நெடுநாட்களாகத் தேகசுகமின்றி யிருந்தார். அவ்வம்மையார் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்துநான்காம் ஆண்டு இறந்துபோனார். தம் அன்னையின் மரணத்தை நினைத்து நினைத்துக் கார்லயில் கண்ணீர்விட்டுக் கதறினார். அவர் அன்னையார் இறந்தமையினால் அவருடைய வாழ்க்கை உயிரற்றதாயிற்று. தாயும் தனயனும் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த அன்புக்கு அளவில்லையன்றோ? களங்கமில்லாத, பரிசுத்தமான தமது தாயின் பெருமையைக் குறித்துக் கார்லயில் அடிக்கடி தம் அயலாரிடம் பேசுவது வழக்கம். கௌரவம் பொருந்திய

தமது அன்னையார் இறந்ததும் கார்லயில், 'அன்னையே! நீர் உமது புத்திரனை இவ்வுலகத்தில் நிறுத்திப் போய் விட்டீரே! இனி உமது புத்திரனுக்கு யார் அன்பு நிறைந்த இன்பவார்த்தைகளைக் கூறப்போகின்றார்கள்?' என்று சொல்லிக் கதறினார். அவருடைய தாயாரை 'எக்கல்பிக்கேனி'ல் உள்ள கல்லறையில் அடக்கம் செய்தார்கள். தமக்கு வேண்டியவர்கள் பலர் மரணமடையக்கண்டும் அவர்களைப்பற்றிக் கார்லயில் கவலைப்படவில்லை. 'என் அன்னையாரை நான் எப்பொழுது காண்பேன்' என்னும் வார்த்தை, அடிக்கடி, கார்லயிலின் வாயில் இருந்து வந்துகொண்டிருந்தது.

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்றாம் வருடம் முதல், நடப்பதற்குச் சக்தி குறைந்த பிறகு, கார்லயில் குதிரைமீது வெளியில் சவாரி போய் வரலானார். ஒருநாள், தரை ஈரமாயிருக்கையில், கார்லயில் வழக்கம்போல் குதிரையின்மீது ஏறிச்சென்றார். 'ஹைட் பார்க்' வரையில் கார்லயில் நன்றாகச் சவாரி போனார். பிறகு காற்று மிகக் கடுமையாக வீசத்தொடங்கியது. அப்போது அவருடைய குதிரை துள்ளவாரம்பித்தது. அச்சமயத்தில் அவர் தலையில் இருந்த தொப்பி காற்றினால் தள்ளப்பட்டு ஈரத்தரையில் விழுந்தது. ஏழை வழிப்போக்கன் ஒருவன் அதை எடுத்துக் கொண்டு வந்து கார்லயிலினிடம் கொடுத்தான். கார்லயில் அவன் செய்த உதவிக்காகத் தமது சட்டைப்பையிலிருந்த சிறு தோற்பையிலிருந்து கொஞ்சம் சில்லரையை எடுத்து அவனுக்குக் கொடுத்துவிட்டு மறுபடியும் தோற்பையைத் தமது சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு வீட்டிற்குப் போனார்.



வீட்டிற்குச் சென்றவுடன் அவர் தமது சட்டைப்பையில் இருந்த தோற்பையைப் பார்த்தார்! அஃது எப்படியோ காணாமற் போயிற்று.

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்தாம் ஆண்டு, கார்லயில் பலகாலம் வரையில் பலவிதமாக முயற்சிசெய்து எழுதிய 'பிரட்ரிக் தி கிரேட்' (Frederick The Great) என்னும் நூல் வெளிவந்தது. அதை எழுதுவதற்குக் கார்லயில்பட்ட கஷ்டம் கொஞ்சமன்று. அதை எழுதுவதற்காக அவர் இரண்டு முறை ஜர்மனிக்குச் சென்று, தாம் எழுதுவதற்கு ஆதாரமான விஷயங்களைச் சேகரிப்பதற்காக, அங்குள்ள யுத்தகளங்களையும், பலவிதக் காட்சிகளையும் நேரில் கண்டுவந்தார். அந்தப் புத்தகம், கார்லைல் எழுதிய மற்றெல்லாப் புத்தகங்களினும் அதிகமாக, இங்கிலந்திலிருப்பவர்களின் புகழ்ச்சிக்கு உரியதாயிற்று. பின்னர், கார்லயில் புகழின் உன்னத ஸ்தானத்தில் இருப்பதற்கு உரியவரானார்.

எடின்புரோ பல்கலைக்கழக மாணவர்கள் கார்லயிலைத் தங்கள் பல்கலைக்கழகக் காரியாலயத்திற்குத் தலைவராயிருக்கும்படி வேண்டிக்கொண்டனர். கார்லயில் அவர்கள் வேண்டுகோளுக்கு, மறுக்காமல், இணங்கினார். மாணவர்கள் விரும்பியபடியே, அவர்கள் குறிப்பிட்ட பதவியைக் கார்லயில் ஏற்றுக்கொண்டார். அஃது அவருடைய வாழ்நாட்களில் அவர் அடைந்த ஒரு வெற்றியாகும். மாணவர்கள் குறிப்பிட்ட ஸ்தானத்தை அவர் ஒப்புக்கொண்டு, மாணவர்களின் பெருங்கிளர்ச்சிக் கிடையில், ஒரு பிரசங்கம் செய்தார். அவர் வார்த்தைகளைக் கேட்டு மாணவர்கள்

அளவில்லாத ஆனந்தம் அடைந்து காது செவிடுபடும் படியாகக் கரகோஷம் செய்தனர்.

கடைசியாகக் கார்லயில் 'செல்ஸி'யில் தமது மனைவியினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு எடின்புரோ நகரத்திற்குச் சென்றார்!—அந்தோ! அவர் மறுபடியும் தமது அருமை மனைவியாரைப் பார்க்கவேயில்லை! என்னே கொடுமை!

கார்லயில் செல்ஸியை விட்டுச் சென்ற ஒரு மாதத்திற்குப் பிறகு அவர் மனைவியார், ஒருநாள் வெளியே உலாவப் போகையில், திடீரென்று இருதயத்துடிப்பு நின்றதனால் இறந்துபோனார். மனைவியார் இறந்ததை அறிந்த கார்லயில் தாங்கமுடியாத துக்கத்தோடு இலண்டனுக்குச் சென்று தமது வீட்டையடைந்தார். அங்கு அவர், தமது மனைவிக்குச் சிலதினங்களுக்குமுன் தாம் எழுதிய கடிதம் பிரிக்கப்படாமல் மேஜைமீது இருப்பதைக் கண்டார். கண்டதும் அவர் கொண்ட துன்பத்திற்கோர் அளவேயில்லை. அச்சமயம் கார்லயிலின் நிலை பார்ப்பதற்குப் பரிதாபகரமாய் இருந்தது. 'ஆ! அன்புடையவளே! ஐந்து நிமிட நேரம் நீ உயிர்பெற்று என் கண்முன் வரமாட்டாயா? உன்னை விட்டு நான் எவ்வாறு உயிர் வாழ்வேன். என் அன்னையின் பிரிவை உன்னுடைய தேறுதலான மொழிகளைக் கேட்டுச் சகித்திருந்தேன். இனி நான் என்ன செய்வேன்? இனி எனக்கு இரவில் உறக்கமும் வருமோ? உன்னுடைய பரிசுத்தமான வாழ்க்கையை இனி என்று காண்பேன்?' என்று சொல்லிக் கார்லயில் துன்பப்பட்டார். உத்தம மனைவியைப் பிரிந்தால் எவர்தாம் துன்பப்படாதிருப்பர்? தெய்வப்புலமைத்



திருவள்ளுவ நாயனாரும் தமது மனைவியாரை இழந்தபோது,

"அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழும் பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா"

என்று வருந்தியதாகக் கூறும் கர்ணபரம்பரைச் செய்தியை நாம் அறிந்தே இருக்கின்றோம்.

சிலதினங்கள் வரையில் கார்லயில் உயிரற்றவரைப் போல் மௌனமாக விருந்தார். அவர் எண்ணம் முற்றும் அவர் மனைவியைப் பற்றியே நின்றது. உண்மையில் கார்லயிலின் மனைவியாரைப் போன்ற ஸ்திரீகள் உலகத்தில் தேடினாலும் ஒரு சிலருக்குமேல் அகப்படார் என்பது திண்ணம்.

பல இரவுகளைக் கார்லயில் தூங்காமலேகழித்தார். தாம் ஒருவரே வீட்டில் தனித்திருப்பதால் உண்டாகும் துன்பத்தைக் கார்லயிலால் பொறுக்க முடியவில்லை. அவர் மனம் துன்பமாகிய கனத்தைத் தாங்கமுடியாமல் தவித்தது.

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பதாம் ஆண்டு இராணி அவர்கள் கார்லயிலுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில் இராணியார் தாம் கார்லயிலைப் பார்க்க விரும்புவதாகவும், அவருக்கு நேரிட்ட துன்பத்தைக் கேட்டு அதற்காகத் தாம் வருந்துவதாகவும் எழுதியிருந்தார். அக்கடிதத்தைக்கண்ட கார்லயில், 'ஆ! என் மனைவி இருந்தால் அரசி எனக்கு எழுதிய கடிதத்தைக் கண்டு அளவற்ற ஆனந்தம் அடைவாளே' என்று துன்பப்பட்டார்.

கார்லயில் எழுதிய 'பிரட்ரிக் தி கிரேட்' என்னும் நூலின் பெருமையை அறிந்து புருஷ்யா (Prussia) தேசம் அவருக்கு 'ஆர்டர் ஆவ் மெரிட்' (Order of Merit) என்னும் கௌரவத்தை யளித்தது. 'பிரட்ரிக் தி கிரேட்' என்னும் நூல் அங்கில மொழியினின்றும் ஜர்மன் மொழியில் எழுதப்பட்டது. அந்நூல் தங்கள் தேசத்து வீருடைய சரிதத்தைக்கூறுவதென்னுங் காரணம் பற்றி ஜர்மனியர் அந்த நூலைக் கௌரவித்தனர். கார்லயிலின் எண்பதாவது வயதில் அவருக்கு இராணி அவர்கள் தகுந்த உபகாரச் சம்பளமும், 'கிராண்ட் கிராஸ் ஆவ் தி பாத்' (Grand Cross of the Bath) என்னும் பட்டமும் வழங்கமுன் வந்தனர். கார்லயில் அக்கௌரவத்தையும், உதவியையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை—மறுத்து விட்டனர். தமக்கு அந்த உதவியும், கௌரவமும் வெகு காலத்திற்கு முன்னரே வந்திருக்கவேண்டுமென்பது கார்லயிலின் கருத்து. இராணியவர்கள் மிகவும் கால தாமதமாகத் தம் கௌரவத்தை உணர்ந்தமைக்கு அவர் வருந்தினார்.

ஸ்காட்லந்து தேசத்திலிருந்து, கார்லயிலின் எண்பதாவது வருடத்துப் பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, கார்லயிலுக்கு ஒரு தங்கப்பதக்கம் பரிசு வந்தது. கார்லயில் அதைத் தமது வாழ்நாட்களில் என்றும் அடையாத இன்பத்தோடு ஏற்றுக்கொண்டார்.

கார்லயில் தமது அந்திய காலத்தில், ஒவ்வொரு நாளும் தமது தோட்டத்தில் சிறிது நேரம் உலவுவார். பின்னர், ஓரிடத்தில் உட்கார்ந்து சுங்கான் பிடித்துக்கொண்டே படித்துக் கொண்டிருப்பார். அப்போது



அவர் அருமைப் பூனை ஒன்று அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும். வரவர வாழ்க்கையில் கார்லயிலுக்குத் தோன்றிய வெறுப்பு அதிகம் ஆயிற்று. அதனால் அவர், 'எனக்கு இனி வேண்டியது மரணந்தான்; மரணந்தான்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தோராவது வருடத்தில், தம்முடைய எண்பத்தைந்தாவது வயதில், கார்லயில் இம்மண்ணுலக வாழ்க்கையை விட்டகன்றனர். அவர் இறக்கும்போது தமது தேகத்தை அடக்கம் செய்வதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் இறந்திருப்பாரானால், அவர் தேகத்தை, அரசாங்கத்தினர் ஏற்கனவே இறந்த பல அறிவாளிகளின் தேகங்களை அடக்கம் செய்துள்ள இடமாகிய, 'வெஸ்ட் மின்ஸ்டர் அபே' (Westminster Abbey) என்னும் இடத்தில் கௌரவமாக அடக்கம் செய்திருப்பர். அவர்கள் அவ்வாறு செய்வதற்குக் கார்லயில் இஷ்டப்படவில்லை. தாம் இறந்த பிறகு அவர் தமது தேகத்தை ஏற்கனவே 'எக்கல்பிக்கேன்' கல்லறையில் புதைக்கப்பட்டிருக்கும் தமது தாய் தந்தையர் சவக்குழிகளின் அருகே புதைக்கும்படி கட்டளையிட்டிருந்தார். அதனால் அவர் இறந்த பிறகு அவர் விரும்பிய இடத்திலேயே அவர் தேகத்தை அடக்கம் செய்தனர்.

பெரு நோக்கமும், உண்மையும், தைரியமும், அளவுக்கு மேற்பட்ட அறிவும், சாதாரண வாழ்க்கையுமுடைய தாமஸ் கார்லயில் இறந்தார். அவர் பிறந்த நாடு அவரால் கௌரவம் அடைந்தது. கார்லயில் புகழைக் கருதியேனும் பொருளைக் கருதியேனும்

எதையும் எழுத முன்வரவில்லை. உலகத்தில் உள்ள கெடுதல்களைக்கண்டு அவைகளை ஒழிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு அவர் தமக்கு 'நியாயம்' என்று தோன்றிய வழியில் எழுதிவந்தார். தம்மைப்பற்றி உலகத்தார் யாது கூறினும், அவர்கள் கூறுவதை, அவர் பொருட்படுத்துவதேயில்லை. அவர் வாழ்க்கை சாதாரணமானது. அவர் நடை உடை முதலியவைகளும் சாதாரணமானவைகளே. பலர், அவர் இளகியமனமும், கருணையும் உடையவர் என்றுரைப்பது உண்மையென்று அவருடைய நண்பர்களுக்கும், அவர் எழுதிய நூற்களை ஆழ்ந்து வாசித்தோருக்கும் தெரியும் என்பது திண்ணம். முப்பத்தாறு அரும் பெரும் நூல்களை எழுதி உலகுக் களித்த தாமஸ் கார்லயிலைப் போன்ற அறிஞர் பலர் தற்சமயம் நமது நாட்டில் தோன்றுவார்களானால், உடனே, நமது நாட்டுக்கு உண்டாகும் நன்மையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

## நான்காம் பகுதி

## ஆன்ஸ் ஆண்டர்சன்

### இளமைப்பருவம்

சிறுவர்களுக்கு ஏற்ற சிறந்த கதைகளையெழுதி அழியாப் புகழ் பெற்றவர்கள் எவருக்கும் 'ஆன்ஸ் ஆண்டர்சன்' (Hans Andersen) என்பவர் பிற்பட்டவரல்லர். சிறுவர்களுக்கு ஏற்ற இலக்கியங்களை உற்பத்தி செய்வது சாதாரண காரியமன்று



Hans Andersen

என்பது அனுபவமுடையோர் கண்ட உண்மையாகும். உண்மையை ஒளிக்காமற் சொல்ல வேண்டுமானால் பெரியவர்களுக்கு ஏற்ற இலக்கியங்களைச் செய்கின்றவர்களைப் பார்க்கினும், சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கான இலக்கியங்களைச் செய்கின்றவர்கள் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அன்றெனக் கூறுவது மிகையாகாது.

ஆன்ஸ் ஆண்டர்சனுடைய சரித்திரமானது, அவர் எழுதிய மாயாவிநோதக் கதைகளைப் போலவே, விசித்திரமானது. மாயாவிநோதக் கதைகளில் பெரும்பாலும் கதாநாயகன் ஏழையாகவேயிருப்பான்; பிறகு தன் முயற்சியினால் உயர்ந்து அரசிளங் குமரியை மணந்து கொள்ளுவான். ஆன்ஸ் ஆண்டர்சன் பரம ஏழையாகவே பிறந்தார். பின்னர், தமது முயற்சியினால் முன்னுக்கு வந்தார். ஆனால், அவர் அரசிளங் குமரியை மணந்து கொள்ளவில்லை. ஏன்?—ஏனெனில் அவர் தம் வாழ்நாட்களில் ஒருபோதும் விவாகமே செய்து கொள்ளவில்லை.

ஆண்டர்சனின் பிற்கால வாழ்க்கையில், அவரைத் தங்களுடைய நண்பர் என்று சொல்லிக் கொள்ளுவதனாலேயே இளவரசரும், இளவரசிகளும், சீமான்களும் சீமாட்டிகளும் பெருமை பெற்றனர். ஆண்டர்சன் எழுதிய கதைகள், இங்கிலந்திலும் அமெரிக்காவிலும், நார்வேயிலும் சுவீடனிலும், ஜர்மனியிலும் ஆலந்திலும், பிராஞ்சிலும் இத்தலியிலும், ஸ்பெயினிலும் இந்தியாவிலும் இன்னும், சிறுவர்களாலும், ஏன்-பெரியவர்களாலுங்கூடப் போற்றிப் படிக்கப் படுகின்றன.

இத்தகைய கௌரவம் வாய்ந்த ஆன்ஸ் ஆண்டர்சன் என்பவர் டேனிஷ் தீவுகளில் ஒன்றாகிய 'புனன்' (Funen) என்னும் தீவில் உள்ள ஆடன்ஸ் (Odense) நகரத்தில் ஆயிரத்து எண்ணூற்று ஐந்தாம் வருடம் 'எப்ரல்' மாதம் இரண்டாந்தேதி பிறந்தார். அவருடைய தகப்பனார் மிகவும் ஏழை. அவர் செருப்புத் தைக்கும் வேலையை மேற்கொண்டு தமது குடும்பத்தைக் காப்பாற்றிவந்தார். அவருடைய குடும்பத்தார் உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரே ஓர் அறைதான் இருந்தது. அதனில் மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் ஒன்றும் அதிகமாயில்லை. அறையின் ஒருபுறம் படுக்கையும், மற்றொருபுறம் அடுப்பும், வேறொருபுறம் கைத்தொழிற் சாமான்களும், பிறிதொருபுறம் ஒருசில புத்தகங்கள் அடங்கிய பெட்டியும், குழந்தையின் தொட்டிலும் இருந்தன.

இளமையிலேயே ஆண்டர்சனுடைய தந்தைக்குத் தாம் ஒரு செருப்புத் தைப்பவராக இருப்பதற்கு இஷ்டமில்லை. தாம் படித்து மேதாவியாக வேண்டுமென்று அவர் நினைத்தார். ஆனால் அக்காலத்தில் படிப்பதற்கு எவ்வளவு பொருள் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு பொருள் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் அவர் செருப்புத் தைக்கும் வேலையையே மேற்கொண்டு ஒழிந்த வேளைகளில் கிடைத்த புத்தகத்தை முடிந்தவரையில் படித்து வந்தார். அவர் சில சமயங்களில் வாய்விட்டுப் படிப்பார். அவர் படிப்பதைச் சிறுவராகிய ஆண்டர்சன் கவனித்துக்கொண்டிருப்பார்.

ஆண்டர்சன் சிறுவராயிருந்தபோது அவர்



தந்தையார் அவரிடத்தில் மிகுதியும் அன்புகொண்டிருந்தார். 'என் தந்தையார் எனக்காகவே உலகத்தில் வாழ்ந்து வந்தார்; அவர் நான் விரும்புகிறவைகளை எனக்கு வாங்கிக் கொடுத்து வந்தார்' என்று ஆண்டர்சன் பிற்காலத்தில் கூறியிருக்கின்றார். ஆகையால், ஆண்டர்சனுடைய தாய்தந்தையர் ஏழைகளேயாயினும், ஆண்டர்சன் தமது இளமைப் பருவத்தில் சந்தோஷமாகவே வளர்ந்து வந்தாரென்று தெரிகிறது.

சில சமயங்களில், காலநிலை நன்றாய் இருக்கும்போது, சிறுவராகிய ஆண்டர்சன் தமது தந்தையாரோடு வெளியில் உலாவச் செல்வார். அப்போது அவர் தமது கண்ணிற்படும் சராசரங்களின் வரலாறுகளைத் தமது தந்தையாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுவார். ஆண்டர்சன் எப்போதும் சுத்தமாயிருக்கப் பிரியப்படுவார். அந்த வழக்கம் அவர் தாயாரிடத்திலிருந்து அவருக்கு வந்தது. அவர் தாயார் தம் வீடு சிறியதாயினும், எப்போதும் அதனைச் சுத்தமாகவே வைத்துக்கொண்டிருப்பார்; தம்மீது கொஞ்சமும் அழுக்குப்படிய விடமாட்டார்.

ஆண்டர்சன் சிறுவராயிருந்தபோதே அவரிடத்தில், அவரைக் காண்போர் அன்புள்ளவர்களாய் இருந்தனர் என்று கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக அநேக விஷயங்கள் கூறப்படுகின்றன. ஆண்டர்சனிடத்தில் அவர் தாயாருக்கு இருந்த பிரியத்தைப் பார்க்கிலும் அவருடைய தகப்பனாருக்கும், பாட்டியாருக்கும் அதிகப் பிரியம் ஏற்பட்டிருந்தது. ஆண்டர்சனுடைய பாட்டியார், அண்டர்சனை ஒவ்வொரு

நாளும் ஒரு நிமிடமாவது வந்து பார்த்துப் போகாமல் இருக்கமாட்டார். அவர் ஆண்டர்சனைக் காணுந்தோறும், 'என் செல்வம்; என் இன்பம்' என்று சொல்லி ஆனந்தப்படுவார். ஆண்டர்சனும் தமது பாட்டியார் கூறும் வார்த்தைகளைக் கேட்டு இன்பமடைவார்.

ஆண்டர்சனுடைய பாட்டியார் 'பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியில்' இருந்த தோட்டமொன்றைக் கவனிக்கும் வேலையை மேற்கொண்டிருந்தார். அந்தத் தோட்டத்தில் ஆண்டர்சன், அடிக்கடி, போய் உலாவி வருவார். தீமையற்ற பைத்தியக்காரர்கள் சிலரும் அந்தத் தோட்டத்தில் உலாவுவார்கள். ஆண்டர்சன் இளமையிலேயே நன்றாகப் பேசுவதில் வல்லவராய் இருந்தார். அதனால் அவரைக் கண்டோர் அவரை, 'அறிவுள்ள குழந்தை' என்று சொல்லிவந்தார்கள். கதை கேட்பதில் ஆண்டர்சனுக்குப் பிரியம் அதிகம். 'ஆயிரத்தோரிரவு' சொல்லிய அரபிக் கதைகள் அனைத்தையும் அவர் பிறர் சொல்லக்கேட்டு மகிழ்ந்தார். இளமையில் அவர் கேட்கும் கதைகளில் உள்ள செய்திகள் யாவற்றையும் உண்மை யென்றே அவர் நம்பி வந்தார். 'நம்பத்தகாத விஷயங்கள் அனைத்தையும் நான் உண்மையென்றே நினைத்தேன். அதனால் அவ்விஷயங்கள் என் மனத்தைக் கவர்ந்தன' என்று ஆண்டர்சன் சொல்லுகின்றார்.

ஆண்டர்சன் பிறந்த இடமாகிய ஆடன்ஸ் என்பது பட்டணமேயாயினும், அஃது ஆண்டர்சன் பிறந்த காலத்தில், நாகரிகத்தில் மிகவும் கீழ் நிலையில் இருந்தது. வீடுகள் யாவும் விசித்திரமாயிருக்கும். அநேக



வீடுகளின் உச்சியில் மதஸ்தாபகர்களின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும். குருட்டு நம்பிக்கைகளையும், மூடபழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட அநேக சித்திரங்கள் வீடுகளில் பலவிடங்களில் வரையப்பட்டிருக்கும். அதிகம் கூறுவானேன்? 'நான் சிறுவனாய் இருக்கையில் ஆடன்ஸ் நகரம் அநாகரிகமுடையதாய் இருந்தது. அவ்வூரார் தாங்கள் கேட்கும் எவ்விஷயங்களையும் உண்மை யென்று நம்பினார்கள். கேட்டதை யளிக்கவல்ல பிசாசுகளும், நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்யவல்ல மந்திரக்காரிகளும் இருப்பதாக அவ்வூரார் கருதினார்கள். அவ்வூரில் 'செண்ட் கனட்ஸ்' (St. Knud's church) என்னும் பெயர் உள்ள கோயில் ஒன்று இருந்தது. அந்தக் கோயிலைச் சுற்றிலும் இருந்த தோட்டங்களில் பிள்ளைகள் சென்று விளையாடுவது வழக்கம். "இறந்தவர்கள் அங்கு உயிர் பெற்று வரக்கூடும்" என்னும் நம்பிக்கை ஜனங்களுக்கு இருந்தமையினால், எந்தப் பிள்ளைகளும் பொழுது போனபிறகு அந்தக் கோயிலின் அருகில்கூடப் போகமாட்டார்கள். சில கிழவிகள் ஆடன்ஸ் நகரத்து ஆற்றிற்குள் சிறுதேசத்து அரசன் புகுந்து கொண்டு இருக்கிறானென்றும், அவன் மந்திரத்தில் வல்லவனென்றும் கூறி வந்தார்கள். இவைகள் அனைத்தையும் ஏறக்குறைய எல்லோருமே நம்பி வந்தனர்,' என்று ஆண்டர்சன் சொல்லுகிறார்.

இத்தகைய காரணத்தினால் இளமையில் ஆண்டர்சன் தனித்து எங்கும் போகாமல் வீட்டில் இருந்து தம் தகப்பனார் தமக்குக் கொடுக்கின்ற விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாடிக்கொண்டு இருப்பார்.

ஆண்டர்சனைச் சில மாதங்களுக் கொருமுறை அவர் தகப்பனார் நாடகத்திற்கு அழைத்துக்கொண்டு போவது வழக்கம். அதனால் ஆண்டர்சனுக்கு இளமையில் நாடகம் பார்ப்பதில் பித்தம் பிடித்துவிட்டது. அடிக்கடி சென்று நாடகம் பார்க்க அவர் ஆசை கொண்டார். கையிற் பணம் இல்லாமையினால் நாடகக் கொட்டகையில் இருப்பவர்கள் சிலருடைய சிநேகத்தைச் சம்பாதித்துக்கொண்டு, அவர்கள் உதவியினால், ஆண்டர்சன் நாடகம் பார்த்து வரலானார்.

இச் சந்தர்ப்பத்தில் ஆண்டர்சனுடையதகப்பனார், பட்டணவாசத்தை விட்டு, நிலையாக ஏதாவதொரு நாட்டுப்புறத்திற்குப் போய்விடக் கருதினார். ஆனால் நாட்டுப்புறத்தில் தமது தொழில் எவ்வாறுநடைபெறும் என்று அவர் நினைத்தார். அச்சந்தர்ப்பத்தில் நாட்டுப்புறத்துச் சீமாட்டிகள் நடனம் செய்யும் நாட்டுப்புற நடனசாலை ஒன்றுக்குப் பட்டுத் துணியினால் 'நடனபாதரட்சை' (Dancing shoes) செய்யும் ஒருவர் தேவை யென்றும், அவ்வேலையை ஒப்புக்கொள்ள வருகிறவர் முதலில் யாராவது ஒரு சீமாட்டி கொடுக்கும் பட்டுத்துணியை வெட்டி அவளுடைய பாதங்களுக்கு ஏற்றவாறு, திருப்தி உண்டாகும்படி, நடன பாதரட்சை செய்து தர வேண்டுமென்றும், அவ்வாறு செய்துகொடுத்த பாதரட்சை திருப்தியைக் கொடுக்குமானால் அதைச் செய்தவருக்கு வேலை கிடைப்பதோடும் தங்கி இருப்பதற்கு ஒரு வீடும், தோட்டமும், ஒரு பசு வைத்துக்கொள்வதற்கேற்ற இடமும் இனாமாகத் தரப்படும் என்றும் செய்தி பரவியது. அச் செய்தியை ஆண்டர்சனுடைய தகப்பனார் கேள்விப்பட்டார். உடனே அவர் தாம்



அந்த உத்தியோகத்தைப் பெற முயற்சிசெய்து அந்த உத்தியோகத்திற்குரிய நடனசாலைக்குச்சம்பந்தமுள்ள ஒரு சீமாட்டியினிடமிருந்து ஒருபட்டுத்துணியை அவளுடைய கால் அளவோடு வாங்கிக்கொண்டு வந்தார். பின்னர் அவர் அதைவெட்டி இரண்டு பாதரட்சைகளை அழகாகத் தைத்துமுடித்தார். பிறகு அவர் அதை எடுத்துக்கொண்டு அதற்குரிய சீமாட்டியினிடம் போனார். சிறுவராகிய ஆண்டர்சன் தமது தகப்பனார் போகும் வேலையில் வெற்றி பெற்றுவர வேண்டுமென்று கடவுளை நோக்கிக் கைதொழுதார். ஆண்டர்சன் தந்தையார் பட்டுத்துணியில் தாம்தைத்த நடனச் செருப்பை அதற்குரிய சீமாட்டியினிடம் கொண்டுபோய்க் கொடுத்தும், உண்மையிலேயே அவைகள் நன்றாய் இருந்தும் வீண் டம்பக்காரியாகிய அந்தச்சீமாட்டி அவைகள் நன்றாய் இல்லையென்றும், அருமையான தன்னுடைய பட்டுத்துணி கெட்டுப்போய் விட்டதென்றும் ஆரவாரித்தாள். ஆகவே, ஆண்டர்சனுடைய தந்தையாருக்கு அவர் கருதியவேலை கிடைக்காமற் போயிற்று. அவர் உடைந்த மனத்தோடு வீடுவந்து சேர்ந்தார். நடந்ததை அறிந்த அவர் குடும்பத்தார் துன்பப்பட்டனர். சிறுவராகிய ஆண்டர்சன் 'ஏழைகளுக்கு உதவி செய்யாத கடவுள் என்ன கடவுள்' என்று சலிப்புற்றார்.

அந்தச் சமயத்தில் உலகமுழுவதையும் நடுங்கச் செய்தவனாகிய நெப்போலியனுடைய படையை விருத்தி செய்வதற்காக நெப்போலியனுடைய சேனைத் தலைவர்கள் ஆட்களைச் சேர்த்துக்கொண் டிருந்தார்கள். நெப்போலியனுடைய படையில் சேர்ந்தால் தாம் முன்னேற்ற மடையலாம் என்று நினைத்து

ஆண்டர்சனுடைய தகப்பனார் நெப்போலியன் படையில் ஒரு வீரராகச் சேர்ந்தார். அங்கும் அவருடைய துரதிர்ஷ்டம் அவரைப் பின்தொடர்ந்து சென்றது. அவர் நெப்போலியனுடைய சேனையில் ஒரு வீரராகச் சேர்ந்தவுடன், நெப்போலியன், பிரிட்டிஷ் தளகர்த்தராகிய 'அட்மிரல் நெல்சன்' என்பவரின் திறமையினால், வீழ்த்தப்பட்டான். அதனால் அவனுடைய சேனைகள் கலைக்கப் பட்டன. ஆண்டர்சனுடைய தந்தையார், தாம் நினைத்தகாரியம் நிறைவேறாமற் போகவே, வருத்திய மனத்தோடு வீடுவந்துசேர்ந்தார். பின்னர் ஆண்டர்சனுடைய தந்தையார், தமது முயற்சிகளில் ஒன்றும் கைகூடாமற் போகவே, ஏக்கமடைந்து இறந்து போனார். அப்போது சிறுவராகிய ஆண்டர்சனுக்கு வயது பதினொன்று. அவர் கல்வி முதலியவைகளில் மிகவும் கீழ் நிலையிலேயே யிருந்தார். அவர் இருந்த ஊரில் ஒரு கிழவி தானே சில பிள்ளைகளைச் சேர்த்து அவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடத்தைத் தானே நடத்திவந்தாள். ஆண்டர்சனுடைய தாயார் ஆண்டர்சனை அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் அதில் அவரைச் சேர்த்து விட்டுப் பிறகு உபாத்தியாயினியாகிய கிழவியைப்பார்த்து, 'இவன் என்மகன். இவன் ஓர் அடியும் பட்டறியாதவன். ஆகையால் இவனை அதிகமாக அடியாமல் இவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும்' என்று சொல்லிப் போனார். அந்த எச்சரிக்கையை மறந்து ஒருநாள்கிழவி ஆண்டர்சனை பிலாறுகொண்டு நன்றாகப் புடைத்து விட்டாள். உடனே ஆண்டர்சன் புத்தகத்தை யெடுத்



துக்கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார். பின்னர் அவர் பல பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டார். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அடிப்பதை அறிந்து அவர் எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் போகாமல் இருந்து விட்டார். ஆண்டர்சனுடைய தாயார் அவர்கள் நாட்டு வழக்கப்படி, தம் கணவர் இறந்த சில மாதங்களுக்குப் பிறகு, வேறொருவரை மணம் செய்து கொண்டார். ஆண்டர்சன் பின்னும் அவருடைய இஷ்டம்போல் ஆடிக்கொண்டிருந்தார். பின்னர், ஆண்டர்சன் ஒரு தொழிற்சாலைக்கு வேலையில அனுப்பப்பட்டார். அந்தத் தொழிற்சாலையில் அவரைப்போலவே வேலையில வந்த சிறுவர்கள் அவரைப் பார்த்து, 'உன்--முகத்தையும் உன் தலைமயிரையும் பார்த்தால் நீ ஒரு பெண்போல் காணப்படுகின்றாய்; நீ ஒரு பெண்தான்' என்று தினந்தோறும் சொல்லிப் பரிகாசம் செய்தார்கள். ஆகையால் ஆண்டர்சன் அந்தத் தொழிற்சாலைக்குப் போவதையும் விட்டு விட்டார். பின்னர் அவர் தம் வீட்டில் இருந்துகொண்டு கிடைத்த புத்தகத்தைத் தமக்குத் தெரிந்தவரையில் படித்துக் கொண்டிருந்தார். நாடகங்களைப் படிப்பதில் அவருக்கு ஆவல் அதிகமாய் இருந்தது. அதனால் அவர் 'டேனிஷ்பாஷை'யில் மொழிபெயர்க்கப்பட்ட 'ஷேக்ஸ்பியர்' நாடகங்களைப் படிக்க முயற்சிசெய்து ஒருவாறு படிக்கலானார். அவர் படிக்கும்போது அவர் படிப்பதைக் கேட்டுக்கொண்டிருக்கும் அவருடைய அயலார் அவரிடத்தில் அதிகப் பிரியங் கொண்டனர். பள்ளிக்கூடங்களில் சேர்ந்தாற்போல் நான்கு மாதங்களேனும் நன்றாய் வாசித்தறியாத ஆண்டர்சன் உயர்ந்த

நூல்களை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாரென்றால் கல்வி சம்பந்தமான ஏதோ ஒரு வகையான சக்தி இயற்கையிலேயே அவரிடம் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறதல்லவா? ஆனால், அவரிடம் இருந்த அந்தச் சக்தியை முதலில் அவராவது மற்றவர்களாவது உணரவேயில்லை.

## வேற்றூருக்குப் போதல்

கொஞ்சக்காலத்திற்குப்பிறகு ஆண்டர்சனுடைய மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. தாம் எங்கேயாவது சென்று செல்வத்தைச் சேகரிக்கவேண்டுமென்று அவர் கருதினார். கல்வி சம்பந்தமான ஒருவகை சக்தி அவருக்கு இருந்த போதிலும் அது வகைப்பட்டு அவரிடம் விளங்கவில்லை. அவருடைய வயதை நோக்குகையில் அவருடைய உயரம் அதிக மென்றே தோன்றியது. அவருடைய மூக்கும், கால்களும் நீண்டிருந்தன; தேகத்தில் போதுமான உடையில்லை. அப்போது அவருடைய அறிவு சாதாரணமானதா யிருந்தது. ஆயினும் ஆண்டர்சனுக்கு, 'நாம் முன்னுக்கு வருவோம்' என்னும் உறுதியான நம்பிக்கை யிருந்தது. அதனால் அவர் தாம் வேற்றூருக்குச் செல்லத்தீர்மானித்தார்; அதற்காகக் கொஞ்சங்கொஞ்சமாக முப்பது 'ஷில்லிங்' சேர்த்துக்கொண்டார். அச்சிறு தொகையோடு அவர் தமது பிரயாணத்தைத் தொடங்கத் தீர்மானித்தார். அப்போது அவர் 'கோபன்ஆகன்' (Copenhagen) என்னும் பட்டணமே உலகிற் சிறந்ததென்று எண்ணினார். ஆகையால் தாம் அங்குப்போக அவர் தீர்மானம் செய்து கொண்டார்.



'நீ அங்குப்போய் என்ன செய்வாய்?' என்று ஆண்டர்சனுடைய தாயார் ஆண்டர்சனைக் கேட்டார்.

அதற்கு, 'நான் அங்குப்போய் பிரபல மடைவேன். உலகத்தில் எல்லா வற்றிற்குந் துணிந்து உழைக்கிறவர்களே பிரபல மடைகிறார்கள்' என்று ஆண்டர்சன் கம்பீரமாகக் கூறினார்.

அதைக்கேட்ட ஆண்டர்சன் தாயார் அவ்வாறு செய்வது தகாதென்றும், எங்கும் போகவேண்டாமென்றும் சொன்னார். ஆண்டர்சன் தம் தாயின் தடை வார்த்தையைக் கேட்டு அழலானார். அதனால் ஆண்டர்சனுடைய தாயார் குறிசொல்லுகிறவளை வரவழைத்து, அவளிடம் தம்மகனைப் பற்றிச்சொல்லி, 'என் மகன் என்னை விட்டுச் சென்றால் எவ்வாறுவான்?' என்று கேட்டார்.

அதற்கு அவள், 'அம்மணி! தங்கள் குமாரர் தங்களை விட்டுச் சென்றால் மிகவும் பிரபல மடைவார். அவரால் அவர் பிறந்த ஊர் பெருமையடையப் போகின்றது' என்று சொன்னாள்.

இவ்வாறு அவள் ஆண்டர்சனைப்பற்றி ஒரு தீர்க்கதரிசியைப்போல் சொல்லிய வார்த்தைகள் ஆண்டர்சனுடைய பிற்கால வாழ்க்கையில் தவறாமல் பலித்தன.

ஆண்டர்சனுடைய தாயார் ஆண்டர்சன் தம்மை விட்டுப் பிரிய சம்மதித்தார். ஆண்டர்சன் பொதுவாக அறிவாளியாதலால் தாம் கோபன்ஆகனுக்குப் போனவுடன் என்ன செய்கிறதென்று எண்ணினார். அவருக்கு நாடகத்தில் பிரியம் உண்டு அல்லவா? ஆகையால் தாம் நாடகமேடையில் சேர்ந்து முன்னேற்ற மடைய வேண்டும் என்று அவர் எண்ணினார். பிறகு அவர்

கோபன்ஹகனில் உள்ள, 'தியேட்டர் ராயல்' (Theatre Royal) என்னும் நடன சாலையில் இருந்த ஒரு பிரபல நடனமாதுக்கு ஒருவரிடமிருந்து ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக்கொண்டார். அதில் ஒரு வேடிக்கை! எவர் அந்த நடனமாதுக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்தாரோ அவர் அந்த நடனமாதுக்குக் கொஞ்சமும் தெரிந்தவரல்லர். அவர் கொடுத்த சிபாரிசுக் கடிதத்தை ஆண்டர்சன் பொன்னினும், மணியினும் பெரியதாக நினைத்து அதைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு கோபன்ஹகன் போய்ச்சேர்ந்தார். பிறகு அவர் தாம் பார்க்க விரும்பிய நடனமாதைக்கண்டு அவளிடம் தம்மிடத்தில் இருந்த சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்தார். அவள் அதைப் பிரித்துப்பார்த்து அதைத் தனக்கு எழுதியவர் இன்னார் என்று தெரியாமையினால் ஆச்சரியமடைந்தாள். ஆயினும் அவள் ஆண்டர்சனை நோக்கி, 'நாடக சம்பந்தமானவற்றில் நீ நடிக்க வல்லது யாது?' என்று கேட்டாள்.

உடனே ஆண்டர்சன், 'பாதரட்சையோடு என்னால் நடிக்கமுடியாது; மன்னிக்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டே தம் பாதரட்சைகளைக் சுழற்றி விட்டுத் தம்முடைய மனம் போனவாறு பாடிக்கொண்டே ஆடினார். திடீரென்று அவர் ஆடிப்பாடுவதையும், அவர் தரித்திருந்த ஒழுங்கற்ற உடைகளையும் கண்ட அந்த நடனமாது உண்மையில் அவர் பைத்தியம் பிடித்தவரென்று நினைத்து அவரை வெளியிற் போகும்படி செய்து விட்டாள்.

பிறகு ஆண்டர்சன் நாடக சாலையின் தலைவரைப் போய்ப் பார்த்து அவரைத் தமக்கு ஒரு வேலை



தரும்படி வேண்டினார். அதற்கு நாடகசாலைத் தலைவர் ஆண்டர்சனைப் பார்த்து, 'நீ மெலிந்திருக்கின்றபடியால் உன்னால் நாடகசாலையில் உள்ள வேலைகளில் எதையும் செய்ய முடியாது' என்று சொன்னார்.

'வேலை கிடைத்தால், எனக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு, நான் நன்றாய்ச் சாப்பிட்டுப் பலமுடையவனாவேன்' என்றார் ஆண்டர்சன்.

ஆண்டர்சனுடைய வேண்டுகோள் பிரயோசனப்படவில்லை. அதனால் அவர் அந்த இடத்தை விட்டு வெளியிற் சென்றார். சென்றதும் தமது நிலைமையைப் பற்றி அவர் நினைத்தார். உடனே அவருக்கு அழுகை வந்தது. "துன்பப்படுகிறவர்களுக்குக் கடவுள் துணையிருப்பார்" என்று சொல்கிறார்களே, அந்தக் கடவுள் எங்கே?" என்று சொல்லி ஆண்டர்சன் வருந்தினார்.

பிறகு ஆண்டர்சன் ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளலாமென்று நினைத்தார். உடனே அவர் ஒரு தச்சனிடம் போய்ச் சேர்ந்தார். அந்தத் தச்சன் குணம் அவருக்குப் பிடிக்காமையினால் தாம் அவனிடம் போய்ச்சேர்ந்த அன்றே அவர் அவனை விட்டுப் போய்விட்டார். வரவர அவர் கையில் இருக்கும் பொருள் குறைந்துகொண்டே போயிற்று. கையிற் போதுமான பொருள் இல்லை; சிநேகிதர்கள் இல்லை; எவ்வகையிலும் போதுமான ஆற்றலில்லை. ஆண்டர்சன் என்ன செய்வார் பாவம்!

திடீரென்று ஆண்டர்சனுடைய மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அவர் ஓடன்ஸ் நகரத்தில் இருக்கும்போது, கோபன்ஹகனில் உள்ள சங்கீத சங்கத்து அதிகாரியான சிபோனி (Siboni) என்பவரைப்

பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். சிபோனி தமக்கு ஏதாவது உதவிசெய்யக்கூடுமெனக் கருதி ஆண்டர்சன் அவரைக் காண அவர் வீட்டிற்குச் சென்றார்.

சிபோனி என்பவர் பிரசித்தி பெற்றவர்களான தமது நண்பர்கள் பலருக்குத் தமது வீட்டில் விருந்தளித்துக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் ஆண்டர்சன் சென்று சாத்தப்பட்டிருந்த சிபோனியின் வீட்டு வெளிவாயிற் கதவைத் தட்டினார். உடனே வேலைக்காரி ஒருத்தி கதவைத்திறந்து ஆண்டர்சனைக் கண்டாள். உடனே ஆண்டர்சன் அவளிடம் தம் வரலாறு முழுவதையும் சுருக்கமாகக்கூறித் தமக்குப் பாடத் தெரியுமென்றும் சொன்னார். அவர் சொல்லிய விஷயங்கள் எல்லாவற்றையும் அந்த வேலைக்காரி இரக்கத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள். உடனே அவள்விருந்துண்பவர்களிடம் சென்று, 'வீட்டு வாயிற்படியில் ஓர் ஏழைச் சிறுவன் வந்திருக்கிறான்' என்று கூறிப் பிறகு ஆண்டர்சனுடைய வரலாற்றையும் அவர்களுக்கு, இரக்கந் தோன்றுமாறு, கூறினாள்.

உடனே விருந்தினர்கள் வெளியில் வந்து ஆண்டர்சனைக் கண்டு இரக்கப்பட்டு அவரை நோக்கி, 'உனக்குப் பாடத்தெரியுமானால் பாடு' என்றார்கள். உடனே ஆண்டர்சன் தமது இனிய குரலில் பாடலானார். அவர் பாடிக்கொண்டிருக்கும்போது அதுவரையில் அவர் பட்ட கஷ்டங்கள் யாவும் ஒருங்கே அவர் மனத்தில் தோன்றின. அவற்றால் அவருக்குத் துன்பம் உண்டாக அத்துன்பத்தைத் தாங்கமாட்டாமல் அவர் அழ ஆரம்பித்தார். அவர் அழுவதைக்கண்டவுடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப்



பெரிதும் இரக்கமுண்டாயிற்று. அப்போதே அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டர்சனுக்குச் சிறிது பொருள் கொடுத்தனர். அஃதோடு அமையாது அவர்கள் தங்களோடு விருந்துண்ணும்படி ஆண்டர்சனையும் சேர்த்துக்கொண்டனர்.

சிபோனியைக் கண்டது முதல் ஆண்டர்சன் அடிக்கடி அவர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். ஏழைகளுக்கு இரங்குந் தன்மையுடையவராகிய சிபோனி என்பவர் ஆண்டர்சன் மீது அன்புகொண்டு அவருக்குச் சங்கீத பாடங்களைச் சொல்லி வந்தார். அஃதோடமையாது சிபோனி தமது உதவியோடு தம் நண்பர்களின் உதவியையும் சேர்த்து மாதாமாதம் ஆண்டர்சனுக்கு அவருடைய செலவுக்காகக் கொஞ்சம் பொருள் கொடுத்துக்கொண்டு வந்தார். ஆண்டர்சன் தமக்குக் கிடைக்கும் பொருளைக்கொண்டு ஒரு கிழவியின் வீட்டில் தங்கி வசிக்கலானார். அவ்வீட்டுக்குரிய கிழவி ஆண்டர்சன் கையில் ஒரு சிறு தொகையும் இராதபடி அவருக்குக் கிடைக்கும் தொகையைத் தந்திரமாகப் பரித்து வந்தாள். அதனால் ஆண்டர்சன் தமக்கென்று ஒரு நல்ல ஆடையும் இல்லாமல் சாதாரணத் தோற்றத்தோடு வாழலானார். சிபோனியின் உதவியினால் ஆண்டர்சன் ஆடுதல் பாடுதல் ஆகிய இரண்டு போதனா வகுப்புக்களிலும் சேர்ந்து அங்குப் போதிப்பவைகளைக் கற்றுவரலானார். அவர் எப்போதும் சேர்ந்த சில நடிகர்களுடைய அனுதாபத்தைப் பெற்றிருந்தார். அவர்கள் ஆண்டர்சனுக்கு நாடகத்தில் இருந்த அளவற்ற ஆவலைக்கண்டு மகிழ்ந்தனர்.

ஆனாலும் அதுவரையில் ஆண்டர்சனுடைய வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக மாறவில்லை.

இச்சமயத்தில் ஆண்டர்சன் ஒழிந்த நேரத்தில் 'லாட்டின்' (Latin) பாஷையைப் படிக்கலானார். ஆனால் அப்பாஷையை அவர் படிக்க முடியாதபடி சங்கீத சங்கத்தின் நாடக சாலையில் அவருக்கு அதிக வேலை ஏற்பட்டிருந்தது. ஒரு முறை நாடகத்தில் சிறிதுநேரம் ஒரு சாதாரண பாத்திரமாக நடிக்கும் சந்தர்ப்பம் ஆண்டர்சனுக்குக் கிடைத்தது. அப்போது அவர் மனத்தில் என்றும் தோன்றாத மகிழ்ச்சி தோன்றியது.

இவ்வாறு ஆண்டர்சன் ஆறுமாதங்களைக் கழித்தார். அப்போது திடீரென்று அவர் குரல் கெட்டுப் போயிற்று. 'இனி அவர் நாடக சாலைக்கு உபயோகமாகார்' என்று நாடக நிபுணர்கள் கூறிவிட்டனர். ஆகவே சிபோனி ஆண்டர்சனை அழைத்து, 'இனி, நீ சிறந்த நாடக பாத்திரனாகக்கூடும் என்பது வீண் பேச்சாகும். ஆகையால் நீ உன்னுடைய ஊருக்குச் சென்று ஏதாவது ஒரு வியாபாரத்தைக் கற்றுக் கொள்' என்று சொன்னார். இவ்விஷயத்தில் சிபோனியின் அபிப்பிராயப்படி நடக்க ஆண்டர்சனுக்கு இஷ்டமில்லை. 'இனி நான் ஏதாவதொரு வகையில் முன்னுக்கு வாராமல் என்னுடைய ஊருக்குப் போக முடியாது. எவ்வகையிலாவது கடவுள் என்னைக் காப்பாற்றுவார்' என்று ஆண்டர்சன் தமக்குள் நினைத்தார்.

பிறகு ஆண்டர்சன் முன்னே தமக்கு ஒருபோதும் அறிமுகமில்லாத ஒரு கனவானிடம் சென்று



அவரிடம் தம்சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொன்னார். அந்தக் கனவான் ஆண்டர்சனுக்குக் கல்வி சம்பந்தமாக வேண்டிய உதவிகளைச் செய்து வரலானார். அவர் உதவியினால் ஆண்டர்சன் இரண்டு வருடகாலம் கோபன்ஆகனில் வசித்துவந்தார். தாம் ஒரு சிறந்த நாடகபாத்திரர் ஆகவேண்டும் என்னும் எண்ணம் அவர் மனத்தைவிட்டு அகலவேயில்லை. அதனால் அவர் ஒழிந்த நேரத்தில் நாடகசாலையைச் சுற்றிக்கொண்டிருப்பார். 'ஒருவன் வருடப்பிறப்பன்று எக்காரியத்தைச் செய்கின்றானோ அக்காரியத்தையே அவன் அவ்வருட முழுவதும் செய்வான்' என்று ஆண்டர்சன் அப்போது நம்பினார். ஆகவே, புதுவருடத்தன்று தாம் நாடகமேடையின்மீது நடித்தால் தமக்கு அவ்வருடமுழுவதும் நாடகமேடைமீது நடிக்கக்கூடிய சந்தர்ப்பம் வாய்க்குமென்று ஆண்டர்சன் தீர்மானித்தார். அதனால் அவர் ஆயிரத்து எண்ணூற்று இருபத்தோராவது வருடப் பிறப்பன்று, பின் இரவில், மெதுவாக ஒரு நாடகசாலைக்குள் நுழைந்து நாடகமேடைமீது ஏறி நின்றார். ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லி நடிக்க வேண்டுமென்று அவர் கருதினார். ஆனால் ஒரு விஷயமும் அவர் நினைவுக்கு அப்போது வரவில்லை. ஆகவே அவர் கடவுளை நோக்கித் துதித்துவிட்டு, 'இனி இவ்வருடத்தில் நாடக மேடைமீது நாம் நடிப்பது நிச்சயம்' என்னும் நம்பிக்கையோடு ஒருவருக்கும் தெரியாதபடி நாடகசாலையை விட்டுப் போய்விட்டார்.

ஆண்டர்சனுக்குப் போதுமான பொருள் வருவதற்கு வழியில்லை. ஆகவே தமது சாப்பாட்டிற்காகக் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுக்கவும்

அவரால்முடியவில்லை. இவ்விஷயத்தை வெளியிற்சொல்லவும் அவர் வெட்கப்பட்டார். அதனால் அவர் தாம் சாப்பிடுமிடத்தில் தமக்கு அடிக்கடி தமது நண்பர்களின் வீட்டில் 'விருந்து' கிடைப்பதாகக் கூறிக் கடைகளில் விற்கும் உரொட்டித்துண்டுகளை வாங்கித்தின்று தண்ணீரைக்குடித்துத் தமக்குச் சௌகரியமானவிடத்தில் படுத்துத் தூங்கி வந்தார். ஆனால் ஆண்டர்சன் எப்போதும் 'நாம் முன்னுக்கு வருவோம்' என்று எண்ணுவதைத் தவிர தமது நிகழ்கால நிலையைக் குறித்து நினைப்பதே கிடையாது. உண்மையில் அவர் தம்முடைய எந்த நிலையிலும் இன்பமுடையவராகவேயிருந்தார்.

ஆகவே அவருக்கு ஏற்பட்ட துன்பத்தினால் அவர் அதிகமாகக் கஷ்டப்படவில்லை என்றே சொல்லலாம். கடைசியாக நடனம் சங்கீதம் முதலிய போதனா சாலைகளில் இருந்து, அவைகளின் அதிகாரிகள், ஆண்டர்சனை வேறு ஏதாவது ஒரு வேலைபார்த்துக் கொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டனர்.

'இனி என்ன செய்வது?' என்று ஆண்டர்சன் ஆலோசனை செய்தார். அவர்மீது அன்புற்று அவர் நன்மையைக் கருதியிருந்த டேனிஷ் பாடகர் ஒருவரது மனைவியின் தூண்டுதலின்மீது நடிப்பதற்கேற்ற நாடகம் ஒன்றை அவர் எழுதத் தீர்மானித்தார். வேறு செல்லும்வழி ஒன்றையும் அவர் காணவில்லை. அதனால் அவர் உடனே 'துன்பியல்' (Tragedy) நாடகம் ஒன்றை எழுத ஆரம்பித்து 'முதற்காட்சி'யைப் பூர்த்தி செய்தார். உடனே அவர் தாம்எழுதியதை எடுத்துக்கொண்டு, டேனிஷ் மொழி பெயர்ப்பாளரான



'அட்மிரல் உல்ப்' (Admiral Wulff) என்பாரிடம் சென்று அவரைப்பார்த்து, 'ஐயா, நீங்கள் "ஷேக்ஸ்பியர்" நாடகங்களை மொழிபெயர்த்திருக்கின்றீர்கள். நான் ஷேக்ஸ்பியரை மிகுதியும் புகழ்கின்றேன். இப்போது நான் துன்பியல் நாடகம் ஒன்றை எழுத ஆரம்பித்துச் சிறிது எழுதியிருக்கிறேன். நான் அதை உங்களுக்கு வாசித்துக் காண்பிக்கலாமா?' என்று கேட்டார்.

திடீரென்று தம்முன் தோன்றிய ஆண்டர்சனின் வார்த்தைகளைக் கேட்ட அட்மிரல் திடுக்கிட்டார். அவர் ஆண்டர்சனைத் தம்மோடு இருந்து போஜனமுண்ணச்செய்து பிறகு அவர் கொண்டுவந்த துன்பியல் நாடகத்தின் முதற் காட்சியை வாசிக்கச்சொல்லி, அதை முற்றிலும்,பொறுமையோடு கேட்டுக்கொண்டு இருந்தார். அன்றுமுதல் அட்மிரல் உல்ப் ஆண்டர்சனிடம், மற்றவர்களைப் போலவே, அன்புபாராட்டி வந்தார். இச்சமயத்தில் ஆண்டர்சன் கோபன்ஹகனில் இருந்த புகழ்வாய்ந்த பெருமக்கள் எல்லோரையுமே பார்த்துவிட்டார் என்று சொல்லலாம்.

அப்போது கோபன்ஹகனில் 'மேத்தியாஸ் தைல்' (Matthias Thicle) என்னும் பிரசித்திபெற்ற ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் ஏற்கனவே, 'டேனிஷ் மக்களின் கதைகள்' என்னும் நூலை எழுதிப் பெரும் புகழ்பெற்றவராவர். ஒருநாள் அவ்வாசிரியர் தமது அறையில் மேஜையின் அருகில் உட்கார்ந்து எழுதிக்கொண்டு இருந்தார். அச்சமயத்தில் சாத்தப் பெற்றிருந்த அவ்வறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. மேத்தியாஸ்தைல் திரும்பிப்

பார்ப்பதற்குள், திடீரென்று அங்குத் தோன்றிய ஆண்டர்சன் அவர் எதிரில்போய் வணங்கிவிட்டு அவரைப்பார்த்து, 'ஐயா நான் நடிகர்களுக்கேற்ற சில பாட்டுக்களைச் செய்திருக்கின்றேன். அவைகளைத் தங்கள் முன்னே சொல்லட்டுமா?' என்று கேட்டார். திடீரென்று நேர்ந்த இச்சம்பவத்தைக் கண்டு திடுக்கிட்ட காரணத்தால் மேத்தியாஸ் தைல் என்பார் ஒன்றுஞ் சொல்லத் தோன்றாமல் மௌனமுற்றார். அவர் மௌனத்தை, ஆண்டர்சன், அவர் தமது வேண்டுகோளுக்கு இணங்கிய அடையாளமாகக் கொண்டு தம்முடைய பாக்களை வெகுவேகமாக வாய் ஓயாமல் சொல்லி முடித்தார். மேத்தியாஸ் தைல் பேசுவதற்குள் ஆண்டர்சன் ஒரு பைத்தியக்காரரைப் போல அவ்விடத்தைவிட்டு ஓடி மறைந்தார். திடீரென்று நேர்ந்த இத்தகைய நிகழ்ச்சிகளால் மேத்தியாஸ் தைல் ஆச்சரியமுற்றார். மேத்தியாஸ் தைல் அன்றுமாலை நடந்த விருந்தொன்றில் எல்லோரிடத்திலும் வெகுவாக ஆண்டர்சனைப்பற்றிப் புகழ்ந்து, 'ஆண்டர்சனுக்கு எவ்விஷயத்தையும் ஓதாதுணரும் சக்தியிருக்கின்றது; ஆண்டர்சன் எப்பொழுதேனும் ஒரு காலத்தில் முன்னேற்றமடைவது திண்ணம்,' என்று சொன்னார்.

### கல்விகற்கப் புகுதல்

நாம் இதுவரையில் சொல்லிவந்த ஆண்டர்சனுடைய வாலிபவாழ்க்கை ஒருவாறு கோபன்ஹேகனில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கு, முற்றும் மரத்தினால் கட்டப்பட்டுத் தழைத்து வளர்ந்த மரங்களால் சூழப்பெற்ற அழகிய வீடொன்றில், டேனிஷ்



தேசத்து அந்தரங்கக் காரிய நிருவாக சபையின் அங்கத்தினராகிய 'ஜோனஸ் காலின்' (Jonas Collin) என்பார், 'எட்வர்டு' என்னும் தமது குமாரருடன் வசித்துக்கொண் டிருந்தார். அவரே ஆண்டர்சன் தமது எதிர்காலத்தில் அடைந்த பலவித வெற்றிக்கும், இன்பத்திற்கும் காரணமானவர் என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும். உண்மையில் ஜோனஸ்காலினுடைய உதவியைப் பெறுமுன் ஆண்டர்சன் எவ்வித முயற்சியிலும் வெற்றி பெறவில்லை. ஆண்டர்சன் பல விஷயங்களை அறிந்திருந்தார். ஆனால் ஒரு விஷயத்தையும் அவர் நன்றாய் உணரவில்லை. ஆண்டர்சனுக்கு 'சர்வால்ட்டர் ஸ்காட்' என்னும் பெரியார் எழுதிய நூல்களினிடத்தில் அதிக நன்மதிப்புண்டு. ஆகையால் இலவச வாசகசாலைக்குச் சென்று 'ஸ்காட்' எழுதிய நூல்களை ஆண்டர்சன் ஆவலோடு வாசித்து வருவார்.

இச்சந்தர்ப்பத்தில் ஜோனஸ் காலின் என்பவர் 'தியேட்டர் ராயல்' என்னும் நடனசாலையின் காரிய நிருவாகியானார். அவர் ஒருநாள் 'அட்மிரல் உல்ப்' என்பவர் மூலமாக ஆண்டர்சனைப் பற்றிக் கேள்விப்பட்டார். பிறகு அவர் ஆண்டர்சனைக் கண்டு அவர் எழுதிய 'துன்பியல்' நாடகத்தைப் படித் அப்- பார்த்தார். அது நடிப்பதற்குத் தகுதியற்றதென்று அவர் அறிந்து அதை ஆண்டர்சனுக்கு அனுப்பிவிட்டார். ஆயினும் கூர்மையான அறிவும் இரக்கம் நிறைந்த மனமும் உள்ள ஜோனஸ் காலின் என்பார், ஆண்டர்சன் எழுதிய நாடகத்தைப் படித்தமையினால், கொஞ்சம் சீர்படுத்தி விட்டால் ஆண்டர்சன் மிக விரைவில் முன்னேற்ற மடைவார்

என்று தீர்மானமாகக் கருதினார். அதனால் அவர் அப்போதிருந்த 'டென்மார்க்' தேசத்து அரசருக்கு ஆண்டர்சனைப்பற்றிச் சொல்லி அவ்வரசர் கிருபையால் வருஷந்தோறும் ஏற்படும் செலவுக்குப் பொருளும், இலவசக் கல்வியும் ஆண்டர்சனுக்குக் கிடைக்கும்படி உறுதியான ஏற்பாடொன்றைச் செய்து முடித்தார். அவர் எல்லாவற்றினும் முதலாக ஆண்டர்சன் வகையாகப் படிக்கவேண்டுமென்று கருதினார். அதனால் அவர் ஆண்டர்சனைக் கோபன்ஹகனைச் சார்ந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் உள்ள 'சிலாகில்ஸ்' (Slagelse) என்னும் ஊரில் இருந்த ஒரு பள்ளிக் கூடத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார்.

தம்முடைய நன்மைக்கான இத்தகைய சிறந்த விஷயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனே ஆண்டர்சன் ஜோனாஸ்காலின் என்பாரைச் சென்று கண்டு அவருக்குத் தமது நன்றியறிதலை ஆனந்தத்தோடு தெரிவித்தார். அப்போது காலின் என்பார் அவசியம் ஆண்டர்சன் வகையாகப் படிக்கவேண்டுமென்பதைக் குறித்தும், வயதேறிவிட்டதை ஒருபொருளாகக் கொள்ளக் கூடாதென்பதைப் பற்றியும் ஆண்டர்சனிடம் கூறிப் பின்னும் அவர் ஆண்டர்சனைப் பார்த்து, 'நான் குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தில் நீ சேர்ந்து வாசிப்பாயானால் உனக்கு நலமுண்டாகும். நீ அங்குச் சென்றவுடன் அடிக்கடி உன் சுகத்தைப்பற்றி எனக்கு எழுதுவதோடும், உனக்கு வேண்டியவைகளைக் குறித்தும் எனக்கு எழுது. உனக்கு வேண்டிய உதவிகளை நான் செய்கிறேன்' என்று அமைதியாகவும், அன்பாகவும் கூறினார்.



இவ்வாறு தமக்கவசியமானவைகளைச் செய்து தம்மிடம் தந்தையினும் அதிக அன்பு காட்டும் ஜோனாஸ் காலின் என்பாரைத் தக்க சமயத்தில் தம்மைக் காக்கவந்த கடவுளாகக் கருதி ஆண்டர்சன் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

தாம் கோபன்ஹகனை விட்டுப் போவதற்கு முன்னால் தாம் எழுதிய நாடகத்தையும், வேறு இரண்டொரு கதைகளையும் அச்சிட்டுப் பிரசுரம் செய்யவேண்டுமென்று ஆண்டர்சன் நினைத்தார். அந்த நூல்கள் சாதாரணமானவைகள். அதனால் அவர் அந்த நூல்களில் ஒன்றின் ஆரம்பத்தில், 'இதை எழுதிய நான் பதினேழு வயதினையுடையவன்' என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் அந்தப் புத்தகங்களை, அவர் வெளியிடப் போதுமான பணம் இல்லாமையினால், வெளியிடவில்லை. பிரசுரகர்த்தர்களும் அவற்றை வெளியிட விரும்பவில்லை.

கடைசியாக ஒரு நாள் காலையில் ஆண்டர்சன், கற்கவேண்டுமென்னும் அவசியத்தை முன்னிட்டு, அக்காலத்துப் பிரயாணிகள் ஏறிச் செல்லும் 'வேகரதம்' (Mail-Coach) என்னும் வண்டியில் ஏறிச் சிலாகில்ஸ் என்னும் ஊரில் உள்ள, தாம் போகவேண்டிய, பாடசாலைக்குப் போய்ச்சேர்ந்தார். ஆண்டர்சன் பாஷை சம்பந்தமாக ஒருவாறு வன்மை பெற்றிருந்த போதிலும், மற்றவிஷயங்களில் திறமையற்றிருந்தமையினால், அவரைத் தலைமை ஆசிரியர் கீழ் வகுப்பில் உள்ள சிறு பிள்ளைகளோடு சேர்த்துப் படிப்பித்து வந்தார். கற்கவேண்டுமென்னும் கவலை ஆண்டர்சனுடைய மனத்தில் நிலைத்திருந்தமையினால் அவர் தலைமை

ஆசிரியர் தம்மைச் சிறுவர்களோடுசேர்த்துப் படிக்கச் செய்தமைக்காக வருந்தவில்லை. ஆனால் முதன் முதல் அவர் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் இலக்கணம், பூகோளம், கணக்கு முதலியவைகளைக் கண்டு பயந்து நடுச் சமுத்திரத்தில் விழுந்து தவிப்பவர் போல் கலங்கினார். ஆனால் இடைவிடாது படித்துப்படித்து அவர் தமக்குக் கஷ்டமாகத் தோன்றிய பாடங்கள் எல்லாவற்றையும் சுலபமானதாகச் செய்து கொண்டார். ஓயாது படிப்பதனால் அவர் தலையில் கொதிப் பேறிவிடும். அப்போது அவர் காது தலையைத் தண்ணீரால் நனைத்துத்தாம் இருந்த வீட்டின் தோட்டத்திற் சென்று காற்றில் சிறிதுநேரம் நிற்பார். கொஞ்சங் கொஞ்சமாகத் தலையிலேற்பட்ட கொதிப்பு அடங்கி விடும். மறுபடியும் ஆண்டர்சன் வாசிக்கச் செல்வார். பொதுவாக அவர் கணக்கில் பிரியமற்றவராயிருந்தார். அதைப்பற்றி அவர் ஜோனஸ் காலின் என்பாருக்கும் ஒரு முறை எழுதினார். பொதுவாகப் பதினேழு வயது வரையில் ஒரு கட்டுப்பாடு மில்லாமல் மனம் போன படி வாழ்ந்து கொண்டிருந்த ஆண்டர்சனுக்குக் கட்டுப் பாட்டுடன் நடக்கவேண்டிய பள்ளிக்கூட வாழ்க்கை கஷ்டமாகவே தோன்றியது. அதோடு மற்றொரு கஷ்டமும் ஒருங்கு சேர்ந்து ஆண்டர்சனுடைய துன்பத்தை அதிகப் படுத்தியது. தலைமை ஆசிரியர் அடிக்கடி ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று நன்றாகப் படிக்காத சிறுவர்களை ஆசிரியர்கள் மூலமாக விசாரித்தறிந்து அடித்தும், அடிப்பதாகப் பயமுறுத்தியும் செல்வார். ஆண்டர்சனும் சில சமயங்களில் தலைமை ஆசிரியரிடம் அகப்பட்டுக் கொள்ளுவார். அதனால்



அவர கல்வி சம்பந்தமாகக் கொண்டிருந்த துன்பம் அதிகப்பட்ட தென்னலாம். அவருக்கு எல்லாவிஷயங்களையும் சகித்துக் கொள்ளக் கூடிய சக்தி அதிகமாய் இருந்தமையினால் அவர் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு இருந்தார். அவருக்குப் பழக்கமானவர்களில் அநேகர் அவருக்கு, அடிக்கடி, தேறுதலான பலவார்த்தைகளைக் கூறி வந்தனர். கடவுள் சம்பந்தமாகவும், பாஷை சம்பந்தமாகவும், 'பைபிள்' சம்பந்தமாகவும் ஆண்டர்சன் சிறந்து விளங்கினார். அதையறிந்த அவருடைய ஆசிரியர்கள் அவரைக் கொண்டாடினார்கள்.

ஆண்டர்சனுடைய பள்ளிக்கூடத்திற்குச் சமீபத்தில் ஒரு சிறிய நாடகசாலை இருந்தது. அந்த நாடகசாலைக்கு ஆண்டர்சன் தமக்கு அதிக மனத்தளர்வு ஏற்பட்ட போது சென்று அங்கு நடக்கும் விநோதங்களைக்கண்டு மகிழ்ந்து மனோவூக்கம் பெற்று வீட்டிற்குத் திரும்புவார்.

பெரும்பாலும் சனிக்கிழமைகளில், பிற்பகலில், ஆண்டர்சன் ஸிலாகில்சுக்கு மேற்புறமிருக்கும் மலைகளின்மீது ஏறியும், அழிந்துபோன பண்டைக்காலக் கட்டடங்கள் பலவற்றைப் பார்த்தும் இன்பமாகக் காலங்கழிப்பார். அவர் அடிக்கடி செல்லும் ஒரு குன்றின்மீது 'டேனிஷ்' ஞானி ஒருவரின் ஞாபகச் சின்னம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டர்சனுக்குத் தாம் தினந்தோறும் அங்குச் சென்று சிறிது நேரம் தங்கிவருவது இன்பமாகத் தோன்றியது. அவர் சில உயர்ந்த குடும்பத்தினரின் சினேகத்தைச் சம்பாதித்துக் கொண்டதோடு, கல்வியில் தமது

தலைமை ஆசிரியரும் வியக்கும்படி முன்னேற்றமடையலானார். தலைமை ஆசிரியர் ஆண்டர்சனுடைய திறமையைக்கண்டு அந்தரங்கத்தில் புகழ்ந்தாராயினும் வெளியில் ஆண்டர்சனை மந்தமுடையவர் என்றே கூறிவந்தார். ஒருமுறை அவர் ஆண்டர்சனைப் பார்த்து, 'நீ முட்டாளுக்குத் துணைபோகக் கூடியவன்' என்று சொன்னார். ஆனால், அன்றே, அவர் ஜோனஸ்காலினுக்கு எழுதிய கடிதமொன்றில், 'முன்னேற்ற மடைவோர் முயற்சி, ஜாக்கிரதை, ஒழுக்கம் முதலிய மூன்று விஷயங்களில் சிறந்து விளங்குவார்கள். இவைகளில் ஒன்றேனும் அநேகரிடத்தில் இருப்பது இல்லை. சிலரிடத்தில் மேற்கூறியவைகளில் யாதாவது ஒவ்வொன்றே காணப்படும். ஆனால் இவைகள் மூன்றும் ஆண்டர்சனிடம் பொருந்தி விளங்குகின்றன' என்று எழுதியுள்ளார்.

ஆண்டர்சன் விரைவில் தலைமை ஆசிரியரின் வகுப்பில் சேர்ந்து படிக்கக்கூடிய நிலைக்கு உயர்ந்துவிட்டார். அப்போது தலைமை ஆசிரியர் 'எல்சினர்' என்னும் ஊருக்கு மாற்றப்பட்டார். ஆண்டர்சனும் அவரோடு அவர் சென்ற கல்விச் சாலைக்குச் சென்று கற்று நிபுணரானார். ஆனால் அப்போதும் தலைமை ஆசிரியர் அவரை அவர் எதிரில் புகழ்வதில்லை. ஆண்டர்சனுடைய மனத்திலிருந்து வகைப்பட்ட கல்வியோடு கூடிய அரிய பெரிய விஷயங்கள் பொங்கி வழியலாயின. அவர் கல்வியாகிய சமுத்திரத்தை வகையோடு நீந்திச் சென்றார்.

பின்னர்ப் பெருங் குணம்படைத்த ஜோனஸ்காலின் என்பார் ஆண்டர்சனை வரவழைத்து, அவர்



போதுமான திறமை பெற்றிருப்பதை நன்கு அறிந்து அவரைப்பார்த்து, 'இனி, நீ கலாசாலையில் சேர்ந்து கற்கவேண்டிய அவசியம் இல்லை' என்றுகூறி அவரைக் கோபன்ஹகனில் நிறுத்திக்கொண்டார். எதிர்காலத்தில் பிரபல ஆசிரியர் என்று எல்லோரும் புகழும் வண்ணம் தம்வாழ்க்கையை நடத்தப் போகிறவராகிய ஆண்டர்சன், ஜோனஸ்காலினைத் தமது தந்தையாகக் கருதி, கோபன்ஹகனில் ஆனந்தத்தோடு தங்கியிருந்தார். அப்போது அவருக்கு இருத்திரண்டு வயதே ஆயிற்று.

## முன்னேற்றமும் பிறதேசப் பிரயாணமும்

இதுவரையில் ஆண்டர்சனுடைய வாழ்க்கையில் நடைபெற்ற விஷயங்கள் யாவற்றையும் வாசித்தறிந்த வாசகர்கள், தாங்கள் அறிந்த விஷயங்கள் அனைத்தையும் தங்கள் மனத்தில் ஒருமுறை ஒன்றாகச் சேர்த்து அவற்றைக் கவனிப்பார்களானால், அவர்கள், 'ஆண்டர்சனுடைய வாழ்க்கை அவர் எழுதிய மாயாவிநோதக் கதைகளைப் போன்றதே' என்று நாம் ஆரம்பத்தில் கூறியதையே ஆமோதிப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆண்டர்சன் தங்கியிருந்த அறை, வீட்டின் மேல் மாடியில் இருந்தது. அந்த அறைபக்கத்து வீடுகளினால் மறைக்கப்படவில்லை. ஆகவே, சந்திரன் உதயமாகும்போதெல்லாம் அஃது அவருடைய அறைக்குள் நன்றாய்ப் பிரகாசிக்கும். இயற்கைத் தோற்றங்களில் ஆண்டர்சனுக்கு விருப்பமாதலால் சந்திரன் உதயமாகும்போது அவர் அதைக் கவனித்து இன்பமடைவார்.

அரசாங்கத்தார் கொடுத்துவரும் தொகை ஆண்டர்சனுடைய செலவுக்குப் போதுமானதாயில்லை. அநேக உயர்மக்கள் தாங்கள் அவ்வப்போது நடத்தும் விருந்திற்கு, சிநேகபாத்திரரான, ஆண்டர்சனை அழையாமல் இருப்பதில்லை. ஜோனஸ் காலினுடைய வீட்டிற்கு அவர் எந்த நேரத்திலும் சிறு அச்சமுமின்றிப் போய் உண்டு, உரையாடி உல்லாசமாகக் காலங்கழிப்பார். ஜோனஸ் காலினுடைய குமாரராகிய 'எட்வர்டு காலின்' என்பார் ஆண்டர்சனுடைய அன்புமிகுந்த நண்பரானார். ஆண்டர்சன் தாம் செல்லுமிடங்களிலெல்லாம் இன்பம் பெருகப் பேசுவதில் வல்லவரென்று புகழப்பட்டார். மற்றவர்கள் அறியாத புதுமைகளை ஒவ்வொரு விஷயத்திலும் ஆண்டர்சன் அறிந்து வந்தார். அவர் எதையும் நுட்பமாகக் கவனிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவரிடம் குடிகொண்டிருந்த அத்தகைய ஆற்றலும் அவர் பிற்காலத்தில் பெருமகனாய் விளங்கியதற்கு ஒரு காரணமாயிருந்ததென்பது உண்மை. அவர் கூர்மையாக எவ்விஷயத்தையும் சிந்திக்கக் கூடியவர் என்பது அவர் எழுதிய நூல்களில் இரண்டொன்றை வாசித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இச் சந்தர்ப்பத்தில் ஆண்டர்சன் கதை எழுத முன்வரவில்லை. அவர் பிரத்தியேகமாகப் படித்துச் சில பரீட்சைகளில் தேறவேண்டுமென்று எண்ணி, இடைவிடாமல், இரவும் பகலும் படித்துக்கொண்டேயிருந்தார். 'லாட்டின்' பாஷையை ஆண்டர்சன் நன்கு கற்கலானார். அவ்வகையில், அதை நன்றாய்க் கற்றவரான, எட்வர்டு காலின் என்பவரின் உதவி



[illegible] அதிகமாய் இருந்தது. பின்னும் இரண்டு வருடங்களில் ஆண்டர்சன் கல்வி சம்பந்தமான அரசாங்கப் பரீட்சைகள் எல்லாவற்றிலும் தேறிவிட்டார். ஆண்டர்சன் திறமை உள்ளவர் என்பதை அறிந்து அவருக்கு அவசியமான பல நன்மைகளைச் செய்து வந்த ஜோனஸ்காலின் என்பார் கடைசியாக ஆண்டர்சன் கல்வியில் வீரராக விளங்குவதைக் கண்டு, தாம் கருதியபடியே காரியம் நடைபெற்றதால், அளவற்ற ஆனந்தம் அடைந்தார். உண்மையில் அவர் அடைந்த ஆனந்தம் தந்தை தன் தனயனுடைய புகழைக் கண்டு அடையும் ஆனந்தத்தைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமானதாகும். ஜோனஸ்காலினைப் போல் பெருங்குணம் படைத்தவர்கள், நமது நாட்டில், செல்வ நிலையிலும் அதிகார நிலையிலும் உயர்ந்திருக்கும் நம்மனோரில் ஒரு சிலராவது தோன்றுவார்களானால் நமது நாடு வெகு விரைவில் உறுதியாக அறிவு நிறைந்த பல நூறு மக்களைக் காணக்கூடும் என்று கூறலாம்.

பரீட்சைகள் முடிந்தன. கற்கவேண்டுமென்னும் கவலை ஆண்டர்சனை விட்டொழிந்தது. ஆயினும் ஆண்டர்சனுடைய அறிவு அமைதியுற்றிருக்கவில்லை. ஆகவே தமது அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டியது ஆண்டர்சனுக்கு அவசியமான காரியமாயிற்று. அதனால் உடனே ஆண்டர்சன், தமக்கு இயற்கையில் ஆவல் உள்ள, நூல் எழுதும் வேலையை ஆரம்பித்துக் கொண்டார். சின்னாட்களில் அவர் ஒரு நூலை எழுதி முடித்தார். அதை ஒரு பிரசுர கர்த்தரும் பிரசுரம் செய்ய முன்வரவில்லை. அதனால் எட்வர்டு காலின் என்பார் அந்தப் புத்தகத்தைத் தமது சொந்தச் செலவில்

அச்சிட்டு வெளிப்படுத்தினார். அந்தப்புத்தகம் மிகவும் வேடிக்கை நிரம்பியது. ஆனால் பிழைகள் மலிந்து கிடந்தன. தங்களுக்குக் கிடைத்த அந்தப் புத்தகங்களில் சிலவற்றைக் கிழித்து, அவற்றை வியாபாரிகள், தாங்கள் விற்கும் பொருள்களுக்கு மேற்போர்வையாக உபயோகப்படுத்தினர். ஆயினும் ஆண்டர்சன் எழுதிய அந்தப் புத்தகத்தில், ஆழ்ந்து நோக்குவோருக்கு ஆச்சரியத்தை அளிக்க வல்ல, அநேகம் அரும் பெரும் பொருள்கள் சுரங்கத்தில் மறைந்து கிடக்கும் வைரக்கற்களைப் போல் இருந்தன. இந்த உண்மையை பிற்காலத்தவர் உணராமலில்லை.

ஆண்டர்சன் எழுதிய முதற் புத்தகத்தைப் படித்த, கல்வியறிவு நிறையப் பெற்ற, ஒரு சீமாட்டி, 'நீர் எழுதிய சிறு நூலை நான் முற்றும் நன்றாகப் படித்துப் பார்த்தேன். அதில் வரையப்பட்டிருக்கும் சில விஷயங்களைப் படிக்கும்போது என்னுடைய இளம் பருவத்தில் நான் அனுபவித்த சில விஷயங்கள் என் மனத்தில் தோன்றி எனக்கு இன்பத்தை யளித்தன. ஆகையால் என்னைப்போலவே உமது புத்தகத்தைப் பல்லோர் படிப்பரென்பது உறுதி. அவர்கள் மனத்திலும், அவர்களுடைய இளம்பருவ இன்ப வாழ்க்கையில் அவர்கள் அனுபவித்த பலவித இன்பங்களை உமது புத்தகத்தில் உள்ள பல விஷயங்கள் மீண்டும் எழச் செய்யும் என்பது திண்ணம். ஆகவே மக்கள் பலர் உமது நூலைப் புகழ்வரென்பது உறுதியாகின்றது. பொதுவாக உமது நூலைப்படிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய இளம்பருவ இன்பவாழ்க்கையே அவரவர்களுடைய மனத்தில்



எழும் என்று உறுதியாகக் கூறுவேன். அதற்குக் காரணமாக உமது நூலில் மற்றவர்களின் நூலில் காணப்படாத ஏதோ ஒருவகைத்தனி விஷயம் பொருந்தி இருக்கிறது. அவ்விஷயம் இன்னதென்று நீர் அறிந்து, அதையே நீர் உமது நூலின் பிரதான விஷயமாகக்கொண்டு, அதை யாருக்கு உபயோகப் படுத்தினால் பெருநன்மை உண்டாகக்கூடும் என்பதை உணர்ந்து, பிறகு நீர் புத்தகம் எழுதத் தொடங்குவீரானால் உமக்குப் பெருங்கீர்த்தி உண்டாவதோடும், உலகத்திற்கும் பெருநன்மை உண்டாகக் கூடும்' என்று ஆண்டர்சனுக்கு எழுதியிருந்தாள்.

இவ்வாறு அந்த ஸ்திரீ எழுதியதிலிருந்து, இளம் பருவ வாழ்க்கையைப்பற்றி வரைவதில் ஆண்டர்சன் கைதேர்ந்தவராவரென்றும், ஆகையால் அவர் சிறுவர்களுக்கு ஏற்ற நூல்களை எழுதுவாரானால் சிறப்புற்று விளங்குவாரென்றும் அவள் உறுதியாக நம்பினாள் என்று விளங்குகிறதல்லவா?

இந்த உண்மையை அறிகிற வரையில் ஆண்டர்சன் தம் மனம் போனவாறு வெவ்வேறு விஷயங்களை எழுதிக்கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் வாலிப நூலாசிரியராகிய ஆண்டர்சன் தமது வயதிற்கேற்ற பெண்மணி ஒருத்தியைக் காதலித்தார். 'மிக அழகுள்ளவள்; பெருந்தன்மை வாய்ந்தவள்; நல்லவள்' என்று அந்தப் பெண்ணைக் குறித்து ஆண்டர்சன் கூறியுள்ளார். 'அத்தகைய பெண்மணியை நான் என்றுங் கண்டதில்லை' என்றும் ஆண்டர்சன் சொல்லியுள்ளார். உண்மையில் அந்தப்

பெண்மணி சிறந்தவளாயிராவிடில் அவளை ஆண்டர்சன் விரும்பியிருக்கமாட்டார் என்பது உறுதி. ஆனால் ஆண்டர்சன் அப்பெண்மணியைச் சந்திப்பதற்கு முன்னரே, அவளை வேறொருவன் மணம் செய்துகொள்ள விரும்பி அதற்காக அவன் அவளுடைய தகப்பனாரின் உறுதியான சம்மதத்தையும் பெற்றிருந்தான்.

ஆண்டர்சன் காதலித்த பெண்மணியின் தந்தை மிகவும் செல்வமுள்ளவன். அவன் கல்வியினும் அறிவினும் செல்வத்தையே சிறப்பாகக் கருதும் மூடர்களாகிய சில தனவந்தர்களின் கூட்டத்தைச் சார்ந்தவன். ஆகையால் அவன் அதுவரையில் தன் மகளுக்கு மணவுறுதி ஏற்படாமல் இருந்திருப்பினுங்கூட அவன் தன் மகளை ஏழையாகிய, இன்னும் தன்னையே காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்ற, ஆண்டர்சனுக்கு மணம் செய்து கொடுக்க கொஞ்சமும் சம்மதப்பட மாட்டான் என்பது திண்ணம். இவைகள் யாவும் ஆண்டர்சனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவர் அந்தப் பெண்ணைத் தாம் விவாகம் செய்துகொள்ள முடியாதென்பதை உணர்ந்தார். ஆனாலும் அவள்மீது சென்ற தமது மனத்தைத் திருப்பிக்கொள்ள ஆண்டர்சனால் முடியவில்லை. ஆகவே அவளை நினைத்து வருந்தி ஆண்டர்சன் பல பாட்டுக்களை வரைந்தார். அதை அறிந்த அவர் சிநேகிதர் ஒருவர் அவர்மீது எரிச்சலுற்று அவரை நோக்கி, 'நீ இவ்வாறு, அவள் உனக்குக் கிடைக்காமையினால், உலகமே முழுகிவிட்டதாக ஆரவாரம் செய்வாயானால் எனக்குக் கோபம் வரும். உண்மையில் இப்போது நீ எவ்வித நன்மையையும் இழந்துவிடவில்லை. எல்லா நன்மைகளையும் இழந்த



வனைப்போல் ஏன் அழுகின்றாய்? உன் எதிர்கால வாழ்க்கை சிறக்கக்கூடும். அப்போது உன்னைத் தேடி நீ விரும்புகிறவைகள் யாவும் வலிய ஓடிவரும்' என்று சொன்னார்.

இந்நிகழ்ச்சி நடைபெற்ற இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஆண்டர்சனுடைய நண்பரொருவர் ஆண்டர்சனை நோக்கி, 'உமக்குக் கலியாணத்தில் விருப்பமில்லையா? நீர் ஏன் விவாகம் செய்துகொள்ளக் கூடாது?' என்று கேட்டார்.

அதற்கு ஆண்டர்சன், 'நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று கடவுள் விரும்பவில்லை என்பதை நான் இரண்டு வருடங்களுக்கு முன்னரே உணர்ந்து கொண்டேன். ஆகையால், ஏழையாகிய நான் கலியாணத்தை விரும்பவில்லை' என்று சொன்னார்.

இதனோடு ஆண்டர்சனுடைய காதல் விஷயம் நிலையான முடிவைப் பெற்றுவிட்டது. பெருஞ்செல்வமும், புகழும் வாய்பெற்ற பின்னரும் ஆண்டர்சன் கலியாணத்தைப் பற்றிக் கருதவேயில்லை. அவர் எல்லோருக்கும் நண்பராகவும், உலக முழுவதிலுமுள்ள சிறுவர்களுக்கு நீதிநிறைந்த சிறந்த கதைகளைச் சொல்லுகிறவராகவும் இருப்பதிலேயே திருப்தியுற்றிருந்தார்.

ஆண்டர்சன் எழுதும் நூல்களைப்பற்றி அடிக்கடி பலவித அபிப்பிராயங்கள் வெளிவரத் தலைப்பட்டன. அதனால் அவர் பெயர் ஒருவாறு வெளிநாடுகளிலும் பரவலாயிற்று. ஓயாமல் உழைத்து வந்தமையினால் ஆண்டர்சனுக்குத் தேகசுகம் குறைந்தது. அவர்

கப்பற் பிரயாணம் செய்தால் அவருக்குத் தேகசுகம் உண்டாவதோடும், போதுமான உலகானுபவமும் உண்டாகக்கூடும் என்று அவருடைய பாதுகாப்பாளரான ஜோனாஸ்காலின் என்பவர் கருதினார். உடனே அவர் ஆண்டர்சனுடைய பிரயாணத்திற்கு வேண்டிய பொருளைச் சேர்த்து அவரை ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்றும் வருடம் கப்பலேற்றி, ஜர்மனி முதலிய பல விடங்களைப் பார்த்து வருமாறு அனுப்பினார்.

அதுவரையில் தாம்பிறந்த தேசத்தையும் நன்றாய்ப் பார்த்தறியாத ஆண்டர்சன், தாம் அயல்நாடுகளில் கண்டகாட்சிகளினால் அடைந்த இன்பத்துக்கோர் அளவேயில்லை. அவர், 'ட்ரஸ்டன்' 'பெர்லின்' முதலிய இடங்களுக்குச் சென்றார். அவரை அந்த நகரங்களில் இருந்த அறிவாளிகள் அன்புடன் வரவேற்றனர். ஆண்டர்சன் பல விடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்தப்பட்டார். அவருக்கு எப்போதும் பறவைகளைப் பார்த்து மகிழ்வதில் ஆனந்தம் அதிகம். அவற்றில் கொக்கைப் பார்த்துக்கொண்டிருப்பதில் அவருக்கு எப்போதும் பிரியம் உண்டு. வெளிநாட்டுப் பிரயாணத்தினால் அவருக்கு இருந்த எழுதும் வன்மை விருத்தியடைந்ததென்று உறுதியாகச் சொல்லலாம். அவர் சென்ற விடங்களி லெல்லாம் மற்றவர்கள் காணாத புதுமையைக் கண்டார். இந்தச் சக்தி அவருக்கு எப்போதும் உண்டென்பதை நாம் அறிவோமன்றோ?

நடிப்பதற்கேற்ற நாடகங்களை யெழுதிப் பிரபலமடைய வேண்டுமென்னும் விருப்பம் ஆண்டர்சனுக்கு அதிகரித்திருந்தது. அதனால் அவர் பல நாடகங்களை



எழுதினார். ஆனால் அவைகளில் ஒன்றும் அவர் எண்ணிய காரியத்திற்கு ஏற்றதாயில்லை. ஆகையால் அவைகளில் ஒன்றையும் எந்த நாடகக்காரர்களும் நடிப்பதற்கு இஷ்டப்படவில்லை. அவைகளைப் படித்த ஆண்டர்சனுடைய நண்பர்களும் 'அவைகள் நடிப்பதற் கேற்றவைகளன்று' என்று கூறிவிட்டனர். அவ்வகையில் எழுதுவதற்கேற்ற ஆற்றல் அவரிடம் பொருந்தியிருக்கவில்லையென்று திண்ணமாகத் தெரிந்தது. ஆண்டர்சன் இளமை முதற்கொண்டே தம்மை எவரேனும் குறைவாகக் கூறக்கேட்டால் அதைப் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டார். இத்தகைய குணமுடைய ஆண்டர்சனுக்கு இப்போது தம்முடைய நூல்களைப் பற்றி எவரேனும் எள்ளத்தனை குறைசொல்லக் கேட்டாலும் பொறுக்க முடிவதில்லை. யாரேனும், தம்மைப் பற்றியோ அல்லது தமது நூல்களைப்பற்றியோ குறைவாகப் பேசக்கேட்டால் அன்று முழுவதும் ஆண்டர்சன் அதைப்பற்றியே சிந்தித்து வருந்துவார். அவருக்கிருந்த இக் குணம் ஒருவகையில் அவருக்குத் தீமையை அளித்ததென்றே சொல்லலாம். டேனிஷ் தேசத்தார் எப்போதும் குற்றம்சொல்வதில்கைதேர்ந்தவர்கள். அவர்கள் ஆண்டர்சன் எழுதிய நூல்களிலும் குற்றங் கூறப் புகுந்துவிட்டனர். அவர்களில் அநேகர், 'ஒரு சக்கிலியின் மகன் இவ்வளவுதூரம் உயர்ந்துவிட்டானே' என்னும் பொறாமைகாரணமாகவே ஆண்டர்சன் எழுதிய நூல்களில் குற்றங் காணப் புகுந்தனர். நமது இந்திய நாட்டிலும், முக்கியமாகத் தென்னிந்தியாவில், இவ்வாறு குற்றங்கூறும் குணமாளிகளின்தொகை குறைவில்லாமலிருப்பதை இன்றுங்

காணலாம். தம்முடைய தேசத்தார்களாகிய டேனிஷ்காரர்களே தம் நூல்களைக் குறைகூற முன் வந்ததையெண்ணி ஆண்டர்சன் மனம் வருந்தினார். டேனிஷ் ஜனங்கள் முதலில் ஆண்டர்சனுடைய நூல்களைக் கண்டு வியப்பதற்குப் பதிலாக வெறுக்கத் தலைப்பட்டனர். ஆ பொறாமையே! அதனால் ஆண்டர்சன் சிறிதுகாலமாவது இடைவிடாது தேசப்பிரயாணம் செய்துகொண்டிருக்க விரும்பினார். அவ் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு வேண்டிய அளவு ஆண்டர்சனிடம் பொருள் இல்லை; பொருள் கொடுப்பாருமில்லை. ஜோனாஸ்காலின் குடும்பத்தார் இவ்வகையில் டென்மார்க்குத் தேசத்தின் அரசரிடம் பெருமுயற்சி செய்து ஆண்டர்சனுக்கு உதவி செய்யுமாறு அவ்வரசரை வேண்டினர். கடைசியாக அவ்வரசர், ஆண்டர்சனுக்கு, இரண்டு வருடங்களுக்காகும் செலவைக் கொடுக்க ஒப்புக்கொண்டார். இந்தச் சமயத்தில்தான் முதன்முதல் அரசர் ஆண்டர்சனைப் பார்க்க விரும்பினார். ஆண்டர்சன் தாம் எழுதிய புத்தகங்களில் இரண்டைக் கொண்டுபோய் அரசரிடம் பணிவோடும் கொடுத்து அரசரை வணங்கினார்.

சந்தியின் பிள்ளையாகிய ஆண்டர்சன் பிற்காலத்தில் தம்மிடம் அன்புற்றொழுகவிருக்கும் அரசரைக் கண்டு அவரோடு பேசி ஆனந்தப்படும் அந்தஸ்தை அடைந்தார்.

தேசப் பிரயாணத்திற்கு அரசரின் அனுமதி பெற்றுக்கொண்டு ஆண்டர்சன் முதன்முதல் 'பாரிஸ்' நகரத்திற்குச் சென்றார். பாரிஸ் நகரத்தின் ஆடம்பரக் காட்சி அவருக்குச் சந்தோஷத்தைத் தரவில்லை.



அதனால் அவருக்குப் பாரிஸ் நகரத்தில் உண்பதும் உறங்குவதுமே பிரதானமாய் இருந்தன. உறங்கும்போது கூட அவர் அக்கம்பக்கங்களில் திடீர் திடீரென்று உண்டாகும் பலவித ஆரவாரங்களைக் கேட்டு விழித்துக் கொள்ளுவார். அவருடைய தந்தையின் மூலமாக அவருக்கு மகாவீரனாகிய நெப்போலியனிடம் மிக்க பிரியமேற்பட்டிருந்தது. அவர் 'பாரிஸ்' நகரத்தில் இருந்தபோது நெப்போலியனுடைய உருவச்சிலை திறக்கும் வைபவம் ஒன்று நடைபெற்றது. அவ்வைபவத்தை ஆண்டர்சன் சில மணிநேரம் வரையில், சுடுகின்ற வெய்யிலையும் பொருட்படுத்தாமல், கண்டு களித்தார். அன்றுமாலையில் பிரசித்திபெற்ற 'ஹோட்டல்' ஒன்றில் நடைபெற்ற விநோதத்திற்கு வருமாறு அவருக்கு அழைப்புக் கடிதம் வந்தது. அங்குச் சென்று, அங்கு நடைபெற்ற பல அற்புதமான விஷயங்களைக் கண்டு, ஆண்டர்சன் ஆனந்தப்பட்டார். அன்று அங்குத் தாம் கண்ட காட்சியைக் குறித்து ஆண்டர்சன் பிறகு ஜோனாஸ்காலினிடம் மிகவும் பெருமையாகப் புகழ்ந்து கூறியிருக்கின்றார்.

தம் தேசத்தார் தம்மையும், தமது நூல்களையும் குறைவாகப் பேசியபோதிலும் ஆண்டர்சனுக்குத் தமது தேசத்தினிடம் ஏற்பட்டிருந்த ஆசைக்கோர் அளவே கிடையாது. 'தேசாபிமானம் இல்லாதவன், பாஷாபிமானமில்லாதவன், சுற்றந் தழுவாதவன் மக்களிற் பதராவான்' என்பது ஆண்டர்சனுடைய உபதேசம். ஆண்டர்சன் வெளிநாட்டில் இருக்கையில் தமது தேசத்துப் புராதனக் கதை ஒன்றைத் தழுவி, நாடகபாட்டின் இலட்சணங்கள் அமையப்பெற்ற

தாகிய, பாட்டொன்றை எழுதிமுடித்தார். அதை அவர் அங்கிருந்தபடியே தமது நாட்டுமக்களுக் கிடையில் பரவச் செய்தார். அவர் தேசத்தார் அவர் எழுதிய அந்தப் பாட்டினை அவ்வளவாகப் புகழவேயில்லை

ஆன்ஸ் ஆண்டர்சன், சிறிதுகாலம், 'ஜூரா' மலைப் பிரதேசத்தைச் (Jura Mountains) சார்ந்த ஒரு கிராமத்தில், கௌரவம் வாய்ந்த ஒரு குடும்பத்தாரிடையில், பலரும் புகழ, தங்கி வசிக்கலானார். அக்குடும்பத்தினர் அவருடைய கல்வியறிவைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு, அவரிடம் அளவு கடந்த மரியாதையோடு நடந்து கொண்டனர். அவர்கள் காட்டிய பெருந்தன்மையைக் குறித்து ஆண்டர்சன் பலபடப் புகழ்ந்திருக்கின்றார்.

பிறகு ஆண்டர்சன் இத்தலி (Italy) க்குப்போகப் பிரயாணமானார். அப்போது அவர், 'பதினான்கு வருடங்களுக்கு முன்னால், என்னுடைய ஊரில் இருந்து நான் கோபன்ஆகனுக்குப்போனபோது, என் நிலைமை இவ்வாறாகக்கூடும் என்று நான் நினைக்கவில்லை' எனத் தம்முள் எண்ணினார்.

ஆண்டர்சன் இத்தலியை அடைந்தார்; அங்குப் பலவகை நிறங்களோடுங் கூடிய அநேகம் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தார். இத்தலியில் தோன்றும் அந்தக் காட்சிகள் யாவும் ஆண்டர்சனுக்குக் கனவில் தோன்றும் காட்சிகளைப்போல் இருந்தன. அந்நாட்டில் உள்ள கண்ணைக் கவரத்தகுந்த பலவகையான பழமரங்கள் ஆண்டர்சனின் மனத்தில் இன்பத்தைப் பெருக்கின. அவர் அங்கு அநேக சிற்ப வேலைகளையும், வர்ண வேலைகளையும், சரித்திர சம்பந்தமான



பல கட்டடங்களையும், இன்பத்தை யளிக்கவல்ல ஏரிகளையும், தூரத்தில் தெரியும் நீலநிற மலைகளையும் கண்டு களித்தார். பூமியின் மூடப்பட்ட சிறகைப்போல் உயர்ந்து நிற்கும் 'ஆல்ப்ஸ்' மலையைக் கண்டு ஆண்டர்சன் ஆனந்த மெய்தினார்.

இத்தலியை ஆண்டர்சன் தெய்வலோகமாகக் கருதினார். அதே சமயத்தில் அவர் அதை நரகலோகமாகவும் நினைத்தார். பிரத்தியேகப்பட்ட இடங்கள் தோறும் சொல்லமுடியாத ஏமாற்றங்கள் நடைபெறுவதையும், சிறுசிறு பூச்சிகளினால் உபத்திரவம் உண்டாவதையும், அடிக்கடி பிரயாணச் சீட்டைப் (Pass ports) பரிசோதிப்பவர்கள் தொந்தரவு செய்வதையும், வழிகாட்டிகள் (Guides) முட்டாள்தனமாக நடந்து கொள்ளுவதையும் கண்டு ஆண்டர்சன் இத்தலியைக் குறைவாகக் கருதினார். 'வழிகாட்டிகள் பெரும்பாலும் முட்டாள்தனமாகப் பேசுவதில் தேர்ந்தவர்கள்' என்று ஆண்டர்சன் கூறுகின்றார். "அங்கொரு துருக்கி தேசத்து வியாபாரி இருக்கின்றார். அவருடைய கடை இன்று மூடப்பட்டிருக்கின்றது. அங்கே அழகிய படங்களோடு கூடிய கோயில் ஒன்று இருக்கின்றது. ஆனால் அந்தக் கோயிலில் இருந்தபடங்களை யெல்லாம் யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்போது இப்படிப் போனவர் எங்களுடைய தேசத்துப் பணக்கார வியாபாரிகளில் ஒருவர்." என்று இவ்வாறே இன்னும் பல சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமற்ற விஷயங்களை வழிகாட்டிகள் பேசுவார்கள்' என்று ஆண்டர்சன் கூறுகின்றார்.

பின்னர், ஆண்டர்சன் உரோமாபுரிக்குப்

போனார். அங்கே அவர் சிறந்த உருவச் சிலைகளைச் செய்வதில் கைதேர்ந்தவராகிய 'தார்வால்ட்சன்' (Thorwaldsen) என்பவரைச் சந்தித்தார். தார்வால்ட்சன் தமது தேசத்தாராகிய ஆண்டர்சன் மீது அதிக அன்புகொண்டு அவரைச் சிலதினம் வரையில் தமது வீட்டில் இருத்தி உபசரித்தார். அன்றுமுதல் தார்வால்ட்சன் தாம் இறக்கிறவரையில் ஆண்டர்சனின் சிறந்தநண்பராய் இருந்தார். ஆண்டர்சன் உரோமாபுரியில் இருக்கும்போது ஒருநாள் திடீரென்று தமது தாயார் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டு மனங் கலங்கினார். வெகுகாலமாக அவர் தமது அன்னையாரை விட்டுப் பிரிந்திருந்த போதிலும், அவர் தம் அன்னையினிடம் கொண்டிருந்த அன்பு அதிகமென்றே சொல்ல வேண்டும். ஆண்டர்சனுடைய நன்மையைப் பற்றி நினைக்கக்கூடிய ஆண்டர்சனின் தாயார் இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தார். உண்மையில் இனி இவ்வுலகத்தில் ஆண்டர்சனுக்கு நெருங்கிய உறவினர் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம். அவருக்குவேறு சகோதர சகோதரிகளு மில்லை. அவர் பாட்டியார், தகப்பனார், தாயார் முதலிய எல்லோருமே இறந்து போயினர். 'எனக்கு இவ்வுலகத்தில் உறவினர் ஒருவருமேயில்லை' என்று தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்ளத் தகுந்த நிலைக்கு ஆண்டர்சன் வந்து விட்டார். 'அவருக்கு மனைவி மக்கள் முதலியோர் இல்லை' என்று மீண்டுமொருமுறை நாம் கூறுவது அனாவசியமாகும். ஆயினும் பிற்காலத்தில் அவர், தம்மைப் பார்த்தறியாத மக்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் தம்மைப் புகழும்படியான பாக்கியத்தைப் பெற்றார்.



ஆண்டர்சன் உரோமாபுரியின் இனிய காட்சிகளைக்கண்டு களித்த பின்னர், 'நேப்பிள்ஸ்' நகரத்திற்குச் சென்று அந்நகரத்தின் அதியற்புதக் காட்சிகளைப் பார்த்துக் களிப்புற்றார். நேப்பிள்ஸ் நகரத்தினிடம் அவர் கொண்ட விருப்பம் அளவு கடந்து நின்றது. 'நான் இறந்து போனால் என் ஆவி நேப்பிள்ஸ் நகரத்தைத் தேடி அலையும்' என்று ஆண்டர்சன் கூறியிருக்கின்றார். ஆண்டர்சனுடைய பிரயாணகாலத்தில், 'வெசுவியஸ்' என்னுமிடம் எரிமலையால் நாசமாக்கப்பட்டிருந்தது. எரிந்து அடங்கி இருந்த எரிமலையின் மீது ஆண்டர்சன் நிலவு வெளிச்சத்தில் ஏறிச் சென்றார். அவரோடு சென்றவர்கள் அவ்வாறு செல்வதற்கு அஞ்சினார்கள். ஆனால் ஆண்டர்சன் அந்த எரிமலையின் சிகரத்திற்கு, முழங்கால் வரையில் உயர்ந்து நின்ற சாம்பலைக் கடந்து, ஏறிச்சென்றார். அப்போது, நிலவு நன்றாய்க் காய்ந்து கொண்டிருந்த போதிலும், அடிக்கடி நிலவை மேகம் மறைத்ததனால், ஒருவாறு எங்கும் இருளாகவே யிருந்தது. ஆண்டர்சன் முதலியவர்கள் மலையின் உச்சியில் இருந்த பிளவுகளின் வழியே அதன் கீழ்ப்பாகத்தில் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் நெருப்பைக் கண்டனர். ஆனால் இத்தகைய ஆபத்தான வேடிக்கையைப் பார்க்க எல்லோரும் துணிவார்களா? இவ்வாறே ஆண்டர்சன் தமக்குப் புதிதாகத் தோன்றும் எந்த விஷயத்தையும், அதில் உள்ள ஆபத்தைக் கவனியாமலே, ஆராயத் துணிந்து விடுவது வழக்கம். உரோமாபுரியில் இருக்கும்போது அவர் அநேகம் பெரிய பள்ளத்தாக்குகளில் இறங்கி அப்பள்ளத்தாக்குகளை ஆராய்ச்சி செய்திருக்கின்றார்.

ஒரு சமயம் அவர் இத்தலியில் தனித்துப் போய்க்கொண்டிருக்கையில் கள்வர் சிலர் அவரை எதிர்க்கலாயினர். அப்போது அவர் அக்கள்வர்களிடமிருந்து சாமர்த்தியமாய்த் தப்பினார். மனம் திடுக்கிடும்படியான விஷயங்களை அனுபவிப்பதிலும், புதிய காட்சிகளைக் காண்பதிலும் அவர் ஆவலுடையவராய் இருந்தார். பிறகு அவர், 'வெனிஸ்' நகரத்திற்குச் சென்றார். அந்த நகரம் அவருக்கு அவ்வளவாக இன்பத்தைத் தரத்தக்கதாயில்லை. 'பரந்த வெளியில் வெனிஸ் நகரம் இறந்த அன்னம் தண்ணீரில் மிதப்பதுபோல் தோன்றியது' என்று அவர் கூறுகின்றார்.

ஆண்டர்சன் தமது பிரயாணத்தை நீடித்து நடத்திக் கொண்டிருந்தமையினால் அவரிடம் இருந்த பொருள் குறைந்துபோயிற்று. அதனால் அவர், விடுமுறை நாட்கள் முடிவுக்கு வரக்கண்ட சிறுவனைப் போல் மனம் வருந்தினார். கடைசியாக அவர் தாம் எங்குஞ் செல்லாமல், கோபன்ஹகன் போய்ச் சேர்ந்தார். ஜோனஸ்காவின் ஆனந்தக்கண்ணீர் வடிய ஆண்டர்சனை அன்புடன் வரவேற்றார். அதுவரையில் ஆண்டர்சன் செல்வ நிலையில் உயரவேயில்லை, ஆனால் அவர் செலவு மட்டும் நிற்கவில்லை. அதற்குக் கையில் போதுமான பொருள் இல்லை. தாம் கடன்காரராவதற்கும் அவர் இஷ்டப்படவில்லை. இவைகளைப்பற்றிய பல விஷயங்கள் அவர் மனத்தில் தோன்றி அவரைத் துன்புறுத்தத்தொடங்கின. ஆனால், பிறதேசப் பிரயாணங்காரணமாக அவரிடம் குடிகொண்டிருந்த அனுபவம் அவருக்குப் பெரும் பொருளையும், புகழையும் கொண்டுவரத் தயாராய் இருந்தது.



ஆண்டர்சன் உரோமாபுரியில் இருக்கையில் ஒரு
புத்தகம் ஒழுத வாரம்பித்தார். அதைக்கோபன்ஹக
னுக்கு வந்ததும் முற்றிலும் எழுதி முடித்தார். அந்தக்
கதை ஒரு நாட்டுப்புறத்துப் பையனுடைய வாழ்க்கை
யைப்பற்றியதாகும். அது பெரும்பாலும் ஆண்டர்ச
னுடைய வாழ்க்கையைக் குறிக்கிறதென்றே கூற
லாம். 'அந்தோனியோ' என்னும் நாட்டுப் புறத்துச்
சிறுவன் ஒருவன் பிழைப்பதற்குப் பட்டண வாசத்
திற்குப் போகிறான். அங்கு அவன் தரித்திரத்தோடு
பல துன்பங்களை அனுபவிக்கின்றான். அதிர்ஷ்டவசத்
தினால் கல்விகற்று விருத்தியடைகின்றான். ஆனால்,
முதலில் அவனை ஆதரித்தவர்களில் பலர் அவன் பாட்
டியற்றுவதில் / வல்லவனென்பதை அறியாமற்
போயினர். பின்னர் அந்தச் சிறுவன் ஆடு
மாடுகளை மேய்க்கும் ஒருவனோடு தங்கியிருக்
கின்றான். அப்போது ஓர் எருமைக்கடா பெருங்
குடியிற் பிறந்த ஒருவரைக் கோபத்தோடு துரத்து
கின்றது. அவரை அந்தச் சிறுவன் அவ்வாபத்தி
லிருந்து காப்பாற்றுகிறான். பிறகு அவன் அவ
ரால் ஆதரிக்கப்படுகின்றான்.' இவ்வாறு இன்னும்
பல விஷயங்கள் ஆண்டர்சன் எழுதிய அந்தப் புத்த
கத்தில் காணப்படுகின்றன. அக்கதை, பெரும்பாலும்
ஆண்டர்சனுடைய வாழ்க்கையை ஒத்திருக்கிற
தென்று எவர்தாம் கூறமறுப்பர்? அக்கதை—கதை
என்னும் அளவில் பார்க்கும்போது, குறைவுள்ளதாகக்
காணப்பட்டாலும்—படிப்பதற்கு இன்பந்தருவதாய்
இருக்கிறது. அக்கதை முழுவதும் ஆண்டர்சனுடைய
இத்தலிதேசத்து அனுபவம் நிறைந்திருக்கக்காணலாம்.

எந்த விஷயம் எப்படியாயினும் சரியே. குற்றம் கூறுவதில் வல்லவர்களாகிய 'டேனிஷ்தேசத்தார்' அக்கதையைப் படித்துப் புகழ்ந்து பேசுவாராயினர். புத்தகம் வெளியான சிலதினங்களில் எல்லாப்புத்தகங்களும் விற்பனையாயிற்று. இரண்டாவது பதிப்பு எப்போது வெளிவருமென்று ஜனங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தப் புத்தகத்தின், முகப்பில், 'நான் இச் சிறு புத்தகத்தை, என் தாய் தந்தையர்களைப் பார்க்கிலும் என்னிடம் அதிக அன்பு கொண்டவர்களும், என் நன்மையில் கருத்துள்ளவர்களுமாகிய ஜோனஸ்காலின் என்பாரையும், அவர் தம் அருமை மனைவியாரையும் நினைவு கூர்தற்கு உரிமை யாக்குகின்றேன். அவர்களுடைய ஆண்மக்கள் என்னுடைய சகோதரர்களாகவும், பெண்மக்கள் சகோதரிகளாகவும் விளங்குகின்றனர். இத்தகைய பெரியார்களுக்கு இப்போது நான் செய்யக்கூடியது இவ்வளவே' என்று ஆண்டர்சன் எழுதியுள்ளார். இதுவரையில் ஆண்டர்சன் எழுதிய புத்தகங்களில் இதுவே சிறந்ததென்னலாம். இப்புத்தகம், விரைவில், எல்லோராலும் ஆவலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு வெளியான சில வருடங்களுக்குள், இரஷ்யன், ஜர்மன், இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. 'பாட்டுக்கள் இயற்றுவதில் ஆண்டர்சன் சமர்த்தர் அல்லர்' என்று கூறியவர்கள் எல்லோரும், 'அவர் கதையெழுதுவதில் வல்லவர்' என்று கூறியதோடு, 'தமக்குள்ள திறமை இன்னதென்பதையும் அவர் கண்டறிந்து கொண்டார்' என்றும் கூறி மகிழ்வாராயினர். ஆண்டர்சனும் கதையெழுதுவதில் தமக்குத் திறமை இருப்பதை உணர்ந்து ஆனந்தப்பட்டார்.



ஆண்டர்சன், சிறுவர்களுக்காகவே பின்னும் பல கதைகளை எழுதினார். அவைகள் யாவும் சிறுவர்களுடைய மனத்தைக் கவரக்கூடியவைகளாய் இருந்தனவென்பதில் ஐயமில்லை. அவர் சிறுவர்களின் மனோநிலையை அறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு எழுதுவதில் தேர்ந்தவர். அவ்வகையில் அவரை எதிர்த்து வெற்றிபெற்றவர்கள் எவரும் இல்லை என்கின்றனர். அவர் சிறுவர்களுக்காக எழுதிய கதைகளிற் சிலவற்றைப் படித்த கிழவி ஒருத்தி, 'உண்மையிலேயே ஆண்டர்சன் தம் மனோ நிலையைப்பற்றிய வரையில் குழந்தையாகவே யிருக்கவேண்டும். இன்றேல் அவர் சிறுவர்களுக்கு ஏற்றவாறு கதை சொல்வதில் சிறந்து விளங்கமாட்டார்' என்று சொன்னாள்.

பின்னும் சில மாதங்கள் சென்றன. ஆண்டர்சன் 'மாயா விநோதக் கதைகள்' (Fairy Stories) பல எழுதி வெளியிட்டார். அவைகளும், இதற்குமுன் ஆண்டர்சன் எழுதிய கதைகளைப் போலவே, பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றன. சிறிது காலமாகத் தாம் எழுதும் நூல்கள் யாவும் பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுதலைக் கண்ட ஆண்டர்சன் ஆனந்தப்பட்டார். அதனால், அவர் கர்வங் கொள்ளவில்லை. அவர் பொதுவாக எக்கதையையும் எழுதுவதில் வல்லவராயினும், சிறப்பாக மாயா விநோதக் கதைகள் எழுதுவதிலேயே வல்லவராய் இருந்தார் என்பது எவரும் அறிந்த உண்மையாகும். டேனிஷ் தேசத்து ஆராய்ச்சியாளரான 'ஜார்ஜஸ் பிரேண்ட்ஸ்' (Georges Brandes) என்பார், 'ஆண்டர்சன் பலகாலமாகத் தமக்கு எதைப்பற்றி எழுதக்கூடிய

சக்தி இருக்கிறதென்று ஆராய்ந்து உணராமல் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி எழுதிக்கொண்டிருந்தார். இப்பொழுதுதான் அவர் தமக்கு மாயா விநோதக் கதைகளை எழுதுவதில் இருக்கும் சக்தியை உணர்ந்து கொண்டார். உடனே அவர் அந்தச் சக்தியிருக்கும் மாளிகையின் கதவைத் தொட்டார். அக்கதவு தானே திறந்துகொண்டது. இனி அவர் பொன், வெள்ளி, மாணிக்கம்போன்ற மாயா விநோதக் கதைகளைச் சுவையாக உலகத்தாருக்கு அளிப்பார் என்பது உண்மை' என்று எழுதியிருக்கின்றார். இவ்வாறு அந்த ஆராய்ச்சியாளர் எழுதிய விஷயங்களைக் கண்ட ஆண்டர்சன் ஆனந்தமடைந்து, 'இனி நான் மாயா விநோதக் கதைகளையே எழுதுவேன்' என்று தீர்மானித்தார்.

முதலில் ஆண்டர்சன் மாயா விநோதக் கதைகள் எழுதுவதைக் சிறப்பாக எண்ணவில்லை. ஆனால் இப்போது 'மாயா விநோதக் கதைகளை எழுதியே சிறப்படையலாம்' என்று ஆண்டர்சன் தீர்மானித்தார். அவர் அநேக மாயா விநோதக் கதைகளை எழுதினார். அவைகளும் வழக்கம்போல் பொது ஜனங்களுடைய ஆதரவைப் பெற்றன. இவ்வாறு எழுதுவதில் ஆண்டர்சனுக்குள்ள திறமையைக் கண்ட பொது மக்கள் அவரைப் புகழத் தலைப்பட்டனர். பின்னும் பொது மக்கள், 'பெரியவர்களுக்கான இலக்கியங்களைச் செய்வதற்குப் பலர் முன்வரக் கூடும். ஆனால், இளைஞர்களின் மனோ பாவத்திற் கேற்றவாறு இலக்கியங்களை இயற்றச் சிலர் கிடைப்பதும் அரிதே. ஆகையால், சிறுவர்களுக்கேற்ற இலக்கியங்களைச் செய்யும் ஆண்டர்சனுடைய முயற்சி போற்றற்குரியதாகும்' என்று



கூறினார்கள். கல்வியில் வல்ல ஒருவர், 'உலகத்தில் என்றைக்கும் சிறுவர்கள் தோன்றிக்கொண்டேயிருப்பார்கள்.' அவர்களுக்காக ஆண்டர்சன் எழுதிய கதைகளும் என்றைக்கும் இருந்துகொண்டேயிருக்கும்' என்று கூறினார்.

ஆண்டர்சன் அநேகமாகச் சிறுவர்களுக்கென்று தாம் எழுதும் கதைகளை, எழுது முன்னர், பல சிறுவர்களுக்குச் சொல்லி, அவைகளைக் கேட்ட சிறுவர்கள் சந்தோஷப்படுவார்களானால், பிறகு அவற்றை எழுத ஆரம்பிப்பார். எழுதும்போதும் அவர் தமக்கு முன்னால் பலசிறுவர்கள் இருப்பது போலவும், அவர்களுக்குத்தாம் கதை சொல்லுவது போலவும் எண்ணிக்கொண்டே எழுதுவார். எழுதும்போது அவர் சிறு விஷயங்களைக்கூட, 'சிறுவர்களுக்குத் தானே எழுதுகிறோம்' என்னும் அலட்சியமின்றி, நன்றாகவே எழுதுவார். பெருவானத்தில் சிறு சந்திரன் பொலிவைத்தருவது போலப் பெருவிஷயங்கள் பல சிறு விஷயங்களினால் பொலிவுறுமாகையால் 'சிறு விஷயங்கள்' என்று எதையும் விலக்குதல் கூடாது என்பது ஆண்டர்சனுடைய கருத்துப் போலும்!

ஆண்டர்சன் அடிக்கடி அனேக இளஞ்சிறுவர்களுக்குக் கதை சொல்லிவந்தார். உயர்குடியிற் பிறந்த இளஞ்சிறுவர்களும் ஆண்டர்சன் சொல்லும் கதைகளைக் கேட்கத் தினந்தோறும் ஆவலுறுவர்.

சிறுவர்களுக்கேற்ற இலக்கியங்களை எழுதுவதில் ஆண்டர்சன் சிறந்தவரென்று பெயர்பெற்ற பிறகு, அச்சிட்டு வெளிவருமுன்னரே, அவர் எழுதும் கதைகளைக் கேட்கவேண்டுமென்று அநேகம் பெருமக்கள்

ஆவலுறுவது வழக்கம். ஆண்டர்சனும் அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கித் தாம் எழுதும் கதைகளை, அச்சிடுமுன்னரே, அவர்களுக்கு வாசித்துக் காட்டுவார். அவ்வாறு வாசிக்கப்பட்டு வெளிவந்த கதைகளில் அநேகம் ஒரே புத்தகமாக, அச்சிட்டு, வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாறு வெளிவந்த கதைகளில் அநேகம் ஆண்டர்சனுடைய சொந்த கற்பனைசக்தியில் இருந்து வெளிவந்தவைகள்; சில கதைகள் கர்ணபரம்பரையாக அவருடைய நாட்டில் வழங்கி வந்தவைகளாகும். இச்சமயத்தில் ஆண்டர்சன் ஒரு 'நாவ'லும், நாடகமும் எழுதினார். அவர் எழுதிய 'நாவல்' சாதாரணமானது. நாடகமும் அத்தகையதே. 'ஆனால் அவைகள் படிப்பதற்கு இன்பத்தைத் தரத்தகுந்தவைகளாய் இருக்கின்றன' என்று அநேகர் கூறுகின்றனர். அவைகளில் ஆண்டர்சன் 'டேனிஷ்' தேசத்துப் பழக்க வழக்கங்களையும், காட்சிகளையும் குறித்து விரிவாக வரைந்திருக்கின்றார்.

ஆண்டர்சன், பின்னர், வேறொருகதை எழுதினார். அந்தக்கதையில் ஓர் ஏழைப்பையன் தோன்றிப் பெரிதும் கஷ்டப்படுகிறான். சுயநலமும் அழகும் உள்ள, மந்திரங்கற்ற பெண்ணொருத்தி தோன்றுகிறாள். அவளுடைய வீடு திடீரென்று தீப்பிடித்து எரிந்து போகின்றது. பிறகு அவளை ஒரு பிரபு தம் அபிமான புத்திரியாக ஏற்றுக்கொள்ளுகிறார். விநோதப்பாடகன் ஒருவன் விளங்குகின்றான். அவன் பல அற்புதக் காரியங்களைச் செய்கின்றான். இன்னும் இவைபோன்ற பற்பல விஷயங்கள் அக்கதையில் காணப்படுகின்றன.



ஆண்டர்சன் எழுதும் புத்தகங்கள் சற்றேறக்குறைய நன்றாக விற்கத் தலைப்பட்டன. அதனால் அவருக்கு வருவாய் வரத்தலைப்பட்டது. அவர் தம்முடைய பழைய இடத்தைவிட்டுப் புதியதொரு நல்ல விடத்திற்குக் குடிபோனார். அவர்தம்முடைய புதியவிடத்திலிருந்து சுலபமாகத் துறைமுகத்தையும், சமுத்திரத்தையும் பார்க்கக்கூடும். ஆண்டர்சனுக்கு எப்பொழுதும் கடற்காட்சியைக் காண்பதில் விருப்பமதிகம். ஆண்டர்சனுடைய புதிய இடத்தின்பக்கத்தில் அரசாங்கத் தோட்டமொன்றுமிருந்தது. 'தற்சமயம் நீங்கள் என்னுடைய இருப்பிடத்தைக் கண்டால் ஆனந்தப் படுவீர்கள். அழகாக அலங்கரிக்கப்பட்ட, எனக்குச் சொந்தமான, சோபாவில் அமர்ந்து நான் ஆனந்தப் படுகிறேன். நான் அலங்காரம் செய்து கொள்ளும் என்னுடைய அறையில் எனக்கு வேண்டிய ஆடைகள் நிறைந்திருக்கின்றன. அழகியநாற்காலி, மேஜை, படங்கள் முதலியவைகள் அவ்வவற்றிற்குரிய விடங்களில் அலங்காரமாக விளங்குகின்றன. இப்போது சாதாரணத் தனவந்தன் ஒருவன் அநுபவிக்கக்கூடிய அளவு இன்பத்தை நான் அநுபவிக்கின்றேன். சிலசமயங்களில் எனக்கு இவைகள் யாவும் கனவில் தோன்றும் காட்சிகளைப்போல் இருக்கின்றன. மிகவும் ஏழைக்குடியில் பிறந்து, அணிந்துகொள்ளுவதற்கு நல்ல பாதரட்சையுமில்லாது, 'ஆடன்ஸ்' நகரத்தில் அலைந்து கொண்டிருந்த எனக்கு இவ்வாறு தோன்றுவது இயற்கைதானே! இப்போது என்னை உயர் குடியிற் பிறந்த பெருமக்கள் பலரும் உள்ளன்போடு நேசிக்கிறார்கள்' என்று ஆண்டர்சன் தமது நண்பர்

ஒருவருக்கு எழுதிய கடிதமொன்றில் எழுதியிருக்கின்றார். இக்கடிதத்திலிருந்து, எல்லாவற்றிலும் மேலாக, ஆண்டர்சன் தம்மனத்தில் உள்ள விஷயங்களை மறைக்காமல் வெளியிடுபவர் என்று கூறுவது மிகையாகாது.

பெரியவர்களுக்கேற்ற இலக்கியங்களை இயற்ற வேண்டுமென்னும் ஆவல் ஆண்டர்சனை விட்டபாடில்லை. அதனால் அவர் மறுபடியும் 'முலாட்டோ,' 'The Mulatto' 'மூரிஷ் பெண்' (The Moorish Girl) என்னும் இரண்டு நாடகங்களை எழுதி முடித்தார். அவற்றில் 'முலாட்டோ' ஒருவாறு பொது மக்களின் ஆதரவைப் பெற்றது. ஆனால், 'மூரிஷ்பெண்' என்னும் நாடகம் பொது ஜனங்களின் ஆதரவை ஒரு சிறிதும் பெறவில்லை. பின்னும் ஆண்டர்சன் ஓயாமல் உழைத்துக்கொண்டே யிருந்தார். அதனால் அவர் மனோநிலை தளர்வுற்றது. ஆகவே அவர் மறுபடியும் தேசப் பிரயாணம் செய்து வரத் தீர்மானித்தார். அதனால், ஜோனஸ்கலினுடைய அனுமதியைப் பெற்று, 'இளமையின் ஊக்கம் என்னிடம் குடிகொண்டிருக்கின்றது. இதுவரையில் நான் செய்யாத காரியங்கள் சிலவற்றை இனி நான் செய்வேனென்று நினைக்கின்றேன். நான் இன்னும் அனுபவமாகிய பள்ளிக்கூடத்தில் இருக்கின்றேன். தேசப் பிரயாணமே அதனின்றும் வெளியேறுவதற்கு ஏற்ற மார்க்கமெனக் கருதுகின்றேன். எக்காலத்தும் தங்கள் ஆதரவே எனக்கு அவசியமாய் இருக்கின்றது' என்று [illegible] எழுதினார்.

'டென்மார்க்கு' ஏழைத் தேசமாயினும் அது



தன்னுடைய கல்விமான்களை ஆதரிக்க எப்போதும் பின் வாங்குவதே கிடையாது. ஆண்டர்சனுடைய கடிதத்தைக் கண்ட டென்மார்க்குத் தேசத்தரசர் ஆண்டர்சனுக்கு வருடந்தோறும் ஐம்பது பவுன் கொடுப்பதாக வாக்களித்தார். 'வருடந்தோறும்' என்னும் வார்த்தையைக் கண்டு ஆண்டர்சன் ஆனந்தப்பட்டார். 'சாகிற வரையில் எனக்கு அரைவயிறு ஆகாரம் நிச்சயமாகக் கிடைத்து விட்டது. இனி நான் என் இஷ்டம்போல் ஒருவருக்கும் கஷ்டங்கொடுக்காமல் வாழலாம்' என்று ஆண்டர்சன் கருதினார். பிறகு ஆண்டர்சன் தமது பிரயாணத்தைப் பற்றி ஆலோசித்தார்.

பொதுவாக ஆண்டர்சனைச் 'சிக்கனக்காரர்' என்றே சொல்லவேண்டும். மற்றவர்கள் தங்கள் சாப்பாட்டுச் செலவுக்கே போதாதென்று சொல்லத்தகுந்த சிறு தொகையைக் கொண்டு ஆண்டர்சன் தம் பிரதேசப் பிரயாணத்தை நடத்தக் கூடியவர். ஆகையால் அரசர் தமக்குத் தருவதாக வாக்களித்த பொருளைக் கொண்டு அவர் தேசப் பிரயாணம் செய்து வரத் தீர்மானித்தார். 'அதிர்ஷ்ட நட்சத்திரத்திற்கும் அதிர்ஷ்டத்தை அளிக்கவல்ல கடவுள் என் பங்கில் இருக்கின்றார். ஆகையால் நான் எண்ணிய காரியம் நிறைவேறும்' என்று இச்சந்தர்ப்பத்தில் ஆண்டர்சன் கூறியுள்ளார்.

### மீண்டும் பிறதேசப் பிரயாணம்

ஆண்டர்சன் மறுபடியும் தம்முடைய பிறதேசப் பிரயாணத்தை ஆரம்பித்துக் கொண்டார். அவர் அழகிய கட்டடங்கள் பல நிறைந்துள்ள 'அக்ஸ்பர்க்'

(Augsburg) என்னும் நகரத்திற்குச் சென்றார். அந்த நகரத்தைப் பார்க்கவேண்டு மென்னும் ஆவல் ஆண்டர்சனுக்கு வெகு காலமாக ஏற்பட்டிருந்தது. 'நான் சிறுவனாய் இருக்கும் போது பழைய புத்தகங்களில் இருந்து கத்தரித்து எடுக்கப் பட்ட பல படங்கள் அடங்கிய ஒரு சிறு பெட்டி வைத்திருந்தேன். அந்தப் பெட்டியில் உள்ள படங்கள் யாவும் அக்ஸ்பர்க்கில் உள்ள பிரபல கட்டடங்களைக் காட்டுகிறவைகளாய் இருந்தனவே யன்றி வேறன்று. நான் அந்தக் கட்டடங்களின் படங்களைப் பார்க்கும்போது, "அவைகளுக்குப் பின்னால் இன்னும் எத்தகைய காட்சிகள் இருக்கக்கூடுமோ" என்று எண்ணுவேன். அதனால் எனக்கு அப்போதே அக்ஸ்பர்க்கைப் பார்க்கவேண்டும், என்னும் ஆவல் ஏற்பட்டிருந்தது. 'அக்காலத்தில் நான் நினையாத ஒரு சந்தர்ப்பம் இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. நான் இப்போது அக்ஸ்பர்க்கின் மத்தியில் இருந்து அதனுடைய அழகிய காட்சிகளைக் கண்டு களித்துக்கொண் டிருக்கின்றேன். என்னுடைய இளம்பருவத்தில் நான் படங்களில் கண்ட காட்சிகளையெல்லாம் இப்போது நேரில்கண்டு களித்துக்கொண் டிருக்கின்றேன்" என்று ஆண்டர்சன் அக்ஸ்பர்க்கில் இருந்தபோது சொல்லி யிருக்கின்றார். அக்ஸ்பர்க்கில் சிலதினங்கள் தங்கி ஆண்டர்சன் அந்த நகரத்தைக் கண்டு களித்தார். இச்சமயத்தில் அவர் எழுதிய புத்தகங்கள் நன்றாய் விற்பனையாயிற்று. அதனால் அவருக்கு அவ்வப்போது சிறிது பொருள் தவறாமல் வந்துகொண் டிருந்தது. அதனாலும் அவருடைய பிரயாணம்



பின்னும் சிறிது சந்தோஷ முடையதாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் முதல் முதலாக அவர் புகைவண்டியிற் பிரயாணம் செய்தார். அதனால் அவர் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவே கிடையாது. தம்முடைய பிரயாணத்தைப்பற்றிய சிறு விஷயத்தையும் விடாமல் அவர் விவரித்து எழுதியிருக்கின்றார். அவர்காலத்தில் புகைவண்டி இப்போது இருப்பதுபோல் எங்கும் சர்வ சாதாரணமா யிருக்கவில்லை. அப்போதுதான் புகைவண்டி எங்கும் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவிக்கொண்டு வந்தது. அதனால் புகைவண்டியைப் பற்றி அறிந்தவர்களும், அதிற் பிரயாணம் செய்தவர்களும் ஆண்டர்சனுடைய காலத்தில் அதிகமாயில்லை என்று கூறுகின்றனர். ஆகவே ஆண்டர்சன், 'என்னுடைய வாசகர்கள் பலருக்குப் புகைவண்டித் தொடரைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. நீளமாகத் தரையில் அமைக்கப்பட்ட இரண்டு தண்டவாளக் கம்பிகளின்மீது சற்றேறக்குறைய கோச்சுவண்டிகளைப் போன்ற பலவண்டிகள் நிற்கின்றன. அவைகளுக்கு முன்னால், அவைகளை இருப்புக் கம்பிகளின்மீது இழுத்துச்செல்லும் புகைவண்டி நிற்கின்றது. வண்டிகள் யாவும் ஒன்றோடொன்று சங்கிலிகளால் பிணைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளில் மனிதர்கள் உல்லாசமாக ஏறிச் செல்கின்றனர். வண்டிகளை இழுத்துச் செல்லும் புகைவண்டியில் ஒரு மனிதன் இருக்கின்றான். அவன் புகைவண்டி ஓடவும், நிற்கவும் செய்கின்றான்' என்று எழுதியுள்ளார். இதனால் ஆண்டர்சன் காலத்தில்தான் இரயிற் பிரயாணம் தலை யெடுக்க ஆரம்பித்தது என்று தெரிகிறதல்லவா?

ஆண்டர்சன் 'திரஸ்டன்,' 'இலெப்ஜிக்' முதலிய ஊர்களுக்குச் சென்று கடைசியாக இத்தலி தேசத்திற்குச் சென்றார். அவர், 'ப்ளாரன்ஸ்' (Florence) நகரத்திலிருந்து 'உரோம்' நகரத்திற்குச் செல்லும்போது அறிவற்ற, ஆடம்பரம் வாய்ந்த, ஒரு மனிதனால் அதிகத் துன்பப்பட்டார். அந்த மனிதன் ஆண்டர்சன் சென்ற குதிரை வண்டியில் எல்லோருக்கும் முன்னால் தான் போய் மிகவும் வசதியாக, மற்றவர்களின் சௌகரியத்தைக் கவனியாமல், உட்கார்ந்து கொண்டான். அவனுடைய மூட்டை முடிச்சுகள் முதலியவற்றையும் அவன் வண்டியில் சௌகரியமானவிடங்களில் வைத்துக் கொண்டான். அவன் தன்னோடு வண்டியில் உள்ள மற்றவர்களின் சௌகரியத்தைச் சிறிதும் கவனிக்கவேயில்லை. கடைசியாக அந்த வண்டியில் இருந்தவர்கள் எல்லோரும் ஒரு சத்திரத்தில் போய்த் தங்கினார்கள். அந்தச் சத்திரத்தில், தங்குவதற்குப் பணம் கொடுப்போருக்கு, எல்லாவிதச் சௌகரியங்களும் நிறைந்திருந்தன. அந்தச் சத்திரத்தின் சொந்தக்காரன், வண்டியில் ஆடம்பரமாக வந்த மனிதனுக்கும், ஆண்டர்சனுக்கும் ஒரேயிடத்தில் இரண்டு படுக்கைகளை ஏற்படுத்தினான். ஆண்டர்சன் தம் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னரே அந்த ஆடம்பரக்காரன் தன் படுக்கையிற் படுக்கச் சென்றான். அவன் தனக்கிருந்த தலையணைகளோடு ஆண்டர்சனுடைய படுக்கையில் இருந்த தலையணைகளையும் எடுத்துத் தன் தலையின்கீழ் வைத்துக்கொண்டான். பிறகு ஆண்டர்சன் தமது படுக்கைக்குச் சென்று, நிகழ்ந்தவற்றை யறிந்து, தமது தலையணைகளைத்



தரும்படி ஆடம்பரக்காரனைக் கேட்டார். அதற்கு அவன், 'என் தலை அதிக உயரமாக இருந்தால்தான் எனக்கு உறக்கம்வரும். அதற்காகவே நான் உமது தலையணைகளையும் யெடுத்துக் கொண்டேன்' என்று கர்வத்தோடு கூறினான். அவன் வார்த்தைகளையும், அதுவரையில் அவன் நடந்துகொண்ட மாதிரியையும் கண்ட ஆண்டர்சனுடைய மனத்தில் கோபமேற்பட்டது. உடனே அவர், 'என் தலையும் அதிக உயரமாக இருந்தால்தான் எனக்கும் தூக்கம்வரும்' என்று சொல்லிக்கொண்டே ஆடம்பரக்காரனிடமிருந்த தமது தலையணைகளை எடுத்துக்கொண்டார். இவ்வாறு ஆண்டர்சன் செய்வாரென்று அந்த ஆடம்பரக்காரன் எதிர்பார்க்கவில்லை.

ஆண்டர்சன் உரோமாபுரியிலிருந்து 'நேப்பிள்ஸ்' நகரத்திற்குச் சென்றார். பின்னர் அங்கிருந்து ஒரு பிரஞ்சுக் கப்பலில் 'கிரீஸ்' தேசத்திற்குப் பிரயாணமானார். அப்போது கப்பலின் தளத்தில் ஒரு குருவி ஏக்காரணத்தினாலோ சோர்ந்து விழுந்து கிடந்தது. அதைக் கண்டதும் ஆண்டர்சனோடு இருந்த பிரயாணி ஒருவர், 'நாம் இக்குருவியைப் பிடித்துச் சமையற்காரனிடம் கொடுத்து நமக்காகச் சமைக்கச் சொல்லலாம்' என்று சொன்னார். ஆனால், அவர் கருத்துக்கு இணங்காது, ஆண்டர்சன், அந்தக் குருவியைப் பிடித்து, அது பறந்துபோகிற வரையில், அதனைக் காப்பாற்றிவிட்டுவிட்டார். இவ்வாறு அவர் அநேக சந்தர்ப்பங்களில் அநேக உயிர்களைக் காப்பாற்றி இருக்கின்றார். பொதுவாக ஆண்டர்சன் ஜீவகாருண்யம் வாய்ந்தவர் என்றே சொல்லவேண்டும்.

பிறகு ஆண்டர்சன் 'ஏதன்ஸ்' என்னும் இடத்தில் ஒரு மாத காலம் தங்கி வசிக்கலானார். அப்போது அங்கு அவருடைய நாட்டார் பலர் வசித்திருந்தனர். அவர்கள் தங்கள் தேசத்து நாவலராகிய ஆண்டர்சனை உள்ளன்போடு வரவேற்று மகிழ்ச்சியடைந்தனர். அப்போது ஆண்டர்சனுடைய பிறந்த நாள் வந்தது. அந்த நாளை ஒரு மலையடிவாரத்தில் அவர்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்காகப் பல ஏற்பாடுகளைச் செய்தனர். ஆனால் திடீரென்று பனி மிகுதியாகப் பெய்த படியினால் அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. கௌரவம் வாய்ந்த, பொறுமையற்ற, பொது மக்கள் பலர் ஆண்டர்சனைக் கிரீஸ் தேசத்து அரசருக்கும், அரசிக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள். ஆண்டர்சன் கிரீஸ் தேசத்தில் இருக்கையில் குதிரையின் மீது ஏறிச் செல்வதற்குப் பழகிக் கொண்டார்.

பின்னர், ஆண்டர்சன் அருக்கிலுள்ள கான்ஸ்டாண்டி நோபிளுக்குச் சென்றார். அங்கே அவர், தாம் தம்முடைய சிறுவயதில் அரபிக்கதைகளில் கேள்விப்பட்ட அநேகக் கட்டடங்களை நேரில் கண்டு களித்தார். பிறகு அவர் கான்ஸ்டாண்டி நோபிளைச் சார்ந்த பலவிடங்களைச் சுற்றிப்பார்த்தார். கான்ஸ்டாண்டி நோபிளைப் பார்த்ததோடு ஆண்டர்சன் தமது பிறதேசப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு கோபன்ஹாகனுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். ஜோனஸ்காலினும், அவர் குடும்பத்தாரும் ஆண்டர்சனுடைய சார்பாகத் தங்கள் நண்பர்களுக்கு ஒரு விருந்து நடத்தி மகிழ்ந்தனர். அந்த விருந்துக்கு



அரசியல் சம்பந்தமான பெரியோர் பலர் வந்திருந்தனர்.

ஆண்டர்சன், பிறகு, தமது பிரயாண அனுபவத்தைக் குறித்து ஒருபுத்தகம் எழுதி முடித்தார். அவ்வாறு அவர் எழுதி முடித்த புத்தகத்தில் அவர் தம்முடைய பிரயாணத்தைப்பற்றி எழுதி யிருந்ததோடு, புதிய மூன்று கதைகளையும் வரைந்திருந்தார். அந்தப் புத்தகமும் ஆண்டர்சன் எழுதிய மற்றப்புத்தகங்களைப் போலவே பொதுமக்களின் ஆதரவை விரைவில் பெற்றது. ஊக்கமும், அதிர்ஷ்டமும் ஒருங்கே சேரப் பெற்ற ஆண்டர்சன் இவ்வாறு தமது வாழ்க்கையில் உயர்ந்து கொண்டேபோனார்.

ஆண்டர்சன் எழுதியகதைகள் கீர்த்திபெற்றன. அவைகள் விரைவில் 'ஸ்வீடிஷ்' 'டச்' 'ஜர்மன்' முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு அப்பாஷைகளுக்குரிய சிறுவர்களால் ஆவலோடு படிக்கப்பட்டுவந்தன. ஆனால் அதுவரையில் ஆண்டர்சன் எழுதிய கதைகளில் ஒன்றும் ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப்படவில்லை. அவ்வாறு மொழிபெயர்க்கப் படாமைக்கு ஆண்டர்சனே மிகுதியும் வருத்தப்பட்டார். 'என்னுடைய கதைகளை ஆங்கிலமொழியில் எழுதுவோருக்கு நான் என்னாலான உதவியைச் செய்வேன்' என்று ஆண்டர்சன் சொல்லியுள்ளார். ஒருவரும் அவருடைய கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கு விரைவில் முன்வரவில்லை. ஆண்டர்சன் அதைப்பற்றி அதிகமாகக் கவலைகொள்ளாமல் மேன்மேலும் எழுதுவதாகிய தமது வேலையை ஓயாமல் செய்துகொண்டே யிருந்தார். அப்போது, நன்றாகக்கற்ற

'மேரி அவிட்' (Mary Howitt) என்னும் ஆங்கில மாது ஒருவர் ஆண்டர்சனுடைய கதைகளை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கலானார். அதனால் சின்னாட்களில் ஆண்டர்சனுக்கு இங்கிலாந்திலும் பெரும் புகழ் உண்டாயிற்று. பின்னர், ஆண்டர்சனுடைய பெயர் வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள ஜலப்பிரதேசங்களிலும் பரவியது. அப்போது ஆண்டர்சனுடைய பெருமை உலக முழுவதுமே ஒருவாறு பரவி விட்டது என்று சொல்லலாம்.

இதற்கிடையில் ஆண்டர்சனுக்குத் தம்முடைய சொந்த நாட்டில் பல பெருமைகள் உண்டாயின. அவர் எழுதிய 'புதிய அற்புதக் கதைகள்' (New Wonder Stories) என்னும் பெயர்கொண்ட புத்தகம் வெளிவந்த சின்னாட்களுக்குள் டென்மார்க்குத் தேச முழுவதும் பரவி எல்லோருடைய புகழுக்கும் உரியதாயிற்று. சிறுவர்கள், தங்களுக்குப் பள்ளிக்கூடங்களிலாவது, வேறிடங்களிலாவது வெகுமதி கிடைப்பதாயிருந்தால் அவ்வெகுமதி ஆண்டர்சனுடைய கதைகளில் ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமென்று கருதினார்கள். அதைத்தவிர அவர்கள் வேறொன்றையும் சிறந்த வெகுமதியாகக் கருதுவதில்லை. இதனால் சிறுவர்களிடத்தும் ஆண்டர்சனுடைய கதைகள் எத்தகைய சிறப்பைப் பெற்றிருந்தன வென்பது நாம் அறியக் கிடக்கின்றது.

முதலில் வயதுசென்றவர்கள் பலர் ஆண்டர்சனுடைய கதைகள் சிறுவர்களுக்கே ஏற்றது என்று தீர்மானித்தனர். ஆனால் நடிகர்கள் பலர் ஆண்டர்சனுடைய கதைகளில் தங்களுக்கு ஏற்றபாகத்தைத்



தாங்கள் நாடகமேடைகளில் நடிக்கும்போது கூறி வருவாராயினர். அதைக்கண்ட மக்கள் ஆண்டர்சனுடைய கதைகள் சிறுவர்களுக்கு இன்பத்தைத் தருவது போலவே பெரியவர்களுக்கும் இன்பத்தைத் தருவதாகும் என்று தீர்மானித்தனர்.

உருவச்சிலைகளைச் செய்வதில் கைதேர்ந்தவராகிய 'தார்வால்ட்சன்' என்னும் பெயரினையுடைய ஆண்டர்சனது நண்பர் ஒருமுறை ஆண்டர்சனை நோக்கி, 'நீர் ஊசியைப்பற்றி ஒரு கதை சொல்லவேண்டும்' என்றார். உடனே ஆண்டர்சன் ஊசியைப்பற்றி ஓர் அழகான கதை சொன்னார். அக்கதை இப்போதும் கற்றவர்களால் கொண்டாடப் படுகின்றது.

டென்மார்க்கு நாட்டு அரசரும், அரசியும் ஆண்டர்சனுடைய கதைகளைக் கேட்பதிலும், படிப்பதிலும் ஆவலுடையவர்களானார்கள். அவர்கள் ஒருமுறை டென்மார்க்கு நாட்டின் கடற்கரை யோரங்களில் உள்ள சில ஊர்களைப் பார்க்கச் செல்லுகையில் ஆண்டர்சனையும் தங்களோடு அழைத்துச்சென்றனர். அப்போது ஆண்டர்சன் புதிதுபுதிதாக அநேகம் கதைகளைச் சொல்லி அரசரையும், அரசியையும் களிப்பித்தார். அக்கதைகள் யாவும், வீணாகாதபடி, அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சிறுவயதில் தகுந்த நண்பர்களின்றி, பொருளின்றி, கோபன்ஹேகனுக்கு வந்த ஆண்டர்சன் அரசரோடு உல்லாசமாக உண்டு உரையாடும் பாக்கியத்தைப் பெற்றார். மனிதவாழ்க்கையின் மாறுதல் இருந்தவாறு என்னே! 'அறத்திடு பிச்சை கூவியிரப்போர் அரசோடிருந் தரசாளினும் ஆளுவர்' என்னும் உறுதிமொழி ஆண்டர்சனுடைய

வாழ்க்கையில் ஒருவாறு உண்மையாயிற்றன்றோ? 'என்னுடைய கதைகள் அதிர்ஷ்ட நட்சத்திரத்தின் பார்வையில் என்னால் வரையப் பட்டனபோலும்! அதனால்தான் அவைகள் உலகத்தின் நாற்பக்கங்களிலும் பரவி நிற்கின்றன' என்று ஆண்டர்சன் சொல்லியிருக்கின்றார்.

டென்மார்க்கு நாட்டு அரச தம்பதிகளுடன் பிரயாணம் செய்தபிறகு ஆண்டர்சன் ஜர்மனி, உரோம், நேப்பிள்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்றார். அப்போது அவர் 'ஸ்பெயின்' தேசத்திற்குப் போக விரும்பினார். அச்சமயம் அங்கு உஷ்ணம் அதிகமாய் இருந்தமையினால் அவர் அவ்வாறு போக விரும்பவில்லை. 'ஆம்பர்க்' (Hamburg) நகரத்தில் ஆண்டர்சன் இருக்கும்போது அவரை ஒரு நண்பர், சிறுவர்கள் இருந்த ஒரு மாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோய், அவருக்குச் சிறுவர்களை அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் அவர் ஆண்டர்சனைப் பார்த்து, 'உங்களை இப்போதுதான் இச்சிறுவர்கள் பார்த்தார்களாயினும் இவர்கள் முன்னரே உங்கள் கதைகளைப் படித்து ஆனந்தப்பட்டுக்கொண் டிருக்கின்றனர்' என்று சொன்னார்.

சிறுவர்கள் தங்களுக்கு இன்ப ஊற்றாகவிருக்கும் கதைகளின் ஆசிரியரைக் கண்டு அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவே கிடையாது. கடைசியாக ஆண்டர்சன் தம்முடைய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

### இங்கிலந்துக்குச் செல்லுதல்

ஒரு நாள் டென்மார்க்கு நாட்டு அரசர் ஆண்டர்சனைப்பார்த்து, 'நீர் பலநாடுகளுக்கும் அடிக்கடி



சென்று வருகிறீர்? ஆனால் நீர் இன்னும் இங்கிலந்துக்குப்போய் அதைப் பார்க்காமல் இருக்கின்றீரே' என்று சொன்னார்.

அதற்கு ஆண்டர்சன் அரசரைநோக்கி, 'எனக்கு இங்கிலந்தைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் அதிகமாய் இருக்கின்றது. அடுத்த வசந்தகாலத்தில் அங்குப்போகலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று கூறினார்.

இதற்கிடையில் ஆண்டர்சனுடைய கதைகளில் பல ஆங்கிலபாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு இங்கிலந்தில் பிரபலமடைந்திருந்தன. அதனால், ஆண்டர்சனுடைய புகழ் இலண்டன் முதலிய நகரங்களில் பரவியிருந்தது.

கடைசியாக ஆண்டர்சன் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தேழாவது ஆண்டு தமது பிரயாணத்தைத் தொடங்கினார். அப்போது, இன்பமயமான வசந்தகாலமானது எல்லோருக்கும் இன்பத்தைத் தந்துகொண்டிருந்தது. ஆண்டர்சன் 'ஆலந்து' (Holland) வழியாக இங்கிலந்துக்குச் செல்லுகையில், ஆலந்தில் சில நாட்கள் தங்கி இன்பமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தார். பின்னர் அவர் 'இராட்டர்டாம்' என்னும் ஊரிலிருந்து கப்பலேறி இலண்டன் நகரம் போய்ச்சேர்ந்தார். அவர் இலண்டனுக்குச் செல்லுகையில், தூரத்தில், 'தேம்ஸ்' நதியைக்கண்டு, அந்நதி நெருப்புப் பிடித்து எரிகிறதோ வென்று எண்ணினார். அவர் அவ்வாறு நினைக்கும்படி அந்நதியில் எங்கும் நிறைந்திருக்கும் விசைப் படகுகளிலும், கப்பல்களிலுமிருந்து புகைவந்து கொண்டிருந்தது.

இலண்டன் நகரத்தில் ஆண்டர்சன் எல்லோராலும் கௌரவமாக வரவேற்கப்பட்டார். இலண்டனில் இருந்த பெரிய மனிதர்கள் எல்லோரும் அவருக்குத் தத்தம் மாளிகையில் நடந்த விருந்துகளில் வரவேற்பளித்தனர். அவரை அநேக காட்சிகளுக்குப் பெருமக்கள் பலர் அழைத்துச் சென்று ஆனந்தப் பட்டனர். அநேகம் சீமான்களும் சீமாட்டிகளும் அவரை இடைவிடாது சூழ்ந்து அவருக்குக் கௌரவமளித்தனர். தாம் எழுதும் மாயாவினோதக் கதைகளில் தோன்றும் கதாநாயகர்களைப் போன்றே தாமும் இன்பமனுபவிக்க நேர்ந்ததைக் குறித்து ஆண்டர்சன் ஆனந்தப் பட்டார். அப்போது ஆண்டர்சன் இலண்டனில் இருந்த 'சார்லஸ் டிக்கன்ஸ்' என்பவரைப் பார்க்க ஆவல்கொண்டார். 'சார்லஸ் டிக்கன்ஸ்' என்பவர் எழுதிய பல புத்தகங்களை வாசித்த ஆண்டர்சன் நெடுநாட்களாகவே அவரைப் பார்க்க வேண்டுமென்று எண்ணிக்கொண் டிருந்தார்.

கடைசியாக 'லேடி பிளசிங்டன்' என்பவர் அளித்த விருந்தொன்றில் ஆண்டர்சன் சார்லஸ் டிக்கன்சைச் சந்தித்தார். இருவர்கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்துப்பேசின. பிறகு அவர்கள் இருவரும் தனியிடத்திற்குச் சென்று பேசலாயினர். இங்கிலந்தின் பிரசித்திபெற்ற நூலாசிரியர் ஒருவரோடு தாம் அளவளாவிப் பேச நேர்ந்தமைக்காக ஆண்டர்சன் ஆனந்தக் கண்ணீர் விட்டார். அன்றுமுதல் சார்லசும், ஆண்டர்சனும் சிறந்த நண்பர்களாயினர்.

ஆண்டர்சன் மற்றொருமுறை இங்கிலந்துக்குச் சென்றபோது பலவாரங்கள் டிக்கன்சோடு



அவருடைய மாளிகையில் தங்கியிருந்தார். அப்போது ஆண்டர்சன் ஸ்காட்லந்துக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அங்கோரிடத்தில் அவரை ஸ்காட்லந்து கூலியாள் ஒருவன் கண்டான். அவன், 'ஆண்டர்சன் மிகவும் இளையவராகவே காணப்படுகின்றார். அவர் எழுதிய பல புத்தகங்களை நான் படித்துப் பார்த்தேன்; என் பிள்ளைகளும் அப்புத்தகங்களைப் படிக்கின்றார்கள். இத்தகைய சிறந்த ஆசிரியரைச் சந்தித்தமையைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்' என்று சொன்னான். இச்சமயத்தில் 'ஸ்காட்' எழுதிய கதைகளில் தாம்படித்தறிந்த அநேகம் இடங்களை நேரில் பார்த்து ஆண்டர்சன் ஆனந்தப்பட்டார். ஆண்டர்சன் இலண்டனில் இருக்கும்போது ஸ்காட்டினுடைய மருகராகிய 'லாக்கார்ட்' (Lockhart) என்பவர் ஆண்டர்சனை அன்போடு வரவேற்று உபசரித்தார். ஆண்டர்சனுக்கு ஸ்காட் வசித்திருந்த 'அபாட்ஸ் போர்டு' மாளிகையைப் போய்ப் பார்க்கவேண்டு மென்னும் ஆவல் உண்டாயிற்று. சில காரணங்களால் அவர் அங்குச் செல்ல முடியாதவரானார். ஆண்டர்சன் சில காலம் தம்முடைய ஆங்கில பிரசுரகர்த்தர் ஒருவரிடம் தங்கி யிருந்தார். கடைசியாக அவர் இங்கிலந்தை விட்டுப் புறப்படுவதற்குமுன் டிக்கன்ஸ் வீட்டில் தங்கி விருந்துண்டார். டிக்கன்ஸ் தாம் எழுதிய புத்தகங்களில், படங்களோடுகூடிய உயர்ந்த பதிப்புக்களில், ஒவ்வொன்றை ஆண்டர்சனுக்கு நட்பின் அடையாளமாகக் கொடுத்தார். அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் டிக்கன்ஸ், 'ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனுக்கு, அவருடைய நண்பரும், வியப்பாளருமாகிய டிக்கன்ஸ்

என்பவரால் அளிக்கப்பட்டது' என்று வரைந்திருந்தார்.

பிறகு ஆண்டர்சன் தமது நாட்டுக்குப் போவதற்காகக் கப்பலேறத் துறைமுகத்திற்குச் சென்றார். அப்போது டிக்கன்ஸ் அவரோடு தாமும் துறை முகத்திற்குச் சென்றார்.

ஆண்டர்சன் கப்பலில் ஏறிய சிறிது நேரத்திற்குள் கப்பல் பிரயாணமாயிற்று. ஆண்டர்சனுடைய உருவம் தமது கண்ணுக்குத் தெரியாமல் மறைகிறவரையில் டிக்கன்ஸ் துறைமுகத்திலிருந்து பிறகு தமது வீடுபோய்ச் சேர்ந்தார். 'இங்கிலந்தில் நான் கடைசிமுறையாகச் சந்தித்து மகிழ்வதற்கு உரியவராய் இருந்தவர் டிக்கன்சனே' என்று ஆண்டர்சன் கூறியுள்ளார்.

### வேறு சில விஷயங்கள்; முடிவு

சில வருடங்களாயின. டென்மார்க்குத் தேசத்தரசர் திடீரென்று நோய்கண்டு இறந்து போனார். தமது நன்மையில் கண்ணும் கருத்துமுடையவரான டென்மார்க்குத் தேசத்து அரசர் இறந்தமைக்காக ஆண்டர்சன் பெரிதும் வருந்தினார்.

பின்னர் டென்மார்க்குத்தேசம் பிறநாடொன்றோடு சண்டையிட நேர்ந்தது. ஆண்டர்சன் யுத்தவீரர் அல்லர். அவர் எப்போதும் யுத்தத்தையும், அதனால் உண்டாகக்கூடிய பஞ்சம், பிணி முதலியவைகளையும் வெறுப்பவர். ஆனாலும் அவர் யுத்தகாலத்தில் போர்க்களத்தைச் சுற்றிலுமுள்ள பாசறைதோறும் சென்று தம்மாலான உதவியைத் தமது நாட்டு வீரர்களுக்குச் செய்துவந்தார். அப்போது அவர் பல மக்களோடு பழகிப் பெருமை பெற்றார்.



யுத்தத்தில் டென்மார்க்கு ஜயம் பெற்றது. யுத்தமும் ஒரு முடிவையடைந்தது. யுத்தத்தில் காயமடைந்த வீரர்கள் பலரை வரவேற்று ஆண்டர்சன் உபசரித்து அவர்களுடைய அன்பைப் பெற்றார். இக்காரணங்களினால் அவர் சிறிதுகாலம் எழுதாமல் இருந்தார். தேசம் ஒழுங்கு பட்டவுடன் அவர் சில கதைகளை எழுதி முடித்தார். அவைகளும் வழக்கம்போல் பொதுமக்களின் ஆதரவுக்கு உரியவைகளாயின.

மறுபடியும் ஆண்டர்சன் சுவீடன் முதலிய இடங்களுக்குப் போனார். அவர் தம்முடைய பிரயாண காலத்தில் பல நூல்களை எழுதினார். அவைகள் இப்போதும் பிரசித்தி பெற்றவைகளாய் இருக்கின்றன. ஆண்டர்சன் சுவீடனில் உள்ள ஆறுகளையும், ஏரிகளையும். கண்டு ஆனந்தப்பட்டார். சுவீடன் தேசத்தார் ஆண்டர்சனிடம் அளவு கடந்த மரியாதையுடன் நடந்து கொண்டனர்.

ஆண்டர்சன் கதைகளைச் சொல்லிச் சிறுவர்களை மகிழ்வித்து வந்ததோடமையாது காகிதங்களில் பல விதமான உருவங்களைக் கத்தரித்து அவற்றைச் சிறுவர்களுக்குக் கொடுத்தும் அவர்களை மகிழ்வித்து வந்தார். பலவருடங்களாயின. ஆண்டர்சன் வயதில் முதிர்ந்தவரானார். இதற்கிடையில் ஆண்டர்சனுடைய நண்பர்கள் பலர் இறந்து போயினர். ஆண்டர்சனுடைய இளம்பருவத்தில் அவருக்குத் தோன்றாத்துணைவராய் இருந்த ஜோனஸ்காலின் என்பாரும் இறந்து போனார்.

ஆண்டர்சனுடைய பெரும் புகழ் டென்மார்க்குத் தேசத்திலும், அயல் நாடுகளிலும் சிறப்புற்றிருந்தது.

ஆண்டர்சன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில், ‘அவர் எங்களுக்குக் கதை சொல்லுகிறவர்’ என்று சிறுவர்கள் கூறுவாராயினர். சிறுவர்கள்மட்டுமே ஆண்டர்சனை நேசித்தார்கள் என்று நினைக்கவேண்டாம். எல்லோருமே அவரை நேசித்தார்கள். அரசர்களும் அரசிகளும், சீமான்களும் சீமாட்டிகளும் அவரைப் புகழ்ந்தார்கள். அவர்கள் ஆண்டர்சனை அடிக்கடி தங்களுடைய மாளிகைகளுக்கு வரவழைத்து உபசரித்தனர். ஆண்டர்சன் ஏழைகளிடத்திலும், நிலைதவறியவர்களிடத்திலும் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார் என்பதை நாம் சொல்லாமல் இருக்கமுடியாது. அவர் மிருகங்களையும், பறவைகளையும், செடி கொடிகளையுங்கூட நேசித்து வந்தார் என்றே சொல்லவேண்டும். ஆண்டர்சன் தமது வருவாயின் பெரும் பகுதியை ஏழை மக்களுக்காகவே செலவிட்டு வந்தார். அதனால் அவரைப்போன்ற அறிவாளர்களாகிய நாவலரும், பாவலருங்கூட அவரைப் புகழ்ந்து பல பாக்கள் வரைவாராயினர்.

ஆண்டர்சனுடைய நண்பர்கள் ஆண்டர்சனை விட்டுப் பிரிய மனமில்லாதவராயினர். அதனால் அவர்கள் ஆண்டர்சனை அடிக்கடி தங்கள் மாளிகைக்கு வரவழைக்கத் தவறுவதில்லை. அப்போது மனைவி மக்களோடு வாழ்ந்து கொண்டிருந்த ஜோனஸ்காலினுடைய குமாரராகிய ‘எட்வர்டு காலின்’ என்பவரது விருந்தினராக, எட்வர்டுகாலின் விருப்பத்திற் கிணங்கி, அவருடைய வீட்டிற்குத் திங்கட்கிழமை தோறும் ஆண்டர்சன் தவறாது சென்று மகிழ்வார்.

ஆண்டர்சன் சிறுவராய் இருந்தபோது அவர்



கோபன்ஆகனுக்குப் போக விரும்பியதும், அப்போது அவருடைய தாயார் குறி சொல்லுகிறவளை வரவழைத்து ஆலோசனை கேட்டதும், அவள், ‘உங்கள் குமாரர் கோபன்ஆகனுக்குப் போனால் பெருமையடைவார்; அவரால் அவர் பிறந்த ஊர் கௌரவமடையும்’ என்று கூறியதும் வாசகர்கள் நினைவில் இருக்கக் கூடுமென்று நம்புகிறோம். ‘ஆண்டர்சன் பெருமை பெறுவார்’ என்று கூறிய அந்த ஸ்திரீ அறிவுள்ளவள் என்றே சொல்லவேண்டும். இப்போது ஆண்டர்சனைப் பற்றியே ஆடன்ஸ் நகரத்தை எல்லோரும் சிறப்புடையதாக நினைக்கின்றனர். டேனிஷ் மக்கள், ஆண்டர்சன் பிறந்த இடத்தை, அஃது அக்காலத்தில் இருந்தது போலவே, இப்போதும், பெரும்பாலும், ஒழுங்காக வைத்திருக்கின்றனர். ஆடன்ஸ் நகரத்திற்குச் செல்வோர் ஆண்டர்சன் பிறந்த இடத்தைக்கண்டு, ‘இஃது ஆண்டர்சன் பிறந்த இடம்’ என்று சொல்லி மகிழ்கின்றனர். ‘ஆண்டர்சன் இருந்த காலத்தில் திடீரென்று பைத்தியம் பிடித்தவர்களிற் பலர் எதை மறந்தபோதிலும் “ஆண்டர்சன், ஆண்டர்சன்” என்று சொல்லமட்டும் மறக்கவில்லை’ என்று ஒருவர் எழுதியுள்ளார். இதனால் ஆண்டர்சனுடைய பெயர் அவர் காலத்திலேயே எவ்வளவு பிரசித்தி யுடையதாய் இருந்ததெனத் தெரிகிறதன்றோ?

கடைசியாக ஆடன்ஸ்நகரத்து ‘நகர பரிபாலன சபையார்’ ஆண்டர்சனை வரவழைத்து அவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். பிறகு அவ்வாறுசெய்வதற்கு அவர்கள் ஒரு நாளையும் குறிப்பிட்டுக் கொண்டார்கள்.

குறிப்பிட்ட தினத்தில், ஆடன்ஸ் நகரமுழுவதும், நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் எல்லோருக்கும், அவர்கள் வரவேற்புக் கொண்டாட்டத்தில் கலந்து ஆனந்தப் படுவதற்காக, விடுமுறை கிடைத்தது. தங்களுக்கு இன்ப ஊற்றாயிருக்கும் ஆண்டர்சனைச் சிறுவர்கள் எல்லோரும் கண்டுகளிக்க வேண்டுமென்று காத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில், சிறுவர்கள் பெரியவர்கள் உட்பட, பல்லாயிரக் கணக்கான மக்களின் கரகோஷங்களுக்கிடையில், குறிப்பிட்ட விடத்தில், ஆண்டர்சன் வந்து சேர்ந்தார். 'கில்டுஆல்' (Guild Hall) என்னுமிடத்தில், பொது மக்களின் சார்பாக, நகர பரிபாலன சபையார் ஆண்டர்சனுக்குக் கௌரவம் பொருந்திய வரவேற்புப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தனர். அதுகாலை சிறுவர்கள் ஆண்டர்சன்மீது பல பாக்களை இசைத்தனர். அப்போது அரசர் ஆண்டர்சனைப் புகழ்ந்து தந்தியொன்று அனுப்பினார். முக்கியஸ்தர்களான பெருமக்கள் ஒவ்வொருவரும் ஆண்டர்சனைப் புகழ்ந்து பேசினர். பின்னர் அவர்கள் ஆண்டர்சனை, அவருடைய விடுதிக்கு, பெருத்த ஆரவாரத்துடன், ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பரம ஏழையாகப் பிறந்த ஆண்டர்சன் இவ்வாறு உயர்ந்து மகோன்னத பதவியை யடைந்தார்.

கோபன்ஆகனில் ஆண்டர்சனுடைய அறுபதாவது வருடப் பிறந்தநாள் கொண்டாட்டம் மிக விமரிசையாக நிறைவேறியது. அப்போது பெருமக்கள் பலர் அவருக்குப் பலவிதமான வெகுமதிகளை வழங்கினர். ஒவ்வொருவரும் ஆண்டர்சனுடைய



மனத்தில் இன்பத்தை நிரப்பவேண்டுமென்னும் கருத்துள்ளவர்களாயிருந்தனர். அதனால் அவர்கள் அடிக்கடி ஆண்டர்சனுக்குப் பலவிதமான வெகுமதிகளை அனுப்பிக்கொண்டேயிருந்தனர்.

திடீரென்று ஆண்டர்சன் நோயுற்றார். சிறிது குணமானவுடன் அவர் 'சுவிட்ஜர்லந்து'(Switzerland) தேசத்திற்குச் சென்றார். அத்தேசத்தைப் பற்றி, 'இங்குள்ள இயற்கைக்காட்சிகள் நன்றாய் இருக்கின்றன?' என்று ஆண்டர்சன் வரைந்துள்ளார்.

மறுபடியும் ஆண்டர்சன் கோபன்ஆகனுக்கு வந்து சேர்ந்தார். பின்னர் அவர் கோபன்ஆகனை விட்டு எங்கும் செல்லவேயில்லை. வரவர அவருக்குத் தேகபலம் குறைந்தது. அதனால் அவர் எழுதுவதை நிறுத்த வேண்டியவரானார். அவர் தம்மிடம் வருகிற சிறுவர்களுக்கு மட்டும் புதிது புதிதாகப் பல கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

பெருமக்கள் பலர் ஒன்றுசேர்ந்து, தங்கள் செலவில், ஆண்டர்சன் உருவச்சிலை ஒன்றை, அவர் சிறுவர்களுக்குக் கதை சொல்லுவதுபோல் செய்து, ஒரு பொதுவிடத்தில் வைத்தனர். கோபன்ஆகனுக்கு ஆதரவற்று வந்து சேர்ந்த ஆண்டர்சன் தம்முடைய உருவச் சிலையைத் தாமே பார்த்து மகிழக்கூடிய நிலையை அடைந்தார்.

வரவர ஆண்டர்சனுடைய தேகசுகம் குறைந்துகொண்டே வந்தது. அதனால், அவருடைய பலம் குறைந்தது. மரணம் தம்மைச் சமீபித்திருக்கிறதென்று அவர் உணர்ந்தார். அவர் உணர்ந்தது உண்மையாயிற்று. அவர் தம்முடைய எழுபதாவது

வயதில், தம் அழகிய மாளிகையில், நண்பர் பலர் அருகிருக்க, இவ்வுலக வாழ்க்கையை நீத்துச் சென்றார். அவருடைய பிரேதத்தைப் பெருமக்கள் பிரபலமாக அடக்கம் செய்தனர். இதனோடு ஆண்டர்சன் வாழ்க்கை ஒருவாறு முடிவுறுகின்றது.

ஆண்டர்சனுடைய வாழ்க்கை அற்புதமானது. அவர் ஊக்கம் உயர்வுடையது. அவர், தாம் உயர்நிலையை அடையவேண்டும் என்று நினைத்தபடியே உயர்நிலையை அடைந்தார். அவர் பிறந்த நாடு அவரால் பிரபல மடைந்தது. இந்திய நாட்டு மாணவர்கள் ஆண்டர்சனுடைய முயற்சியைப் பின்பற்றுவார்களானால் சிறப்புறுவார்கள் என்பது திண்ணம்.

‘தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.’

முற்றிற்று

Printed at the Guardian Press Ltd., 158-B, Broadway, Madras.